# திருவள்ளுவர்

# திருக்குறள்

## மணக்குடவருரை.

## அறத்துப்பால்.

வ. உ. சிதம்பரம்பிள்ளை,
பிரம்பூர், சென்னை.

# பதிப்புரை

சீரெல்லாம் நிறைந்துவிளங்கும் செந்தமிழ்நூல களிற் சிறந்தது, "திருக்குறள்" என்று வழங்கும் வள்ளுவர் நூல். "தருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர், பரிமே லழகர் பருதி-திருமலையர், மல்லர் கவிப்பெருமாள் காளிங்கர் வள்ளு வர்நூற், கெல்லை உரையெழுதி னோர்." அப்பதின்மர் உரை களில் தற்காலம் தமிழ்நாட்டில் பயின்று வழங்குவது பரிமேலழகருரை ஒன்றே. அவ்வுரையைச் சிலவருடங் களுக்கு முன்னர் யான் படிக்கத் தொடங்கினேன். அப் பொழுது மற்றைய ஒன்பதின்மர் உரைகளையும் பார்க்க வேண்டுமென்னும் அவா எனக்கு உண்டாயிற்று. அது முதல், தமிழ் நூல்கள் இருக்கும் இடங்களில் அவற்றைத் தேடவும் தேடுவிக்கவும் முயன்றேன்.

அம்முயற்சியின் பயனாக எனக்குக் கிடைத்தவற் றில் மணக்குடவ ருரைப்பிரதி ஒன்று. அது வள்ளுவர் கருத்துக்களைத் தெள்ளென விளக்குவ தாகவும், இனிய செந்தமிழ்நடையில் எழுதப்பெற்ற தாகவும் தோன்றிற்று. அதுபற்றி, யான் அதனை அச்சிட்டு வெளிப்படுத்தக் கரு திச் சென்னை அரசாட்சியாரது கையெழுத்துப் புத்தகசா லையிலுள்ள மணக்குடவ ருரைப்பிரதியோடு ஒத்துப்பார்த் தேன். அரசாட்சிப் புத்தகசாலைப்பிரதியில் அதிகாரப் பெயரும் முறையும் பரிமேலழகருரையைப் பின்பற்றி

யிருக்கின்றன. அன்றியும், அதில் சில குறள்களின் மூல மும் உரையும் சிதைந்தும் குறைந்து மிருக்கின்றன.

பின்னர், மஹாமஹோபாத்தியாயர் மகா-ா-ா-ஸ்ரீ. உ. வே. சாமிநாதையரவர்களிடத்துள்ள மணக்குடவ ருரைப்பிரதியைத் தருவித்துப் பார்த்தேன். அது, மேற் கூறிய அரசாட்சிப் புத்தகசாலைப் பிரதியினின்று பிரதி செய்யப்பட்டதாகத் தெரிந்தது. ஆயினும், அதனையும் ஸ்ரீ. சகஜாநந்த சுவாமி யவர்களையும் துணையாகக் கொண்டு, எனது பிரதியில் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரம் என்னும் மூன்றையும் புரிந்து மணக்குடவருரையை ஒரு வாறு பூரணமாக்கி அச்சிற்குக் கொடுத்தேன்.

அங்ஙனம் அச்சாகிவருங்காலையில் சென்னைப் பச்சை யப்பன் கல்லூரி சுதேசபாஷா அத்தியக்ஷகர் ஸ்ரீமான் தி. செல்வகேசவராய முதலியாரவர்களும், சென்னைக் கிரிஸ்டி யன் கல்லூரி சுதேசபாஷா அத்தியக்ஷகர் ஸ்ரீமான் த. கனக சுந்தரம் பிள்ளையவர்களும் அதனைப் பலமுறை பார்த்துச் சீர்படுத்தித் தந்தார்கள். அவர்களது அவ்வுதவியாலும், தென்னாபிரிக்காவிலுள்ள இந்திய சகோதரர்களது பொரு ளுதவியாலும், **அறத்துப்பால்** அச்சாகிமுடிந்து இப்புத்தக வடிவமாக வெளிவருகின்றது.

மணக்குடவரும் பரிமேலழகரும் அதிகார முறை யிற் சிறிதும் குறட்பாக்களின் முறையிற் பெரிதும் வேறு பட்டிருப்பதோடு, பல குறள்களில் வெவ்வேறு பாடங்கள் கொண்டும், பலபல குறள்களுக்கு வெவ்வேறு பொருள்

கள் உரைத்துமுள்ளனர். இவ்வேற்றுமைகளைக் காண்பார் திருக்குறளின் பெருமையையும் அதன் மூலபாடங்கள் வேறுபட்டுள்ள தன்மையையும் நன்கு அறிவதோடு, குறள்களுக்கு இருவரும் உரைத்துள்ள பொருள்களைச் சீர் தூக்கிப்பார்க்கவும் புதிய பொருள்கள் உரைக்கவும் முயலுவர். அவர் அவ்வாறு செய்யவேண்டுமென்னும் விருப்பமே, யான் இவ்வுரையை அச்சிடத் துணிந்ததற்கு முக்கிய காரணம்.

ஆண்பாலாரும் பெண்பாலாருமான வித்தியார்த்திகள் இந்நூலை எளிதில் கற்குமாறு இதன் மூலத்தையும் உரையையும் மணக்குடவர் கருத்திற்கு இயைந்தபடி சந்தி பிரித்துப் பதிப்பித்துள்ளேன். உரையில் யான் சேர்த்த எனது சொந்தச்சரக்குகளை [ ] இவ்வித இணைப்பகரக் குறிகளுக்குள் அமைத்துள்ளேன். இப்பதிப்புரையின் பின்னர் அறத்துப்பாலின் அதிகார அட்டவணை யொன்று சேர்த்துள்ளேன். குறள்களின் முதற் குறிப்பகராதி முதலியன நூலின் முடிவில் சேர்க்கப்படும்.

இந்நூலை யான் அச்சிடுதல் சம்பந்தமாக மஹாமஹோபாத்தியாயர் மகா-ள-ள-ஸ்ரீ. உ. வே. சாமிநாதையரவர்களும், ஸ்ரீ. சகஜாநந்த ஸ்வாமியவர்களும், ஸ்ரீமான் தி. செல்வகேசவராய முதலியாரவர்களும், ஸ்ரீமான் த. கனகசுந்தரம் பிள்ளையவர்களும், தென் ஆபிரிக்காவிலுள்ள இந்தியசகோதரர்களும் எனக்குச் செய்த மேற்குறித்த நன்றிகள் "காலத்தினாற்செய்த" வையும் "எழு

மை எழுபிறப்பும்" உள்ளத்தக்கவையுமாகும்.

இந்நாலின் ஒவ்வொரு பாலும் அச்சாகி முடிந்தவுடன் வெளிவருதல் நலமென்று எனக்கு இப்பொழுது தோன்றுவதனால், இன்றுவரையில் அச்சாகி முடிந்திருக்கிற அறத்துப்பாலை இப்பொழுது வெளியிடுகின்றேன். பொருட்பாலும் காமத்துப்பாலும் விரைவில் அச்சாகி வெளிவரும்.

இந்நூலை யான் அச்சிடத்தொடங்கிய பின்னர்க் காகிதத்தின் விலை மிக ஏறிவிட்டதால், இதற்கு முன் குறித்த விலை ரூபா இரண்டை ரூபா மூன்றாக ஏற்றி, அதனை அறத்துப்பாலுக்கு ரூபா 1-0-0 ம், பொருட்பாலுக்கு ரூபா 1-4-0 ம், காமத்துப்பாலுக்கு ரூபா 0-12-0 மாக விதானம் செய்துள்ளேன்.

திருவள்ளுவர் திருக்குறளைக் கற்கும் ஒவ்வொருவரும், தத்தமக்குக் கிடைக்கும் உரைகளைத் துணையாக வைத்துக்கொண்டு, குறள்களின் பொருள்களைத் தாமே ஆராயவேண்டுமென்பது என் விருப்பம். பரிமேலழகருரையையும் அதன் வழிவந்த உரைகளையும் தவிர வேறு உரைகளை யாரேனும் காண்பாராயின், அவ்விவரத்தை எனக்குத் தெரிவிக்குமாறு அவர்களை வேண்டிக்கொள்ளுகிறேன்.

பிரம்பூர், சென்னை.
பிங்கள ஹூ
சித்திரை மீ 13 உ.

**வ. உ. சிதம்பரம் பிள்ளை.**

# அறத்துப்பாலின் அதிகார அட்டவணை.


| அதிகாரம். | | பக்கம். |
|---|---|---|
| | **பாயிரம்** | |
| க | கடவுள் வாழ்த்து | க |
| உ | வான் சிறப்பு | ரு |
| ௩ | நீத்தார் பெருமை | அ |
| ச | அறன் வலியுறுத்தல் | கஉ |
| | **இல்லறவியல்** | |
| ரு | இல்வாழ்க்கை | கசா |
| சா | வாழ்க்கைத்துணைநலம் | உ0 |
| எ | மக்கட்பேறு | உச |
| அ | அன்புடைமை | உஎ |
| கூ | விருந்தோம்பல் | ௩க |
| க0 | வாய்மையுடைமை | ௩ச |
| கக | செய்ந்நன்றியறிதல் | ௩அ |
| கஉ | நடுவுநிலைமை | சஉ |
| க௩ | பொறையுடைமை | சரு |
| கச | ஒழுக்கமுடைமை | சகூ |
| கரு | பிறனில் விழையாமை | ருஉ |
| கசா | வெகுளாமை | ருசா |
| கஎ | இன்னாசெய்யாமை | ருகூ |
| கஅ | கொல்லாமை | சாஉ |

## அறத்துப்பாலின் அதிகார அட்டவணை


| | | |
|---|---|---|
| ககூ | புலான் மறுத்தல் | சாரு |
| உ0 | கள்ளாமை | சாகூ |
| உக | தீவினையச்சம் | எஉ |
| உஉ | ஒப்புரவறிதல் | எங |
| உங | ஈகையுடைமை | எகூ |
| உச | புகழுடைமை | அங |


## துறவறவியல்


| | | |
|---|---|---|
| உரு | அருளுடைமை | அஎ |
| உசா | இனியவைகூறல் | கூ0 |
| உஎ | அடக்கமுடைமை | கூச |
| உஅ | தவமுடைமை | கூஎ |
| உகூ | கூடாவொழுக்கம் | க0க |
| ங0 | அழுக்காறுமை | க0ரு |
| ஙக | வெஃகாமை | க0கூ |
| ஙஉ | புறங்கூறுமை | ககங |
| ஙங | பயனில சொல்லாமை | ககசா |
| ஙச | நிலையாமை | கஉ0 |
| ஙரு | துறவுடைமை | கஉச |
| ஙசா | மெய்யுணர்தல் | கஉஎ |
| ஙஎ | அவாவறுத்தல் | கஙஉ |


## ஊழியல்


| | | |
|---|---|---|
| ஙஅ | ஊழ் | கஙசா |

திருவள்ளுவர்

# திருக்குறள்.

மணக்குடவருரை.

## அறத்துப்பால்.

### பாயிரம்.

[பாயிரமாவது, நூன்முகம்.]

### முதலாவது.—கடவுள் வாழ்த்து.

[கடவுள் வாழ்த்தாவது, கடவுளை வாழ்த்தும் வாழ்த்து.]

அகர முதல எழுத்தெல்லாம்; ஆதி
பகவன் முதற்றே உலகு.

இதன் பொருள்:—எழுத்தெல்லாம் அகரம் முதல - எழுத்துக் களெல்லாம் அகரமாகிய எழுத்தைத் தமக்கு முதலாக உடையன; (அவ்வண்ணமே), உலகு ஆதிபகவன் முதற்று - உலகம் ஆதியாகிய பகவனைத் தனக்கு முதலாக உடைத்து.

உலககாரணன் ஆதிபகவ னென்றார்.

கற்றதனு லாய பயனென்கொல், வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்?

இ - ள் :—கற்றதனால் ஆய பயன் என் -(மேற்கூறிய எழுத்தினாலாகிய சொற்களையெல்லாம்) கற்றதனாலாகிய பயன் (வேறு)யாது, வால் அறிவன் நல் தாள் தொழார் எனின் - விளங்கின அறிவினையுடையவன் திருவடியைத் தொழாராயின்? [கொல் - அசை.]

சொல்லினாலே பொருள் அறியப்படுமாதலான், அதனைக் கற்கவே மெய்யுணர்ந்து வீடு பெறலாகும். "கற்பக் கழிமட மஃகும்" என்றாரு முளர்.

மீண்டும் வணக்கம் கூறிய தேற்றுக் கென்றார்க்கு, கற்றதனால் பயன் இது வென்பதூஉம், வேறு வேறு பயன் இல்லை யென்பதூஉம் கூறிற்று. உ.

மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்,
நிலமிசை நீடுவாழ் வார்.

இ - ள் :—மலர்மிசை ஏகினான் மாண் அடி சேர்ந்தார் - மலரின் மேல் நடந்தானது மாட்சிமைப்பட்ட திரு வடியைச் சேர்ந்தவரன்றே, நிலமிசை நீடு வாழ்வார் - நிலத்தின்மேல் நெடுங்காலம் வாழ்வார். [சேர்ந்தவரன்றே - சேர்ந்தவரே. அன்று - அசை.]

நிலமென்று பொதுப்படக் கூறியவதனான், இவ்வுலகின்கண்ணும் மேலுலகின்கண்ணும் என்றுகொள்ளப்படும்.

'தொழுதாற் பயன் என்னை' என்றார்க்குப் போகம்நுகர்தலும் வீடுபெறுதலும் என்றுகூறுவார், முற்படப் போகம் நுகர்வாரென்றுகூறினர். ௩.

தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்,
மனக்கவலை மாற்றல் அரிது.

இ - ள் :—தனக்கு உவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கு அல்லால் - தனக்கு நிகரில்லாதானது திருவடியைச் சேர்ந்தவர்க் கல்லது (ஒழிந்த பேர்களுக்கு), மனக்கவலை மாற்றல் அரிது - மனத்து உண்டாம் கவலையை மாற்றுதல் அரிது. [நிகர் - ஒப்பு.]

# கடவுள் வாழ்த்து

வீடுபெறலாவது, அவலக் கவலைக் கையாற்றின் நீங்கிப் புண்ணிய பாவ மென்னும் இரண்டினையும் சாராமல், சாதலும் பிறத்தலு மில்லாததொரு தன்மையை யெய்துதல். [அவலம் - இலேசம். கையாறு - துன்பம்].

வீடு பெறுமென்பார் முற்படக் கவலை கெடுமென்றார், அதனால் எல்லாத் துன்பமும் வருமாதலின். ௪.

அறவாழி யந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்,
பிறவாழி நீந்தல் அரிது.

இ-ள் —அற ஆழி அந்தணன் தாள் சேர்ந்தார்க்கு அல்லால் - அறமாகிய கடலை யுடைய அந்தணனது திருவடியைச் சேர்ந்தவர்க் கல்லது (ஒழிந்த பேர்களுக்கு), பிற ஆழி நீந்தல் அரிது - பிற ஆழியை நீந்தல் ஆகாது. [பிற ஆழி - காமமும் பொருளும்.]

அவலம் நீங்கப்பெறுதல் அரிது என்றவாறு.

இது, காமமும் பொருளும் பற்றிவரும் அவலம் கெடு மென்றது. ௫.

**வேண்டுதல் வேண்டாமை யில்லான் அடிசேர்ந்தார்**
**யாண்டும் இடும்பை யிலர்.**

இ-ள் —வேண்டுதல் வேண்டாமை இல்லான் அடி - இன்பமும் வெகுளியும் இல்லாதானது திருவடியை, சேர்ந்தார - சேர்ந்தவர, யாண்டும் இடும்பை இலா - எவ்விடத்தும் துன்பம் இல்லாதவர.

காமமும் கோபமும் ஆகா என்றற்கு "வேண்டுதல் வேண்டாமை யில்லான்" என்று பெயரிட்டார. [இன்பமும் வெகுளியும் - காமமும் கோபமும்].

இது, கையாறு கெடுமென்றது. ௬.

**இருள்சேர் இருவினையுஞ் சேரா, இறைவன்**
**பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.**

இ - ள்.—இருள்சேர் இருவினையும் சேரா - மயக்கத்தைச் சேர்ந்த நல்வினை தீவினை யென்னும் இரண்டு வினைகளும் சேரா, இறைவன் பொருள் சேர் புகழ் புரிந்தார் மாட்டு - தலைவனதாகிய மெய்ப்பொருள் சேர்ந்த புகழ்ச்சிச் சொற்களைப் பொருந்தினார் மாட்டு.

இது, புண்ணிய பாவங்கள் சேராவென்றது. எ.

**பொ**றிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார், நீடுவாழ் வார்.

இ - ள்.—பொறிவாயில் ஐந்து அவித்தான் - (மெய் - வாய் - கண் - மூக்கு - செவி என்னும் ஐம்) பொறிகளின் வழியாக வரும் (ஊறு - சுவை - ஒளி - நாற்றம் - ஓசை என்னும்) ஐந்தின் கண்ணும் செல்லும் மனநிகழ்ச்சியை அடக்கினனது, பொய்தீர் ஒழுக்க நெறி நின்றார் - பொய்யற்ற ஒழுக்க நெறியிலே நின்றாரன்றே, நீடுவாழ் வார் - நெடிதுவாழ்வார்.

இது, சாவு இல்லை யென்றது. அ.

**பி**றவிப் பெருங்கடல் நீந்துவார்; நீந்தார்
இறைவனடி சேரா தவர்.

இ - ள் —(இறைவனை அடி சேர்ந்தவர்) பிறவிப் பெருங்கடல் நீந்துவார் - இறைவனது அடியைச் சேர்ந்தவர் பிறவியாகிய பெரிய கடலை நீந்தி யேறுவார், இறைவன் அடி சேராதார் நீந்தார் - இறைவனது அடியைச் சேராதவர் அதனுள் அழுந்துவார்.

இது, பிறவி இல்லை யென்றது. கூ.

**கோ**ளில் பொறியின் குணமிலவே, எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை.

இ - ள்.—கோள் இல் பொறியின் - அறிவு இல்லாத (பொறிகளையுடைய) பாவைகள்போல, குணம் இல - ஒரு குணமும் உடைய

னவல்லை, எண்குணத்தான் தாளை - எட்டுக் குணத்தினை யுடையவன் திருவடியினை, வணங்காத் தலை - வணங்காத தலையினையுடைய உடம்புகள். [வணங்காத என்பது அடைகட்டி நின்றது.]

அவை உயிருண்டாகில் வணங்கும். அவை வணங்காமையால், அவற்றை இழித்து உடம்புகளென்றார்.

இது, வணங்காத உடம்புகள் பிணங்களென்றது. ௧0.

## உ-வது.—வான் சிறப்பு.

வான் சிறப்பாவது மழையினது தலைமை. இது கடவுட்செய்கைத் தாதலான், அதன்பின் கூறப்பட்டது. இஃது ஈண்டுக் கூறியது என்னையெனின், பின் உரைக்கப்படுகின்ற இல்லறமும் துறவறமும் இனிது நடப்பது மழையுண்டாயின் என்றற்குப் போலும். அன்றியும், வானத்தின் பொருட்டு வணக்கம் கூறினா ரெனினும் அமையும்.

சிறப்பொடு பூசனை செல்லாது, வானம்
வறக்குமேல், வானோர்க்கும் ஈண்டு.

இ - ள் —வானோர்க்கும் ஈண்டு சிறப்பொடு பூசனை செல்லாது- தேவர்க்கும் இங்குச் சிறப்புச் செய்யப்படுகின்ற விழவு பூசனை நடவாது, வானம் வறக்குமேல் - வானம் புலருமாகில்.

மழை பெய்யாக்கால் வரும் குற்றம் கூறுவார், முற்பட (நால்வகைப்பட்ட அறங்களில்) பூசை கெடு மென்றார். ௧௧.

தானம் தவம்இரண்டும் தங்கா வியனுலகம்,
வானம் வழங்கா தெனின்.

இ - ள் :—வியன் உலகம் - அகன்ற உலகத்துக்கண், தானம் தவம் இரண்டும் தங்கா - தானமும் தவமு மாகிய இரண்டறங்களும் உளவாகா, வானம் வழங்காதெனின் - மழை பெய்யாதாயின்.

இது, தானமும் தவமும் கெடு மென்றது. ௧௨.

நீரின் றமையா துலகெனின், யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு.

இ - ள் :—நீர் இன்று உலகு அமையாது எனின் - நீரையின்றி உலகம் அமையாதாயின், யார் யார்க்கும் வான் இன்று ஒழுக்கு அமையாது - யாவர்க்கும் மழையையின்றி ஒழுக்கம் உண்டாகாது.

ஒழுக்கம் - விரதம். [அமைதல் - நிரம்புதல்.]

இஃது, ஒழுக்கம் கெடு மென்றது. இவைமூன்றினாலும் நாலறமும் கெடு மென்று கூறினர். கங.

விண்ணின்று பொய்ப்பின், விரிநீர் வியனுலகத்
துண்ணின் றுடற்றும் பசி.

இ - ள் :—விண் நின்று பொய்ப்பின் - வானமானது நிலைநிற்கப் பொய்க்குமாயின், விரி நீர் வியன் உலகத்துள் - விரிந்த நீரினையுடைய அகன்ற உலகத்திடத்தே, பசி நின்று உடற்றும் - பசியானது நின்று வருத்தாநிற்கும் (எல்லா உயிர்களையும்).

பொய்த்தல் - தன் தொழில் மறுத்தல். [நிலைநிற்க-நிலையாக.]

இது, பசியென்று பொதுப்படக் கூறியவதனால், மக்களும் விலங்குகளும் பொருளையும் காமத்தையும் துய்க்கலாற்றாது துன்பமுறுமென்று கூறிற்று. கச.

விசும்பின் துளிவீழின் அல்லால்,மற் றுங்கே
பசும்புல் தலைகாண் பரிது.

இ - ள் :—விசும்பின் துளி வீழின் அல்லால் - வானின்று துளி வீழின் அல்லது, ஆங்கு பசும் புல் தலை காண்பு அரிது - அவ்விடத்துப் பசுத்த புல்லினது தோற்றத்தையும் காண்டல் அரிது.

'ஆங்கு' என்பதனை அசையாக்கினும் அமையும். [மற்று-அசை.]

இஃது, ஓரறிவுயிரும் கெடு மென்றது. கரு.

**ஏரின் உழாஅர் உழவர், புயலென்னும்**
**வாரி வளங்குன்றிக் கால்.**

இ-ள்:—உழவர் ஏரின் உழார் - உழவர் ஏரின் உழுதலைத் தவிர்வார், புயல் என்னும் வாரி வளம் குன்றியக்கால் - புயலாகிய வாரியினுடைய வளம் குறைந்தகாலத்து. [யகரம் கெட்டது.]

இஃது, உழவர் இல்லையென்றது. கசு.

**நெடுங்கடலும் தன்னீர்மை குன்றும், தடிந்தெழிலி**
**தானல்கா தாகி விடின்.**

இ-ள்:—நெடும் கடலும் தன் நீர்மை குன்றும்-(நிலமேயன்றி) நெடிய கடலும் தனது தன்மை குறையும், தடிந்து எழிலி நல்காதாகிவிடின் - மின்னி மழையானது பெய்யாவிடின். [தான் - அசை.]

'தடிந்து' என்பதற்குக் 'கூறுபடுத்து' என்று பொருளுரைப்பாரு முளர்.

இது, நீருள் வாழ்வனவும் படுவனவும் கெடுமென்றது. இவை நான்கினாலும் பொருட்கேடு கூறினார். பொருள் கெட இன்பம் கெடுமென்பதனால், இன்பக்கேடு கூறிற்றிலர். கஎ.

**கெடுப்பதும் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே**
**எடுப்பதும் எல்லாம் மழை.**

இ-ள்:—எல்லாம் கெடுப்பதும் - (தான் பெய்யாது) எல்லாப் பொருள்களையும் கெடுப்பதும், கெட்டார்க்குச் சார்வாய் - அவை கெடப்பட்டார்க்குத் துணையாய், எல்லாம் ஆங்கே எடுப்பதும் மழை - (தான் பெய்து) பொருள்களெல்லாவற்றையும் அவ்விடத்தே உண்டாக்குவதும் மழை.

இஃது, இவ்விரண்டினையும் செய்யவற்றென்றது. கஅ.

**துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்**
**துப்பாய தூஉம் மழை.**

இ - ள் :—துப்பார்க்கு துப்பாய துப்பு ஆக்கி - (பிறவற்றை) உண்பார்க்கு அவர் உண்டற்கான உணவுகளையும் உண்டாக்கி, துப்பார்க்கு துப்பாவதும் மழை - (தன்னை) உண்பார்க்குத் தானே உணவாவதும் மழை.

இது, பசியைக் கெடுக்கு மென்றது. ௧௯.

**வா**னின் றுலகம் வழங்கி வருதலால்,
தானமிழ்தம் என்றுணரும் பாற்று.

இ - ள்:—வான் நின்று உலகம் வழங்கி வருதலால்-மழைவளம் நிலைநிற்றலானே உலகநடை தப்பாது வருதலான், தான் அமிழ்தம் என்று உணரும் பாற்று-அம்மழைதான் (உலகத்தார்)அமுத மென்று உணரும் பகுதியது.

இஃது, அறம் பொருள் இன்பங்களை உண்டாக்குதலானும், பல வகைப்பட்ட உணவுகளை நிலைநிறுத்தலானும், தானே உண வாதலானும் மழையினை மற்றுள்ள பூதமாத்திரையாக நினைக்கக் கூடாதென்று அதன் நிலைமை கூறிற்று. ௨0.

## ௩-வது.—நீத்தார் பெருமை.

நீத்தார் பெருமையாவது துறந்த முனிவரது பெருமை. இது, கடவுளரை வணங்கினாற்போல முனிவரையும் வணங்கவேண்டு மென் பதனானும், மழையையும் அவர் அடக்கத்தக்கவ ரென்ற கருத்தினா னும், அவையிற்றின்பின் கூறப்பட்டது.

**ஒ**ழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவல் துணிவு.

இ - ள்:—ஒழுக்கத்து நீத்தார் பெருமை - ஒழுக்கத்தின் பொ ருட்டு (எல்லாப் பொருள்களையும்) துறந்தாரது பெருமையை, பனு வல் துணிவு விழுப்பத்து வேண்டும் - நூல்களின் துணிவு விழுப்பத் தின் பொருட்டு வேண்டும். [விழுப்பம் - மேன்மை].

# நீத்தார் பெருமை

யாதானும் ஒரு பொய்யைச் சொல்லும் நூலும், தன்னை எல்லாரும் கொண்டாடுதற்காகத் துறந்தார் பெருமையை நன்குமதித்துக் கூறும். அதனானே, யானும் சொல்லுகின்றேனென்றது இது. உக.

துறந்தார் பெருமை துணைக் கூறின், வையத்
திறந்தாரை யெண்ணிக்கொண் டற்று.

இ-ள்.—துறந்தார் பெருமை துணை கூறின் - (காமம் முதலாகத்) துறந்தாரது பெருமைக்கு அளவு கூறின், வையத்து இறந்தாரை எண்ணிக்கொண்டால் அற்று - உலகத்துப் பிறந்திறந்தார் இத்துணையரென்று எண்ணி யறியலுற்றாற் போலும். [ஆல் கெட்டது.]

அவர்பெருமைக்கு எல்லை கூறுதல் அரிதாயினும், சில சொல்லப் புகாநின்றேனென்றது இது. உஉ.

உரனென்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்,
வரனென்னும் வைப்புக்கோர் வித்து.

இ-ள்.—உரன் என்னும் தோட்டியான் ஓர் ஐந்தும் காப்பான்- அறிவாகிய தோட்டியானே பொறியாகிய ஒப்பற்ற யானை ஐந்தினையும் (புலன்களில் செல்லாமல்) மீட்பவன், வரன் என்னும் வைப்புக்கு ஓர் வித்து - மேலாகிய இடத்தே ஆதற்கு (இவ்விடத்தே இருப்பதாகிய) ஒரு வித்து.

அவன் பெருமை சொல்லுவார், முற்பட அவன் மக்கட்டன்மையனாய் இவ்வுலகின்கண் வாழ்பவன் அல்லன், தேவருள் ஒருவன் என்று கூறினார். உங.

சுவையொளி ஊறோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு.

இ-ள்:—சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்று ஐந்தின் வகை - சுவை முதலாகக் கூறிய ஐந்து புலன்களின் வகையை, தெரிவான் கட்டே உலகு - ஆராய்வான் கண்ணதே உலகம்.

எனவே, இவற்றின் காரியம் வேறொன்றாகத் தோன்றுமன்றே; அதனை அவ்வாறு கூறுபடுத்துக் காண அவற்றின் காரணமும் தோற்றும்.

[வேறொன்றாக - உலகமாக. அவ்வாறு - அவ்வைந்து புலன்களாக. அவற்றின் காரணம் - அவ்வைந்து புலன்களையும் உணரும் அறிவு.]

ஆதலால், உலகம் அறிவான்கண்ணதா மென்றார். ௨௪.

ஐந்தவித்தான் ஆற்றல், அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலும் கரி.

இ-ள்:—ஐந்து அவித்தான் ஆற்றல் - நுகர்ச்சியாகிய ஐந்தனையும் துறந்தானது வலிக்கு, அகல் விசும்பு உளார் கோமான் இந்திரனே சாலும் கரி - அகன்ற விசும்பி லுள்ளார்க்கு நாயகனாகிய இந்திரனே அமையும் சான்று.

இந்திரன் சான்றென்றது, இவ்வுலகின்கண் மிகத் தவம்செய்வார் உளராகில் அவன் தன் பதம் இழக்கின்றானாக நடுங்குமாதலான்.

இது, தேவரினும் ஐந்தவித்தான் வலியனென்றது. ௨௫.

இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு

இ-ள்:—இருமை வகை தெரிந்து - பிறப்பும் வீடும் என்னும் இரண்டினது கூறுபாட்டை ஆராய்ந்து, ஈண்டு அறம் பூண்டார் - இவ்விடத்தே துறவறத்தை மேற்கொண்டவரது, பெருமை உலகில் பிறங்கிற்று: பெருமை உலகத்தில் மிக்கது. [மிக்கது - மேம்பட்டது.]

இஃது, எல்லாரானும் அவர் பெருமை போற்றப்படு மென்றது. ௨௬.

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.

இ - ள் .—நிறை மொழி மாந்தா பெருமை - நிரம்பிய கல்வியையுடைய மாந்தரது பெருமையை, நிலத்து மறை மொழி காட்டி விடும் - அவரால் சொல்லப்பட்டு நிலத்தின்கண் வழங்காநின்ற மந்திரங்களே காட்டும்.

இஃது, அவராணை நடக்குமென்று கூறிற்று. உஎ.

குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயும் காத்தல் அரிது.

இ - ள் —குணம் என்னும் குன்று ஏறி நின்றா வெகுளி - குணமாகிய மலையை மேற்கொண்டு நின்றாமாட்டு உளதாகிய வெகுளியால் வரும் தீமையை, கணமேயும் காத்தல் அரிது - சிறிதுபொழுதாயினும் வாராமல் காத்தல் அரிது.

அவா சாபத்தால் நகுடன் பாம்பாயினும்

இஃது, அவா வெகுளியைப் பொறுத்தல் அரிதென்று கூறிற்று. உஅ.

செயற்கரிய செய்வார் பெரியர் ; சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

இ - ள் .—செயற்கு அரிய செய்வா பெரியா - செய்தற்கு அரியனவற்றைச் செய்வாா பெரியோரென்று சொல்லப்படுவாா, செயற்கு அரிய செய்கலாதாா சிறியர் - அவற்றைச் செய்யமாட்டாதாா (துறந்தாராயினும்) சிறியோரென்று சொல்லப்படுவர்.

செயற்கரியன, இயமம் நியமம் முதலாயின.

இவ்வதிகாரம் "நீத்தாா பெருமை" என்னப்பட்டதாயினும், நீத்த மாத்திரத்தானே பெரியரென்று கொள்ளப்படார், செயற்கு அரியனவற்றைச் செய்வாரே பெரியரென்று கொள்ளப்படுவர்

என்று இது கூறிற்று. ௨௯.

அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்.

இ - ள்:—அந்தணர் என்போர், அறவோர் - அந்தணரென்போரும் துறந்தோராகக் கொள்ளப்படுவர், எவ் உயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகலான் - அவர் எல்லா உயிர்க்கும் செவ்விய தட்பம்செய்தலை மேற்கொண்டு ஒழுகலானே. [மற்று - அசை.]

மேல், துறந்தவர்களினும் சிறியர் உளரென்று கூறினார். ஈண்டு, துறவாதாரினும் பெரியர் உளரென்று கூறினார். இவை எட்டானும் துறந்தார் பெருமை கூறப்பட்டது. ௩௦.

## ௪-வது.— அறன் வலி யுறுத்தல்.

அறன்வலியுறுத்தலாவது, அறம் வலிமையுடைத் தென்பதனை அறிவித்தல். இதனானே அறத்துப்பாலை முன்கூறுதற்குக் காரணம் சொன்னாருமாம். இது, மேற்கூறிய முனிவரால் கொண்டுய்க்கப்படுதலின் பின் கூறப்பட்டது.

சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்
காக்கம் எவனோ உயிர்க்கு?

இ - ள்.—சிறப்பு ஈனும் செல்வமும் ஈனும் - முத்தியும் தரும செல்வமும் தருமாதலால், அறத்தின் ஊங்கு உயிர்க்கு ஆக்கம் எவன் - அறத்தின்மேல் உயிர்கட்கு ஆக்கம் தருவது யாது? [ஓ - அசை.]

பொருளான் ஆக்கம் உண்டென்பாரை மறுத்து, அறனே அதனை உண்டாக்கும் வலியுடைத்தென்று இது கூறிற்று. ௩௧.

ஒல்லும் வகையால் அறவினை யோவாதே
செல்லும்வா யெல்லாம் செயல்.

# அறன் வலியுறுத்தல்

இ - ள் .—ஒல்லும் வகையான் - தமக்கு இயலும் திறத்தானே, அறவினை ஓவாதே - அறவினையை ஒழியாதே, செல்லும் வாய் எல்லாம் செயல் - செய்யலாம் இடமெல்லாம் செய்க.

இயலும் திறம் - மனம் மொழி மெய்களும் பொருளும். செல்லும் வாய் - அறம் செய்தற்குத் தக்க பல இடங்களும். ஒழியாதே - நாள்தோறும்.

அறம் வலிதென்று அறிந்தவர்கள் அதனை இவ்வாறு செய்க என்று கூறிற்று இது. ௩௨.

அன்றறிவாம் என்னா தறஞ்செய்க : மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை.

இ - ள் .—அன்று அறிவாம் என்னாது அறம் செய்க - பின்பே அறிந்து செய்வோம் என்னாது முன்பே அறத்தைச் செய்க : அது பொன்றுங்கால் பொன்றா துணை-அது சாம் காலத்திலும் சாகாதே நின்று பிறக்கும் இடத்திற்குத் துணையாம்.

இஃது, அறம் செய்யுங்கால் விரைந்து செய்யவேண்டுமென்றும், அது மறுமைக்குத் துணையாமென்றும் கூறிற்று. ௩௩.

அறத்தா றிதுவென வேண்டா ; சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தான் இடை.

இ - ள் —அறத்து ஆறு இது என வேண்டா - அறத்தின்பயன் இத்தன்மைத் தென்று நீங்கள் (கேள்வியால்) அறியவேண்டா , சிவிகை பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை - சிவிகையைக் காவுவானோடு செலுத்துவானிடை (க்காட்சியால்) அறியலாம்.

பொன்றினும் துணையாகுமோ என்றார்க்குத் துணையாயவாறு காட்டிற்று இது. ௩௪.

அறத்தான் வருவதே யின்பம்; மற்றெல்லாம்
புறத்த புகழும் இல.

இ - ள் :—அறத்தான் வருவதே இன்பம் - அறத்தால் வருவது (யாதொன்று அது) வே இன்பமும் புகழுமாம் : மற்று எல்லாம் புறத்த புகழும் இல - அதனாலன்றி வருவனவெல்லாம் துன்பமாம் புகழும் இலவாம்.

எல்லாப் போகநுகர்ச்சியும் இதனானே வருமென்றது. ௩௫.

வீழ்நாள் படாஅமை நன்றாற்றின், அஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்கும் கல்.

இ - ள் .—வீழ்நாள் படாமை நன்று ஆற்றின் - ஒரு நாள் இடைவிடாமல் நன்மையைச் செய்வானாயின், அஃது - அச்செயல், ஒருவன் வாழ்நாள் வழி அடைக்கும் கல் - ஒருவனது பிறப்பும் இறப்புமாகிய நாள் வருகின்ற வழியை அடைப்பதோர் கல்லாம்.

இது, வீட்டைத் தருமென்றது. ௩௬.

செயற்பால தோரும் அறனே ; ஒருவற்
குயற்பால தோரும் பழி.

இ - ள் . - ஒருவற்கு செயல் பாலது அறனே - ஒருவனுக்குச் செய்யும் பகுதியது அறமே ; உயல் பாலது பழி - தப்பும் பகுதியது பழியே.

மேல், அறம் செய்யப் பிறப்பறு மென்றார், அதனோடு பாவஞ் செய்யின் அறமொன்றதற்கு இது கூறினார் ௩௭.

அறத்தினூங் காக்கமும் இல்லை : அதனை
மறத்தலினூங் கில்லையாம் கேடு.

இ - ள் :— அறத்தின் ஊங்கு ஆக்கமும் இல்லை - (ஒருவனுக்கு) அறம் செய்தலின் மேற்பட்ட ஆக்கமும் இல்லை ; அதனை மறத்தலின் ஊங்கு கேடு இல்லை - அதனைச் செய்யாமையின் மேற்பட்ட கேடும் இல்லை. [ஆம் என்பது அசை.]

இது, அறம் செய்யாக்கால் கேடு வருமென்று கூறிற்று. ௩௮.

**அ**ழுக்கா றவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்ற தறம்.

இ - ள்:—அழுக்காறு - மனக்கோட்டமும், அவா - ஆசையும், வெகுளி - வெகுளியும், இன்னாச்சொல் - கடுஞ்சொல்லும், நான்கும் இழுக்கா - என்னும் நான்கினையும் ஒழித்து, இயன்றது அறம் - நடந்த (அது யாதொன்று) அஃது அறமென்று சொல்லப்படும்.

பின்னர்ச் செய்யலாகா தென்று இந்நூல் கூறுவனவெல்லாம் இந்நான்கினுள் அடங்குமென்றும், அறம் எத்தன்மைத்தென்றும் இது கூறிற்று. ௩௫.

**ம**னத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்;
ஆகுல நீர பிற.

இ - ள் —மனத்துக்கண் மாசிலனாதல் - (ஒருவன் தன்) மனத்தின்கண் குற்றமிலனாதலே, அனைத்து அறன்-எல்லா அறமுமாம். பிற ஆகுல நீர - (அதில் குற்றமுண்டாயின்) மேல் செய்வனவெல்லாம் ஆரவார நீர்மையன.

பிறர் அறியவேண்டிச் செய்தானாமென்றாயிற்று. மேல் நாலு பொருளைக் கடியவேண்டுமென்றார். அவை நான்கும் மனமொன்றும் தூயதாகப் போமென்று அதன்பின் இதனைக் கூறினார். ௪0.

# இல்லறவியல்

இல்லறமாவது இல்லின்கண் இருந்து தானம் முதலாயின செய்தல். அது கூறிய அதிகாரம் இருபதினும், **இல்வாழ்வான் வாழுந் திறம்** ஓரதிகாரத்தானும், அதற்குத் துணையான **மனைவியிலட்சணம்** ஓரதிகாரத்தானும், அதன்பின் இல்லறப்பகுதியான பிரம்மசரியம் காருகத்தம் என்னும் இரண்டினுள்ளும் பிரமசரியத்திற்கு ஆதாரமாகிய **மக்கட்பேறு** ஓரதிகாரத்தானும் கூறி; காருகத்த இலட்சணம் கூறுவாராகி, நல்கூர்ந்தார் நல்குரவினீங்கியார் செல்வர் வள்ளியோர் என்னும் நால்வரினும் **அன்புடைமை** முதலாக **ஒழுக்கமுடைமை** ஈறாக நல்கூர்ந்தாரால் செய்யப்படுவன ஏழும், **பிறனில்விழையாமை** முதலாகத் **தீவினையச்சம்** ஈறாக இவரால் தவிரப்படுவன ஏழும் பதினாலதிகாரத்தாற் கூறி; இவற்றோடுங்கூட **ஒப்புரவறிதல்** நல்குரவினீங்கினாரால் செய்யப்படுமென்றுகூறி; இவற்றோடுங்கூட **ஈகை** செல்வரால் செய்யப்படுமாறு கூறி; இவற்றோடுங்கூடப் **புகழ்** வள்ளியோரால் செய்யப்படுமென்று கூறினாராகக் கொள்ளப்படும். இல்லறம் முற்படக் கூறியது, துறவறத்தில் நின்றாரையும் ஓம்புதல் இல்வாழ்வான் கண்ணதாதலான்.

## ரு-வது.— இல் வாழ்க்கை.

இல்வாழ்க்கையாவது, இல்லின்கண் இருந்து வாழ்வார் வாழுந் திறன். மேல் அறம்செய்க என்றார், இது முதலாக அறம் செய்யுமாறு கூறுகின்றாராதலின், இஃது அதன்பின் கூறப்பட்டது.

**இ**ல்வாழ்வான் என்பான், இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றில் நின்ற துணை.

இ - ள்.—இல் வாழ்வான் என்பான் - இல்வாழ்வான் என்று சொல்லப்படுமவன், இயல்புடைய மூவர்க்கும் - இயல்புடைய மூவர்க்கும், நல் ஆற்றில் நின்ற துணை - நல்ல வழியின்கண்ணே நின்ற (ஒரு) துணை.

தானமாகிய இல்லறத்தைச் செய்யுமவன், அறத்தின் பாற்பட்ட விரதத்தை மேற்கொண்டு ஒழுகாநின்ற பிரமசாரிக்கும், தவத்தினை மேற்கொண்டு ஒழுகாநின்ற வானப்பிரத்த சந்நியாசிகளுக்கும், தத்தம் நிலை குலையாமல் உணவு முதலாயின கொடுத்துப் பாதுகாத்தலின், அவர்க்கு நல்லுலகின்கண் செல்லும் நெறியிலே நின்ற ஒரு துணையென்று கூறினார். துணை யென்ப, இடையூறு வாராமல் உய்த்துவிடுவாரை.

இது, மற்றைய மூன்று ஆசிரமிகளுக்கும் இல்வாழ்வான் துணையென்றது. சக.

**து**றந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை.

இ - ள்.—துறந்தார்க்கும் - (வருண நாமங்களைத்) துறந்தார்க்கும், துவ்வாதவர்க்கும் - துறவாது நல்குரவாளராய் உண்ணப் பெறாதார்க்கும், இறந்தார்க்கும் - (பிறராய் வந்து) செத்தார்க்கும், இல்வாழ்வான் என்பான் துணை - இல்வாழ்வான் என்று சொல்லப்படுமவனே துணையாவான்.

மேற்கூறிய மூவரும் வருணநாமங்களைத் துறவாமையால் அவரை "இயல்புடைய மூவர்" என்றும், ஈண்டுக் கூறிய இவர் அவற்றைத் துறந்தமையால் இவரைத் "துறந்தா"ரென்றும் கூறினர். செத்தார்க்கு இவன் வேண்டியவ னாயினன், அவரைப் புறங்காட்டுய்த்தல் முதலியன செய்யவேண்டுதலின்.

இது, மேற்கூறியவர்களே யன்றி இவர்களுக்கும் இல்வாழ்வான் துணையென்று கூறிற்று. சஉ.

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்
கைம்புலத்தார் ஓம்பல் தலை.

இ - ள் :—தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்று ஐம்புலத்தார் - பிதிரர் தேவர் புதியராய்வந்தார் சுற்றத்தார் தான் என்னும் ஐந்திடத்தாரையும், ஓம்பல் தலை - ஓம்புதல் தலையாயது இல்வாழ்க்கை.

தனக்கு உண்டான பொருளை ஆறு கூறாக்கி, ஒருகூறு அரசற்குக் கொடுத்து, ஒழிந்த ஐந்து கூறினும் தான் கொள்வது ஒரு கூறு என்றதற்குத் தன்னையும் சேர்த்து எண்ணினார். மேல் கூறிய ஆறுவரும் விருந்தின் வகையினரென்று கொள்ளப்படுவர்.

இது, தலையான இல்வாழ்க்கை வாழும் திறன் கூறிற்று. ௪௩.

பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின், வாழ்க்கை
வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்.

இ - ள் :—வாழ்க்கை பழி அஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் - இல்வாழ்க்கையாகிய நிலை பாவத்தை அஞ்சிப் பகுத்துண்டலை உடைத்தாயின், வழி எஞ்சல் எஞ்ஞான்றும் இல் - தனது ஒழுங்கு இடையறுதல் எக்காலத்திலும் இல்லை. [ஒழுங்கு - நடை.]

மேல் பகுக்குமாறு கூறினவர், ஈண்டுப் பகுத்தலாலும் பழிக்கஞ்சுதலாலும் எய்தும் பயன் கூறினார். ௪௪.

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை,
பண்பும் பயனும் அது.

இ - ள் :—இல்வாழ்க்கை அன்பும் அறனும் உடைத்தாயின் - இல்வாழ்க்கையாகிய நிலை (யாவர்மாட்டும்) அன்புசெய்தலையும் அறஞ்செய்தலையும் உடைத்தாயின், பண்பும் பயனும் அது - அதற்குக் குணமாவதும் பயனாவதும் அவ்விரண்டினையும் உடைமைதானே.

# இல்வாழ்க்கை

பயன் வேறு வேண்டா; தனக்கும் பிறர்க்கும் உண்டான முகமலர்ச்சிதானே அமையும்.

பழியொடு வாராத உணவை நுகர ஏற்பார்மாட்டு அன்பு செய்ய வேண்டு மென்பதூஉம், தான் சிலனுய்க் கொடுக்கவேண்டு மென்பதூஉம் இது கூறிற்று. ௪௫.

அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின், புறத்தாற்றின்
போஒய்ப் பெறுவ தெவன்?

இ - ள் :—இல்வாழ்க்கை அறத்து ஆற்றின் ஆற்றின் - இல்வாழ்க்கையாகிய நிலைமை அறநெறியிலே செலுத்த வல்லனாயின், புறத்து ஆற்றின் போய் பெறுவது எவன் - புறநெறியாகிய தவத்தில் போய்ப் பெறுவது யாதோ?

மேல் சிலனுய்க் கொடுக்கவேண்டு மென்றவர், ஈண்டு அவ்வாறு செய்யின் அதுதானே தவப்பயனையும் தரு மென்றார். ௪௬.

ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை,
நோற்றலின் நோன்மை உடைத்து.

இ - ள் —ஆற்றின் ஒழுக்கி அறன் இழுக்கா இல்வாழ்க்கை - பிறரையும் நன்னெறியிலே ஒழுகப்பண்ணித் தானும் அறத்தின்பால் ஒழுகும் இல்வாழ்க்கை, நோற்றலின் நோன்மை உடைத்து - தவம் செய்தலினும் வலி உடைத்து.

ஒழுகப்பண்ணலாவது அவர்க்கு வேண்டுவன அமைத்தல்.

இது, தவத்தினும் இல்வாழ்க்கை வலியுடைத் தென்றது. ௪௭.

இயல்பினுன் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்,
முயல்வாரு ளெல்லாம் தலை.

இ - ள் :—இயல்பினுன் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான் - நெறியினனே இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான், முயல்வாருள் எல்லாம் தலை - முயல்வா ரெல்லாரினும் தலையாவான்.

முயல்தல் - பொருட்கு முயல்தல். [பொருள் - மெய்ப்பொருள்.]

இது, மெய்ப்பொருளை அடைய முயல்வாருள் இல்வாழ்வான் தலையானவ னென்றது. ௪௮.

வையத்துள், வாழ்வாங்கு வாழ்பவன், வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

இ - ள் :—வாழ்வாங்கு வாழ்பவன் - இல்வாழ்க்கை வாழும் படியிலே வாழுமவன், வையத்துள் வான் உறையும் தெய்வத்துள் வைக்கப்படும் - உலகத்திலே தேவருள் ஒருவனுக மதிக்கப்படுவன்.

இஃது, இல்வாழ்வான் எல்லாராலும் நன்குமதிக்கப்படுவன் என்றது. ௪௯.

அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை ; அஃதும்
பிறன்பழிப்ப தில்லாயின் நன்று.

இ - ள் :—அறன் எனப்பட்டது இல்வாழ்க்கையே - அறன் என்று சிறப்பித்துச் சொல்லப்பட்டது இல்வாழ்க்கையே : அஃதும் பிறன் பழிப்பது இல்லாயின் நன்று - அதுவும் பிறன் ஒருவனால் பழிக்கப்படுவ தொன்றை உடைத்தன்றாயின் நன்றாம்.

பழிக்கப்படுவ தென்றது இழிகுணத்தாளாகிய மனையாளை.

இனி வாழ்க்கைத்துணைநலம் கூறுகின்றாராதலின், இஃது ஈண்டுக் கூறப்பட்டது. ௫0.

## ௬-வது.—வாழ்க்கைத் துணை நலம்.

வாழ்க்கைத்துணைநல மாவது, இல்வாழ்க்கைக்குத் துணையாகிய மனையாளது பெண்மையிலட்சணம். இல்வாழ்க்கைக்கு மனையாள் இன்றியமையாத துணையாதலான், இஃது அதன்பின் கூறப்பட்டது.

மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.

இ-ள்.—மனைத் தக்க மாண்பு உடையளாகி - தான் பிறந்த குடிக்குத்தக்க ஒழுக்கத்தை உடையாளாய், தன் கொண்டான் வளம் தக்காள் - தன்னைக் கொண்டவனது வருவாய்க்குத் தக்க செலவினை யுடையவள், வாழ்க்கை துணை - இல்வாழ்க்கைக்குத் துணையாவள்.

இது, வாழ்க்கைத்துணையின் இலட்சணம் கூறிற்று. ௫௧

மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின், வாழ்க்கை
எனைமாட்சித் தாயினும் இல்.

இ-ள்.—மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் - குடிக்குத் தக்க ஒழுக்கம் மனையாள்மாட்டு இல்லையாகில், வாழ்க்கை எனைமாட்சித் தாயினும் - இல்வாழ்க்கை எத்தனை நன்மைகளை உடைத்தாயினும், இல் - ஒரு நன்மையும் இன்றாம்.

இஃது, அவளிடம் நன்மை யில்லையாயின் இல்வாழ்க்கையின் எல்லா நன்மைகளும் கெடுமென்றது. ௫௨.

சிறைகாக்கும் காப்பெவன் செய்யும்? மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை.

இ-ள்.—சிறை காக்கும் காப்பு எவன் செய்யும் - (மகளிரைச்) சிறைசெய்து காக்கும் காவல் யாதினைச் செய்யும்? மகளிர் நிறை காக்கும் காப்பே தலை - மகளிரது கற்புக் காக்கும் காவலே தலையான காவல்.

இஃது, அவள் தனது கற்பால் தன்னைக் காத்தலே காவலாமென்றது. ௫௩.

பெண்ணின் பெருந்தக்க யாவுள, கற்பென்னும்
திண்மைஉண் டாகப் பெறின்.

இ-ள்.—பெண்ணின் பெருந் தக்க யா உள - பெண்பிறப்புப் போல மிக மேம்பட்டன யாவை யுள, கற்பு என்னும் திண்மை உண்

டாக பெறின் - கற்பாகிய திண்மையுண்டாகப் பெறில்? [திண்மை- உறுதிப்பாடு.]

இது, கற்புடைய பெண்ணின் பிறப்புப்போல மிக மேம்பட் டவை இல்லையென்றது. ௫௪.

புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை, இகழ்வார்முன்
ஏறுபோல் பீடு நடை.

இ - ள் —புகழ் புரிந்த இல் இலோர்க்கு - புகழ் பொருந்தின மனையாளை இல்லாதார்க்கு, இகழ்வார்முன் ஏறுபோல் பீடு நடை - தம்மை இகழ்ந்துரைப்பார்முன் ஏறுபோல நடக்கும் மேம்பட்ட நடை, இல்லை - இல்லையாம். [புரிந்த என்பது ஈற்று அகரம் கெட்டு நின்றது. ஏறு - எருது.]

பீடுநடை = அசைவும் தலையெடுப்பும் பொருந்திய நடை.

இது, கற்புடையாளென்ற புகழைச் செய்த மனையாளை இல்லாதானை எல்லாரும் இகழ்வரென்றது. ௫௫.

இல்லதென் இல்லவள் மாண்பானால்? உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை?

இ - ள் —இல்லவள் மாண்பானால் - (ஒருவனுக்கு) மனையாள் மாட்சிமை யுடையாளானால், இல்லது என் - இல்லாதது யாது? (எல்லாம் உளவாம்). இல்லவள் மாணாக்கடை - (ஒருவனுக்கு) மனையாள் மாட்சிமை யில்லாளானால், உள்ளது என் - உள்ளது யாது? (ஒன்றும் இல்லை).

இது, கற்புடைய மனையாளை உடையவன் எல்லாச் செல்வங்களையும் உடையனென்றது. ௫௬.

தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்.

இ - ள் —தன் காத்து தன் கொண்டான் பேணி - தன்னையும் காத்துத் தன்னைக்கொண்ட கணவனையும் பேணி, தகை சான்ற சொல் காத்து சோர்வு இலாள் [illegible] - நன்மை அமைந்த புகழ்களையும் படைத்துச் சோர்வின்மையுடையவளே பெண்ணென்று சொல்லப்படுபவள். [சோர்வின்மை - [illegible] திறம் தளர்வின்மை.]

இது, பெண்களிற் சிறந்தாளது இலக்கணம் கூறிற்று. ௫௭.

தெய்வம் தொழாஅள், கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை.

இ - ள் .—தெய்வம் தொழாள் - தெய்வத்தைத் தெய்வமென்று தொழாளாய், கொழுநன் தொழுது எழுவாள் - தெய்வமும் தன் கணவனென்றே கருதி அவனை நாள்தோறும் தொழுது எழுமவள், பெய் என மழை பெய்யும் - பெய்யென்று சொல்ல மழை பெய்யும்.

எழுதல் - உறங்கி யெழுதல். [தொழுது எழுவாள் - தொழுதுகொண்டே எழுகின்றவள்.]

இது, கணவனைக் கனவினும் நனவினும் தெய்வமெனத் தொழுவாள் ஆணைக்குப் பூதங்களும் கீழ்ப்படியு மென்பது. ௫௮.

பெற்றாற் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு.

இ - ள் .—பெண்டிர் பெற்றாற் பெறின் - பெண்டிரானவர் (தம்மை மனைவியாராகப்) பெற்றவரையே (தமக்குத் தலைவராகப்) பெறின், புத்தேளிர் வாழும் பெரும் சிறப்பு உலகு பெறுவர் - தேவர் வாழும் பெருஞ் சிறப்பினையுடைய உலகத்தைப் பெறுவர் [தலைவன் - கடவுள்.]

இது, கணவனைத் தெய்வமாகக் கொண்டவள் அடையும் பயன் கூறிற்று. ௫௯.

மங்கலம் என்ப மனைமாட்சி : மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு.

இ-ள்.—மனைமாட்சி - மனையாள் ஒழுக்கமுடையளாதலை, மங்கலம் என்ப - (ஒருவனுக்கு) அழகென்று சொல்லுப; நன்மக்கள் பேறு அதன் மற்று நன்கலம் என்ப - நல்ல மக்களைப் பெறுதலை அவ்வழகின்மேலே நல்ல அணிகலமென்று சொல்லுப (ஆன்றோர்). [என்ப என்பது பின்னரும் கூட்டப்பட்டது.]

இது, நல்ல மனைவியும் மக்களும் ஒருவனுக்கு அழகும் அணியுமா மென்றது அடுத்த அதிகாரத்திற்குத் தோற்றுவாய் செய்ததுமாம். சு0.

## எ-வது.—மக்கட்பேறு.

அஃதாவது, மக்களைப் பெறுவதனாலாம் பயன் கூறுதல். இல்வாழ்வான் கடன்களுள் தென்புலத்தார்க்குச் செய்யவேண்டுவது மக்களாலன்றி இறுக்கமுடியாமையின் இஃது ஈண்டுக் கூறப்பட்டது.

பெறுமவற்றுள் யாமறிவ தில்லை, அறிவுடைய
மக்கட்பே றல்ல பிற.

இ-ள்.—பெறும் அவற்றுள் - (ஒருவன்) பெறும் பொருள்களுள், அறிவுடைய மக்கள் பேறு - அறிவுடைய மக்களைப் பெறுதல் (போலப் பயன்படுவது), அல்ல பிற - ஒழிந்த பொருள்களுள், யாம் அறிவது இல்லை - யாம் கண்டறிவது இல்லை. [கண்டறிவது - பொறிகளால் அறியும் பொருள். ஒழிந்த - மக்கட்பேறல்லாத.]

இஃது, அறிவுடைய மக்களால் பெற்றோர் சிறந்த பயனை அடைவ ரென்றது. சுக.

எழுபிறப்பும் தீயவை தீண்டா, பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்.

இ - ள் —எழு பிறப்பும் தீயவை தீண்டா - எழு பிறப்பினும் துன்பங்கள் சாரா, பழி பிறங்கா பண்புடை மக்கள் பெறின் - (ஒரு பிறப்பிலே) பழியின்கண் மிகாத குணத்தினையுடைய மக்களைப் பெறுவாராயின். [பிறங்காத என்பது ஈறு கெட்டு நின்றது.]

இது, நன்மக்களைப் பெற்றார் எழுபிறப்பினும் துன்புறாரென்றது. ௬௨.

தம்பொருள் என்பதம் மக்கள், அவர்பொருள்
தம்தம் வினையான் வரும்.

இ - ள் —தம்மக்கள் தம் பொருள் என்ப - தம்மக்களைத் தம்முடைய பொருள் என்று சொல்லுவார் (உலகத்தார்), அவர் பொருள் தம்தம் வினையால் வரும் - அம்மக்களாகிய பொருள் தம்தம்முடைய வினையால் வருதலான். [அவர்பொருள் என்பது இருபெயரொட்டுப் பண்புத்தொகை.]

இது, தம்மக்கள் தம்பொருளென்றது.

அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ்.

இ - ள் —தம்மக்கள் சிறுகை அளாவிய கூழ் - தம்முடைய மக்கள் சிறுகையாலே அளைந்த கூழ், அமிழ்தினும் ஆற்ற இனிது - (இனிமை யுடைத்தாகிய) அமிழ்தினும் மிக இனிது. [ஏகாரம் - அசை.]

இது, தம்மக்கள் கையால் அளையப்பட்ட உணவு தமக்கு மிக்க சுவை நல்குமென்றது. ௬௪.

மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம்: மற்றவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு.

இ - ள் .—மக்கள் மெய் தீண்டல் உடற்கு இன்பம் - தம்மக்கள் தமது உடம்பினைச் சார்தல் தம் உடம்பிற்கு இன்பமாம். அவர

சொற் கேட்டல் செவிக்கு இன்பம் - அவர் சொற்களைக் கேட்டல் தம் செவிக்கு இன்பமாம். [மற்று - அசை.]

இது, தம்மக்கள் தம்உடம்பில் சார்தலும் தம்மக்கள் சொல் தம்செவியில் படுதலும் தமக்கு இன்பம் பயக்கு மென்றது. ௬௫.

குழலினி தியாழினி தென்பதம் மக்கள்
மழலைச்சொற் கேளா தவர்.

இ - ள் .— தம்மக்கள் மழலைச்சொல் கேளாதவர் - தம்மக்களது மழலைச்சொற்களைக் கேளாதவர், குழல் இனிது யாழ் இனிது என்ப - குழலோசை இனிது யாழோசை இனிது என்று சொல்லுவர். (கேட்டவர் அவை இனிதென்று சொல்லார் என்றவாறு.)

இது, தம்மக்கள் சொல் அவ்விரண்டினும் இன்பம் பயக்கு மென்றது. ௬௬.

தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது.

இ - ள் .— தம்மக்கள் அறிவுடைமை - தம்மக்கள் அறிவுடையராதல், தம்மின் மாநிலத்து மன் உயிர்க்கெல்லாம் இனிது - தம்மைப் போல உலகத்து உயிர்கட்கெல்லாம் இனிதாம்.

இது, தம்மக்கள் அறிவுடைமையால் உலகமும் இன்பமுறு மென்றது. ௬௭.

ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும், தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்.

இ - ள் .— ஈன்ற பொழுதின் பெரிது உவக்கும் - தான்பெற்ற காலத்திலும் மிக மகிழும், தன் மகனை சான்றோன் எனக் கேட்ட தாய் - தன்மகனைச் சான்றோனென்று பிறர் சொல்லக் கேட்ட (காலத்துத்) தாய்.

இது, மக்கள் புகழையெய்துதல் தாய்க்கும் இன்பம் பயக்குமென்றது. சுஅ.

**த**ந்தை மகற்காற்றும் நன்றி, அவையத்து
முந்தி இருப்பச் செயல்.

இ - ள் :—தந்தை மகற்கு ஆற்றும் நன்றி - தந்தை மகனுக்குச் செய்யும் உபகாரம், அவையத்து முந்தி இருப்ப செயல் - அவையகத்தின்கண்ணே (அவன்) முந்தி இருக்குமாறு (அவனுக்குக்) கல்வி உண்டாக்குதல்.

இது, மகனைக் கல்வியுடையனாக்குதல் தந்தையின் கடனென்றது. சுகூ.

**ம**கன்தந்தைக் காற்றும் உதவி, இவன்தந்தை
என்னோற்றான் கொல்என்னும் சொல்.

இ - ள் :—மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி - மகன் தந்தைக்குச் செய்யும் உபகாரம், இவன் தந்தை என் நோற்றான் என்னும் சொல் - (இவனைப் பெறுதற்கு) இவன் தந்தை என்ன தவம் செய்தான் என்று உலகத்தார் சொல்லும் சொல்லைப் படைத்தல். [கொல் - அசை.]

நெறியின் ஒழுகுவாரை உலகத்தார் புகழ்வாராதலான், மகனும் ஒழுக்கமுடையவனாகவேண்டுமென்று இது கூறிற்று. எ0.

## அ-வது.—அன்புடைமை.

அன்புடைமை யாவது, தன்னைச் சார்ந்தாரமாட்டுக் காதலுடையவனாதல். இல்வாழ்வான் தனது வாழ்க்கைத்துணை மக்கள் முதலியவரிடத்து அன்புசெலுத்துதல் அவ்வாழ்க்கைக்கு இன்றியமையாததொன்றாதலான் இஃது ஈண்டுக் கூறப்பட்டது.

**எ**ன்பி லதனை வெயில்போலக் காயுமே,
அன்பி லதனை அறம்.

இ - ள் —என்பு இலதனை வெயில்போல காயும் - என்பு இல்லாத சீவனை வெயில் சுடுமாறு போல் சுடும், அன்பு இலதனை அறம் - அன்பு இல்லாத உயிரினை அறம். [ஏகாரம் அசை. அறம் - அறக்கடவுள். ...ா - பிராணியை. உயிரினை - மனிதனை.]

இஃது, அன்பு இல்லாதார் துன்பமுறுவா என்றது. எசு.

அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை, வன்பார்க்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று.

இ - ள் —அகத்து அன்பு இல்லாத உயிர்வாழ்க்கை - தன்னிடத்து அன்பில்லாத உயிரினது வாழ்க்கை, வன் பாரக்கண் வற்றல் மரம் தளிர்த்தால் அற்று - வன்பாரிடத்து (நடப்பட்ட) உலர்ந்த மரங்கள் தளிர்த்தால் போலும். (தளிர்த்தற்குக் காரணம் இன்மையால் தளிரா தென்றவாறு.)

[இல்லாத என்பது ஈறுகெட்டு நின்றது. ஆல் என்பது கெட்டது. வன்பார - பாலைநிலம்.]

இஃது, அன்பு இல்லாதார் அழிவ ரென்றது. எஉ.

புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும், யாக்கை
அகத்துறுப் பன்பி லவர்க்கு?

இ - ள் —யாக்கை அகத்து உறுப்பு அன்பு இல்லவர்க்கு - உடம்பிற்கு அகத்து உறுப்பாகிய அன்பு இல்லாதார்க்கு, புறத்து உறுப்பு எல்லாம் எவன் செய்யும் - புறத்து உறுப்புக்க ளெல்லாம் யாதினைச் செய்யும்? (ஒருபயனையும் செய்யா.) [புறத்துறுப்பு - மெய், வாய், கண், மூக்கு, செவி, கை, கால் முதலியன. இல்லவர்க்கு என்பது லகர ஒற்றுக் கெட்டுநின்றது.]

இஃது, அன்பில்லாதவர் அங்கவீனரை ஒப்பர் என்றது. எங.

அன்பின் வழிய துயிர்நிலை: அஃதிலார்க்
கென்புதோல் போர்த்த உடம்பு.

இ - ள் — அன்பின் வழியது உயிர் நிலை - அன்பின் வழியதாகிய அவத்தினால் உயிருக்கு நிலைபேறு உளதாம், அஃது இலார்க்கு என்பு தோல் போர்த்த உடம்பு - அன்பு இலாதார்க்கு என்பின்மேல் தோலினால் போர்க்கப்பட்ட உடம்புகளோ (உளவாம்). [ஏகாரம் கெட்டது.]

இஃது, அன்பில்லார் வீடு பெறாரென்றது. எ௪.

அன்பிலார் எல்லாம் தமக்குரியர்; அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு.

இ - ள் — அன்பு இலார் எல்லாம் தமக்கு உரியர் - அன்பிலாதார் எல்லாப் பொருள்களையும் தமக்கு உரிமையாக வுடையர்; அன்பு உடையார் என்பும் பிறர்க்கு உரியர் - அன்புடையார் (பொருளேயன்றி) எலும்பினையும் பிறர்க்கு உரிமையாக வுடையர்.

இஃது, அன்புடையா ரல்லது மற்றையோர் அறஞ்செய்தல் அரிதென்றது. எ௫.

அன்போ டியைந்த வழக்கென்ப, ஆருயிர்க்
கென்போ டியைந்த தொடர்பு.

இ - ள் — உயிர்க்கு ஆர் என்போடு இயைந்த தொடர்பு - உயிர்க்கு (இப்பிறப்பின்கண்) பெறுதற்கரிய மானிட உடம்போடு பொருந்திய (இடைவிடாத) நட்பு, அன்போடு இயைந்த வழக்கு என்ப - (முன்பிறப்பின்கண்) அன்போடு பொருந்திச் சென்ற செலவின் பயனென்று சொல்லுவர் (ஆன்றோர்).

இது, மானிடப்பிறப்பை எய்தியதற்குக் காரணமே அன்பென்றது. எ௬.

அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்
தின்புற்றார் எய்தல் சிறப்பு.

இ-ள்:—வையகத்து இன்புற்றார் சிறப்பு எய்தல் - (இப்பிறப்பின்கண்) உலகத்தின் இன்புற்றார் அதன்மேலும் சிறப்பெய்துதல், அன்புற்று அமர்ந்த வழக்கு என்ப - (முன்பிறப்பின்கண்) பிறர்மேல் அன்பு வைத்துச் சென்ற செலவின் பயனென்று சொல்லுவர் (ஆன்றோர்). [சிறப்பு - வீடு. செலவு - நடை, ஒழுக்கம்.]

இஃது, அன்புடையார் போகம் துய்த்து வீட்டை அடைவரென்றது. எஎ.

அன்பீனும் ஆர்வ முடைமை; அதுவீனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு.

இ-ள்:—அன்பு ஆர்வமுடைமை ஈனும் - அன்பு ஆர்வமுடைமையைத் தரும்; அது நண்பு என்னும் நாடாத சிறப்பு ஈனும் - அவ்வார்வமுடைமை நட்பென்று சொல்லப்பட்ட ஆராய்தலில்லாத சிறப்பைத் தரும்.

[ஆர்வம் - தொடர்பிலார் மாட்டும் செல்லும் காதல். நாடாச் என்பது ஈறு கெட்டுநின்றது. நட்பு - நட்பினர். ஆராய்தல் இல்லாத - ஆராய்தல் வேண்டாத.]

இஃது, அன்புடையார்க்கு உலகத்தாரெல்லாம் நட்பினராவ ரென்றது. எஅ.

அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்;
மறத்திற்கும் அஃதே துணை.

இ-ள்:—அறியார் அன்பு அறத்திற்கே சார்பு என்ப - அறியாதார் அன்பானது அறம்செய்வார்க்கே சார்பாம் என்பர், அஃதே மறத்திற்கும் துணை - அன்பே மறம்செய்வார்க்கும் துணையாம்.

இஃது, ஒருவன் மறம்செய்தற்கும் அவன் ஒரு பொருளின் மீது கொண்ட அன்பே காரண மென்றது. எகூ.

அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்? ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்.

இ - ள்.—அன்பிற்கும் அடைக்குந் தாழ் உண்டோ - அன்பினையும் (வெளிப்படாது) அடைக்குந் தாழ் உளதோ? ஆர்வலர் புன்கணீர் பூசல் தரும் - அன்புடையார்மாட்டு உளதாகிய புல்லிய கண்ணின் நீர் தாமே ஆரவாரஞ்செய்து. ௮௦.

இது, பிறர் துன்பத்தைக் கண்ட மாத்திரத்தில் அன்புடையார்க்குக் கண்ணீர் பெருகுமென்றது.

## கூ-வது —விருந்தோம்பல்.

விருந்தோம்பலாவது, உண்ணுங்காலத்துப் புதியார் வந்தால் பகுத்துண்ணுதல். தென்புலத்தார் முதலிய ஐவருள் விருந்தினர் முதற்கண் ஓம்பப்படுதற்குரியராதலாலும், அவரை ஓம்புதல் அன்புடைமை காரணமாக நிகழ்வதொன்றாதலாலும் இஃது ஈண்டுக் கூறப்பட்டது.

இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு.

இ - ள்—இருந்து ஓம்பி வாழ்வது எல்லாம் - இல்லின்கண் இருந்து (பொருளைப்) போற்றி வாழும் வாழ்க்கையெல்லாம், விருந்து ஓம்பி வேளாண்மை செய்தல் பொருட்டு - (வந்த) விருந்தினரைப் போற்றி அவர்க்கு உபகரித்தற்காக.

இஃது, இல்வாழ்வதே விருந்தினரை ஓம்புதற்காக என்றது. ௮௧.

விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டும்பாற் றன்று.

இ - ள்.—விருந்து புறத்ததாக தான் உண்டல் - விருந்தினர் இற்புறத்தாராகத் தானே உண்டல், சாவா மருந்து எனினும் - சாவாமைக்காக உண்ணும் மருந்தாயினும், வேண்டும்பாற்று அன்று - வேண்டும் பகுதியுடைத் தன்று. [புறத்தநாக என்பது ஈறுகெட்டு நின்றது.]

இஃது, அமிர்தமே யெனினும் விருந்தினருக்கு அளியாது தான் உண்ணலாகா தென்றது. அஉ.

**வ**ருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று.

இ - ள். — வைகலும் வரு விருந்து ஓம்புவான் வாழ்க்கை - நாள்தோறும் வந்த விருந்தினரைப் போற்றுவானது ஆக்கம், பருவந்து பாழ்படுதல் இன்று - வருத்தமுற்றுக் கேடுபடுவ தில்லை.

இது, நாள்தோறும் விருந்தினரை ஓம்புவானது இல்வாழ்க்கை கேடுறா தென்றது. அ௩.

**அ**கனமர்ந்து செய்யாள் உறையும், முகனமர்ந்து
நல்விருந் தோம்புவான் இல்.

இ - ள் : — செய்யாள் அகன் அமர்ந்து உறையும் - திருவினள் மனம் பொருந்தி உறையும், நல் விருந்து முகன் அமர்ந்து ஓம்புவான் இல் - நல்ல விருந்தினரை முகம்பொருந்திப் போற்றுவானது மனையின்கண்.

இது, விருந்தோம்புவார்க்குக் கேடின்மையே யன்றிச் செல்வமும் உண்டாம் என்றது. அச.

**வி**த்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம்?

இ - ள். — விருந்து ஓம்பி மிச்சில் மிசைவான் புலம் - விருந்தினரை ஊட்டி மிச்சமான உணவை உண்ணுமவன் புலத்தின்கண், வித்தும் இடல் வேண்டுமோ - (விளைதல் பொருட்டு) விதைக்கவும் வேண்டுமோ? (தானே விளையாதோ)? [கொல் - அசை.]

இது, விருந்தோம்புவான் பொருள்வருவாயாக இயற்றும் இடம் நன்றாகப் பயன்படு மென்றது. அரு.

செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு.

இ - ள் :—செல் விருந்து ஓம்பி - வந்த விருந்தினரைப் போற்றி, வரு விருந்து பார்த்திருப்பான் - வரும் விருந்தினரைப் பார்த்திருக்குமவன், வானத்தவர்க்கு நல் விருந்து - வானத்தவர்க்கு நல்ல விருந்தாவன்.

வரவு பார்த்தல் - விருந்தின்றி உண்ணாமை.

இது, விருந்தோம்புவானது மறுமைப் பயன் கூறிற்று. ௮௬.

இனைத்துணைத் தென்பதொன் றில்லை; விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன்.

இ - ள் :—இனை துணைத்து என்பது ஒன்று இல்லை - (விருந்தினர்க்கு அளித்ததனால் ஆகும் பயன்) இன்ன அளவினை உடைத்தென்று சொல்லலாவது ஒன்று இல்லை : வேள்விப்பயன் விருந்தின் துணை துணை - விருந்தோம்பலின் பயன் விருந்தினர் யாதொரு தன்மையை உடையரோ அத்தன்மையின் அளவிற்று.

இது, விருந்தினரை ஓம்புவதன் பயன் விருந்தினரது தகுதியின் அளவிற்றாமென்றது. ௮௭.

பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர், விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார்.

இ - ள் :—விருந்து ஓம்பி வேள்வி தலைப்படாதார் - விருந்தினரைப் போற்றி உபகாரம் செய்யமாட்டாதார், பரிந்து ஓம்பி பற்று அற்றேம் என்பர் - வருந்தி (உடம்பொன்றையும்) ஓம்பிப் பொருளற்றேமென்று இரப்பர்.

இது, விருந்தினரை ஓம்பாதார் தம்பொருளை இழந்து இரந்து வருந்துவரென்றது. ௮௮.

**உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா
மடமை மடவார்கண் உண்டு.**

இ - ள் — உடைமையுள் இன்மை - உடைமையின்கண்ணே இல்லாமைபோல, விருந்து ஓம்பல் ஓம்பா மடமை - விருந்தினர்க்கு அளித்தலைப் போற்றாத பேதைமை, மடவார்கண் உண்டு - பேதையார் மாட்டே உளதாம்.

[ஓம்பாத என்பது ஈறுகெட்டு நின்றது. இல்லாமைபோல - வறுமையுற்றிருந்தாற்போல.]

இது, விருந்தினரை ஓம்பாதார் அறிவிலாரென்றது. ௮௯.

**மோப்பக் குழையும் அனிச்சம்; முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.**

இ - ள் — அனிச்சம் மோப்பக் குழையும் - (எல்லா மலரினும் மெல்லிதாகிய) அனிச்சப்பூ மோந்தால் வாடும், முகந்திரிந்து நோக்க விருந்து குழையும் - முகந்திரிந்து நோக்க விருந்தினர் வாடுவர். [அனிச்சம் என்பது ஆகுபெயர்.]

இது, விருந்தினரைத் திரிவில்லா முகத்தோடு நோக்க வேண்டுமென்றது. ௯0.

## ௧0-வது — வாய்மை யுடைமை.

வாய்மையாவது, பொய் சொல்லாமை. [அஃதாவது, தீமையில்லாத சொற்களைச் சொல்லுதல். இது விருந்தோம்பலின்கண்ணே இன்றியமையாது வேண்டப்படுவ தொன்றாதலின், அதன்பின் கூறப்பட்டது.]

**தன்னெஞ் சறிவது பொய்யற்க; பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்.**

இ - ள் :— தன் நெஞ்சு அறிவது பொய்யற்க - தன் நெஞ்சு அறிந்ததனைப் பொய்யாது சொல்லுக; பொய்த்தபின் தன்நெஞ்சே

தன்னைச் சுடும் - பொய்த்தபின் தன் நெஞ்சுதானே தன்னைச் சுடும்.

[சுடுதல் - பொய்த்தவர்க்கு உள்ளாகும் தன்மையைக் கண்டு 'என்செய்தோம் யாம்' என்ன உருத்துவித்தல்.]

இது, பொய்யாமை வேண்டுமென்றது. ௨௯௩.

யாம்மெய்யாக் கண்டவற்றுள் இல்லை, எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற.

இ - ள்.—யாம் மெய்யாகக் கண்டவற்றுள் - யாம் மெய்யாகக் கண்ட அறங்களுள், வாய்மையின் நல்ல பிற எனைத்தொன்றும் இல்லை - மெய்சொல்லுதல்போல நன்றாயிருப்பன வேறு எவையும் இல்லை.

[" ஒருமை சுட்டிய பெயர்நிலைக் கிளவி - பன்மைக் காகு மிடனுமா ருண்டே" என்னும் தொல்காப்பியச் சூத்திரப்படி எனைத் தொன்றும் என்னும் ஒருமைப்பெயர் எவையும் என்னும் பன்மைப் பெயர்க் காயிற்று.]

இது, வாய்மையோடு மற்றை எவ்வறமும் ஒவ்வாதென்று அதன் தலைமை கூறிற்று. ௩௦௦.

வாய்மை எனப்படுவ தியாதெனின், யாதொன்றும்
தீமை இலாத சொலல்.

இ - ள் —வாய்மை எனப்படுவது யாது எனின் - பொய்சொல்லாமை என்று சொல்லப்படுவது யாதென்று வினவில், தீமை இலாத யாதொன்றும் சொலல் - (பிறர்க்குத்) தீமைபயவாத யாதொன்றானும் சொல்லுதல் (என்க).

[தீமைபயவாத - தங்கைக் கொடுக்காத சொற்களை. யாதொன் றானும் - எந்தவகையானும். யாதொன்றானும் என்பது தொகுத்தலாய் யாதொன்றும் என நின்றது.]

இது, வாய்மை யாதென்றார்க்குக் கூறப்பட்டது. ௨௯௧.

பொய்ம்மையும் வாய்மை யிடத்த, புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்.

இ - ள் :—பொய்ம்மையும் வாய்மை இடத்த - பொய்களும் மெய்யின் நிலைமையை உடையனவாம், புரை தீர்ந்த நன்மை பயக்கும் எனின் - குற்றம் தீர்ந்த நன்மையைப் பயக்குமாயின்.

[குற்றம்தீர்ந்த - குற்றம் நீங்கிய - குற்ற மற்ற.]

குற்றமற்ற நன்மையைப் பயக்குமாயின், பொய்ம்மையும் வாய்மையோ டொக்கு மென்று இது கூறிற்று. ௯௪.

உள்ளத்தாற் பொய்யா தொழுகின், உலகத்தார்
உள்ளத்து ளெல்லாம் உளன்.

இ - ள் :—உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் - (ஒருவன்தன்) நெஞ்சினால் பொய்யை நினையாது ஒழுகுவனாயின், உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளன் - உலகத்தார் நெஞ்சினு ளெல்லாம் உளனாவன்.

இது, பொய்யை நினையாதவரை எல்லாரும் போற்றுவ ரென்றது. ௯௫.

மனத்தொடு வாய்மை மொழியின், தவத்தொடு
தானம் செய்வாரில் தலை.

இ - ள் :—மனத்தொடு வாய்மை மொழியின் - (ஒருவன்) மனத்தோடேகூட மெய் சொல்லுவனாயின், தவத்தொடு தானம் செய்வாரில் தலை - தவத்தோடேகூடத் தானம் செய்வாரில் தலையாவன்.

இது, மனத்தோடு வாய்மைமொழிதல் எல்லா நன்மைகளையும் பயக்கு மென்றது. ௯௬.

பொய்யாமை அன்ன புகழில்லை, பொய்யாமை
எல்லா அறமும் தரும்.

இ - ள்.—பொய்யாமை அன்ன புகழ் இல்லை - பொய்யாமை யால் வரும் (பொய்யாமையை உடையன் என்னும்) புகழோடு ஒத்த புகழ் வேறொன்று இல்லை, பொய்யாமை எல்லா அறமும் தரும் - பொய்யாமையானது (அவன் அறியாமல் தானே) எல்லா அறங்களை யும் கொடுக்கு மாதலான்.

[பொய்யாமை என்பது அதனால் வரும் புகழுக்காயினமையால் ஆகுபெயர்.]

இது, வாய்மை மற்றை எல்லா அறங்களையும் பயக்கு மென் றது. ௯௭.

பொய்யாமை பொய்யாமை ஆற்றின், அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று.

இ - ள்.—பொய்யாமை பொய்யாமை ஆற்றின் - பொய்யாமை யைப் பொய்யாமல் செலுத்தவல்லனாயின், பிற அறம் செய்யாமை செய் யாமை நன்று - பிற அறங்களைச் செய்தல் நன்றாம்.

[செலுத்துதல் - கைக்கொண்டொழுகுதல். செய்யாமை செய் யாமை - செய்யாமையைச் செய்யாமை - செய்தல்.]

இது, பொய்யாமையைக் கடைப்பிடித்தொழுகினால்லது மற்றை அறங்கள் பயன்படா வென்றது. ௯௮.

புறம்தூய்மை நீரால் அமையும்; அகம்தூய்மை
வாய்மையால் காணப் படும்.

இ - ள்.—புறம் தூய்மை நீரால் அமையும் - உடம்பின் தூய்மை நீரினாலே அமைந்துவிடும்; அகம் தூய்மை வாய்மையால் காணப் படும் - மனத்தின் தூய்மை மெய் சொல்லுதலானே அறியப்படும்.

இது, வாய்மையால் மனத்தூய்மை உண்டாமென்றது. ௯௯.

எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.

இ - ள்.—சான்றோர்க்கு எல்லா விளக்கும் விளக்கு அல்ல - சான்றோர்க்கு எல்லா (அறங்களாலும் உண்டான) ஒளிகளும் ஒளிகள் அல்ல; பொய்யா விளக்கே விளக்கு - பொய்யாமை (யினால் உண்டான) ஒளியே ஒளியாகும்.

[விளக்கு - விளக்கம் - ஒளி - நிலையான புகழ்.]

இது, சான்றோர்க்கு வாய்மை இன்றியமையாதென்று கூறிற்று. ௧00.

## ௧௧-வது.—செய்ந் நன்றி யறிதல்.

செய்ந்நன்றி யறிதலாவது, பிறர் செய்த (நன்மையை மறந்து) நன்மையை மறவாமை. [இஃது, இல்வாழ்வாரும் அவரால் ஓம்பப் பெற்ற விருந்ினரும் கைக்கொள்ள வேண்டுவதொன் றாதலின் வாய்மை யுடைமையின்பின் கூறப்பட்டது.]

**மறவற்க மாசற்றார் கேண்மை. துறவற்க**
**துன்பத்துள் துப்பாயார் நட்பு.**

இ - ள்:—துன்பத்துள் துப்பு ஆயார் நட்பு துறவற்க - (தமக்குத்) துன்பம் வந்த காலத்து வலியாயிருந்தார் நட்பை (எக்காலத்தும்) விடாதொழிக. மாசு அற்றார் கேண்மை மறவற்க - குற்றமற்றாரது நட்பை (எக்காலத்தும்) மறவாதொழிக.

[இம்முதற்குறளை "மறவற்க மாசற்றார் கேண்மை" என்று தொடங்கியதே, இவ்வதிகாரத்திற்கு முந்திய "வாய்மையுடைமை" என்பதை வலியுறுத்தும், "தூஉய்மை யென்பது அவாவின்மை; மற்றது - வாஅய்மை வேண்ட வரும்" என்றதனால்.]

இது, தாம் இடருற்றுழித் தமக்கு உதவி செய்தாரது நட்பையும் குற்றமற்றாரது நட்பையும் விடற்க என்றது. ௧0௧.

**நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்ல**
**தன்றே மறப்பது நன்று.**

## செய்ந்நன்றியறிதல்

இ - ள்:—நன்றி மறப்பது நன்றன்று - (பிறர் செய்த) நன்மையை (என்றும்) மறப்பது நல்லதன்று; நன்றல்லது அன்றே மறப்பது நன்று - (பிறர் செய்த) தீமையை அப்பொழுதே மறப்பது நன்று.

இது, பிறர் செய்த நன்றியை எக்காலமும் மறக்கலாகா தென்றும் தீமையை அக்கணமே மறக்க வேண்டு மென்றுங் கூறிற்று. ௧0௨.

செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது.

இ - ள்:—செய்யாமல் செய்த உதவிக்கு - (முன் ஓர் உதவி தாம்) செய்யாதிருக்க (தமக்கு ஒருவன்) செய்த உதவிக்கு, வையகமும் வானகமும் ஆற்றல் அரிது - பூவுலகமும் சுவர்க்கமும் நிறையாற்றுதல் அரிது. [ஆற்றல் - நிறையிற் சமமாதல்.]

இது, தம்மிடம் ஓர் உதவியும் பெறாதார் தமக்குச் செய்த உதவி இப்புவியினும் சுவர்க்கத்தினும் பெரிதாமென்கிறது. ௧0௩.

பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்,
நன்மை கடலிற் பெரிது.

இ - ள்:—பயன் தூக்கார் செய்த உதவி நயன் தூக்கின் - ஒரு பயனைக் கருதாராய் (ஒருவர்க்குச்) செய்த உபகார(த்தினுள் உண்டாய) நன்மையை ஆராயின், நன்மை கடலிற் பெரிது - (அந்) நன்மை கடலினும் பெரிது.

இஃது, ஒரு பயனைக் கருதாது செய்த உதவி கடலினும் பெரிதென்றது. ௧0௪.

காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.

இ - ள்:—காலத்தினாற் செய்த நன்றி-(உதவி வேண்டும்) காலத்தில் செய்த உதவி, சிறிது எனினும் - (தான்) சிறிதாயிருந்ததாயி

னும், ஞாலத்தின் மாணப் பெரிது - உலகத்தினும் மிகப்பெரிதாம். [காலத்தினால் என்பது வேற்றுமை மயக்கம்.]

இஃது, உதவிவேண்டும் காலத்தில் செய்த உதவி மிகப்பெரி தென்றது. ௧0௫.

**தினைத்துணை நன்றி செயினும், பனைத்துணையாக்**
**கொள்வர் பயன்தெரி வார்.**

இ - ள் :—தினைத்துணை நன்றி செயினும் - தினையளவு நன்றி செய்தாராயினும், பனைத்துணையாகக் கொள்வர் பயன் தெரிவார் - (அதனை அவ்வளவிற்றென்று நினையாது) பனையளவினதாகக் கொள்வர் (உதவியின்) பயனை அறிவார்.

[தினையளவு, பனையளவு என்பன முறையே சிறிய அளவையும் பெரிய அளவையும் குறித்து நின்றன.]

செயல்வகையால் சிறிதாயினும், நன்றி பயன்வகையால் பெரி தாமென்றது இது. ௧0௬.

**எழுமை எழுபிறப்பும் உள்ளுவர், தங்கண்**
**விழுமம் துடைத்தவர் நட்பு.**

இ - ள் :—தம் கண் விழுமம் துடைத்தவர் நட்பு - தம் கண் (உற்ற) துன்பத்தை நீக்கினவரது நட்பை, எழுமை எழு பிறப்பும் உள்ளுவர் - (அப் பிறப்பிலேயன்றி) எழுமையிலும் தோற்றும் பிறப் பெல்லாம் நினைப்பர் (சான்றோர்).

[எழுமை - ஏழ்முறை. எழு என்னும் வினைத்தொகை இங்கு எதிர்காலத்தைக் குறித்து நின்றது.]

இது, தமக்கு நன்றி செய்தார் நட்பினை எஞ்ஞான்றும் மறக்க லாகா தென்றது. ௧0௭.

**உதவி வரைத்தன் றுதவி; உதவி**
**செயப்பட்டார் சால்பின் வரைத்து.**

## செய்ந்நன்றியறிதல்

இ - ள் —உதவி வரைத்து அன்று உதவி - (முன்பு செய்யப் பெற்ற) உதவியின் அளவினை தன்று (பின்பு செய்யும்) மாற்றுதவி; உதவி செயப்பட்டார் சால்பின் வரைத்து - (முன்பு) உதவி செய்யப் பெற்றவர் நன்மை எவ்வளவிற்று அவ்வளவிற்று (அது).

இது, மாற்றுதவிக்கு அளவில்லையென்பது. கOஅ

கொன்றன்ன இன்னா செயினும், அவர்செய்த
ஒன்றுநன் றுள்ளக் கெடும்.

இ - ள் —கொன்றால் அன்ன இன்னா செயினும்-(தமக்கு முன்பு நன்மை செய்தார்) தம்மைக் கொன்றாலொத்த இன்னாமையை(ப் பின்பு) செய்யினும், அவர் செய்த நன்று ஒன்று உள்ள கெடும்-அவர் முன்புசெய்த நன்றி ஒன்றை நினைக்க அவ்வின்னாமை யெல்லாம் கெடும்.

[இன்னாமை - தீமை. கொன்றால் என்பது 'ஆல்' கெட்டு நின்றது.]

இது, முன் தமக்கு உபகாரம் செய்தவர் பின் தமக்கு அபகாரம் செய்யின், அவ் வபகாரமெல்லாம் முன்செய்த உபகாரத்திற்கு ஈடாகா தென்றது. கOக.

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

இ - ள் —எ நன்றி கொன்றார்க்கும் உய்வு உண்டாம் - எல்லா நன்மைகளையும் சிதைத்தார்க்கும் (பின்பு ஒருகாலத்தேயாயினும்) உய்தல் உண்டாம், உய்வு இல்லை செய்நன்றி கொன்ற மகற்கு - (ஒருகாலத்தினும்) உய்தல் இல்லை ஒருவர் செய்த நன்றியைக் கொன்ற மகனுக்கு. [கொன்ற - சிதைத்த.]

இது, செய்ந்நன்றி கொன்ற பாவம் அநுபவித்தல்லது பிராயச்சித்தத்தால் தீரா தென்றது. ககO.

## கஉ-வது.—நடுவு நிலைமை.

நடுவு நிலைமையாவது, நட்டார்மாட்டும் பகைவர்மாட்டும் ஒக்க நிற்கும் நிலைமை. [செய்ந்நன்றியறிதல் என்னும் நடுவு நிலைமையை விடாதாகாது அதனின்றாக இவ்வதிகாரம் அதன்பின் கூறப்பட்டது.]

சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொரு
கோடாமை சான்றோர்க் கணி. [பால்

இ - ள் —சமன்செய்து சீர்தூக்கும் கோல் போல் அமைந்து - சமன்வரை பண்ணி (இரண்டு தலையும்) சீரொத்தால் தூக்கிப்பார்க்கும் நிறைகோல்போல (ஏக்கம் தாக்கமற்று) நின்று, ஒருபால் கோடாமை சான்றோர்க்கு அணி - தம் நெஞ்சை ஒருவர் பக்கமாகக் கோடவிடாமை சான்றோர்க்கு அழகு.

[சமன்வரை - நிறுக்கும் கருவியாகிய வெள்ளிக்கோலின் இரண்டு தலைகளும் சமனாக (ஒக்க) நிற்குமாறு செய்தற்குத் தூக்கும் கயிறு இடப்படும் வரை. ஏக்கம் தாக்கம் - உயர்வு தாழ்வு.]

இது, நடுவு நிலைமை வேண்டு மென்றது. ககஅ.

சொற்கோட்ட மில்லது செப்பம், ஒருதலையா
உட்கோட்ட மின்மை பெறின்

இ - ள் —செப்பம் கோட்டம் இல்லது சொல் - நடுவு நிலைமையாவது கோட்டம் இல்லாததாகிய சொல்லாம், ஒருதலையாக உட்கோட்டம் இன்மை பெறின் - அது அவராது மனக்கோட்டமின்மையோடு கூடுமாயின். [கோட்டம் - கோணுதல். ஒருதலையாக என்பது ஈறு கெட்டு நின்றது.]

நடுவு நிலைமையாவது செவ்வை சொல்லுத லென்பதூஉம், இருபொருட் பொதுமொழி கூறுத லென்பதூஉம் இது கூறிற்று.

[இருபொருட் பொதுமொழி - இருவர் கூறும் பொருள்களுக்கும் பொதுவாக நின்று கூறும்மொழி.] ககக.

தகுதி யெனவொன்று நன்றே, பகுதியால்
பாற்பட் டொழுகப் பெறின்.

இ-ள் — தகுதி என ஒன்று நன்றே - நடுவுநிலைமை யென்று சொல்லப்படுவதொன்று நன்றே, பகுதியால் பாற்பட்டு ஒழுகப் பெறின் - அவரவர் பகுதி நிலைமையோடே (அறத்தின்) பாற்பட்டு ஒழுகப் பெறுமாயின்.

[ஆல் என்பது உடனிகழ்ச்சியில் வந்தது.]

இது, அவரவர் பகுதிநிலைமையோடும் அறத்தோடும் பொருந்தச் செய்தலே தகுதியா மென்றது. கக௩.

வாணிகம் செய்வார்க்கு வாணிகம், பேணிப்
பிறவும் தமபோல் செயின்.

இ-ள் — வாணிகம் செய்வார்க்கு வாணிகம் - வாணிகம் செய்வார்க்கு வாணிகம் ஆம், பிறவும் தமபோல் பேணி செயின் - பிறர் பொருள்களையும் தமது பொருள்கள்போலப் பேணிச் செய்வாராயின். [ஆம் - பலிக்கும்.]

இது, வாணிகம் செய்வார் பிறர் பொருளையும் தம் பொருள் போலப் பேணவேண்டு மென்றது. கக௪.

கேடும் பெருக்கமும் இல்லல்ல; நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க் கணி.

இ-ள் .—கேடும் பெருக்கமும் இல் அல்ல - கேடுவருதலும் ஆக்கம் வருதலும் (உலகத்து) இல்லை யல்ல ; நெஞ்சத்துக் கோடாமை சான்றோர்க்கு அணி - (அவ்விரண்டினுள்ளும் யாதானும் ஒன்று வந்தகாலத்துத் தம்) நெஞ்சு கோடாம லொழுகல் சான்றோர்க்கு அழகாம்.

இது, தாம் கேடுற்ற இடத்தும் தம் நெஞ்சம் கோடாமல் ஒழுகல் வேண்டு மென்றது. கக௫.

கெடுவாக வையா துலகம், நடுவாக
நன்றிக்கண் தங்கியான் தாழ்வு.

இ - ள் :—நடுவாக நன்றிக்கண் தங்கியான் தாழ்வு - நடுவாக நன்மையின்கண்ணே நின்றவன் (அதுகாரணமாகப் பொருட் கேட்டை அடைவானாயின், அப்) பொருட் கேட்டை, உலகம் கெடுவாக வையாது-உலகத்தார் கேடாகச் சொல்லார். (ஆக்கத்தோடே எண்ணுவர்.)

நடுவுநிலைமை யுடையான் கேடுற்றால் அதனைக் கேடாகக் கருதார் உலகத்தார் என்று இது கூறிற்று. கக௬.

நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல்.

இ - ள்.—நன்றே தரினும் - பெருமையே தரினும், நடுவு இகந்து ஆம் ஆக்கத்தை - நடுவுநிலைமையை நீங்கிவரும் ஆக்கத்தை, அன்றே ஒழிய விடல் - (அது வருவதற்குத் தொடக்கமான) அன்றே ஒழிய விடுக.

இது, நடுவு நிலைமையை விடுதலால் வரும் பொருள் பெருமை தராதென்றது. கக௭.

கெடுவல்யான் என்ப தறிகதன் நெஞ்சம்
நடுவொரீஇ அல்ல செயின்.

இ - ள் :—தன் நெஞ்சம் நடுவு ஒரீஇ அல்ல செயின் - தன் நெஞ்சு நடுவுநிலைமையை நீங்கி நடுவல்லாதவற்றைச் செய்யுமாயின், யான் கெடுவல் என்பது அறிக - (அஃது ஏதுவாக) 'யான் கேடுறுவேன்' என்பதனை (ஒருவன்) அறிக.

இது, மனம் நடுவுநிலைமையை விட்டு நீங்குமாயின், அது தனது கேட்டிற்கு முதற்குறி யென்றது. கக௮.

*தக்கார் தகவிலார் என்ப தவரவர்*
*எச்சத்தால் காணப் படும்.*

இ - ள் —தக்கார் தகவிலார் என்பது - செவ்வை யுடையார் செவ்வையிலார் என்பது, அவரவர் எச்சத்தால் காணப்படும் - அவரவர் மக்களாலே காணப்படும்.

இது, தக்கார் தகவிலார் என்னும் பெயர் தம்மளவிலே நிற்ப தன்றியும் தம்மக்களையும் விடா தென்றது. ௧௧௪.

*செப்பம் உடையவன் ஆக்கம், சிதைவின்றி*
*எச்சத்திற் கேமாப் புடைத்து.*

இ - ள் .—செப்பம் உடையவன் ஆக்கம் - நடுவு நிலைமையுடையவனது செல்வம், சிதைவு இன்றி - (தன்னளவிலும்) கேடின்றியே நின்று, எச்சத்திற்கும் ஏமாப்பு உடைத்து - தன் வழியுள்ளார்க்கும் (கேடுவராமல் காக்கும்) காவலதனை யுடைத்து. [எச்சத்திற்கும் என்பது உம்மை கெட்டு நின்றது.]

இது, நடுவுநிலைமை யுடையார் செல்வம் அழியா தென்றது.

## ௧௫-வது.—பொறை யுடைமை.

பொறையுடைமையாவது, தமக்குத் துன்பம் செய்தார் (க்குத் தாமும் துன்பம் செய்யாது அவர்) மாட்டுச் சென்ற வெகுளியை மீட்டல். [நடுவுநிலைமையை விடாது ஒழுகுதற்குப் பொறையுடைமை இன்றியமையாத தொன்றாதலின், இஃது அதன்பின் கூறப்பட்டது.]

*பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை*
*மறத்தல் அதனினும் நன்று.*

இ - ள் :—இறப்பினை என்றும் பொறுத்தல் (நன்று) - (பிறர் செய்த) மிகையினை என்றும் பொறுத்தல் நன்று; அதனை மறத்தல் அதனினும் நன்று - மிகையினை மறத்தல் பொறையினும் நன்று

[மிகை - பிழை. நன்று என்பது முன்னரும் கூட்டி யுரைக் கப்பட்டது.]

பிறர் செய்த மிகையைப் பொறுத்தல் நன்றென்பதூஉம், அதனை மறத்தல் அதனினும் சிறந்த நன்றென்பதூஉம் இது கூறிற்று.

திறனல்ல தற்பிறர் செய்யினும், நோநொந்
தறனல்ல செய்யாமை நன்று.

இ - ள்:—திறன் அல்ல தன் பிறர் செய்யினும் - தகுதியில்லாதவற்றைத் தனக்குப் பிறர் செய்தாராயினும், நோ நொந்து அறன் அல்ல செய்யாமை நன்று - (தகுதியல்லாதவற்றைத் தானும் செய்தால் அவர்க்கு உளதாம்) நோவுக்கு நொந்து அறமல்லாதவற்றைச் செய்யாமை நன்று. [நோ - துன்பம். நொந்து - வருந்தி.]

இது, தனக்குப் பிறர் தீங்கு செய்யினும் தான் அவர்க்குத் தீங்கு செய்யலாகா தென்றது. கஉஉ.

நிறையுடைமை நீங்காமை வேண்டின், பொறையுடைமை
போற்றி ஒழுகப் படும். [டை

இ - ள்:—நிறையுடைமை நீங்காமை வேண்டின் - (தன்னினின்று) நிறையுடைமை நீங்காதிருத்தல் வேண்டுவானாயின், பொறையுடைமை போற்றி ஒழுகப்படும் - (தான்) பொறையுடைமையைப் பாதுகாத்து ஒழுகவேண்டும்.

நிறையென்பது காப்பன காத்துக் கடிவன கடிந்தொழுகும் ஒழுக்கம். [படும் என்பது வேண்டும் என்னும் பொருளில் வந்தது.]

இது, பொறையுடைமையால் நிறையுடைமை நிலைபெறு மென்றது. கஉஙூ.

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை.

## பொறையுடைமை

இ - ள் —அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல - (தன்னை) அகழ்வாரைத் தாங்குகின்ற நிலம்போல, தம்மை இகழ்வார் பொறுத்தல் தலை - தம்மை இகழ்பவரைப் பொறுப்பது தலைமையாம். [அகழ்தல் - தோண்டல்.]

இது, பிறர் மிகையைப் பொறுத்தாரென்று இகழாது அவன் பொறுத்ததைத் தலைமையா(ன ஒழுக்கமா)கக் கொள்வார் உலகத்தாரென்றது. கஉச.

மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
தகுதியான் வென்று விடல்.

இ - ள் —மிகுதியான் மிக்கவை செய்தாரை - செல்வமிகுதியாலே மிகையானவற்றைச் செய்தவரை, தாம் தம் தகுதியான் வென்று விடல் - தாம் தமது பொறுமையினாலே வென்றுவிடுக.

இது, மிகை செய்தாரைப் பொறுத்தல் தோல்வியாகாதென்றும் அதுதானே வெற்றியாமென்றும் கூறிற்று. கஉரு.

இன்மையுள் இன்மை விருந்தொரால் ; வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை.

இ - ள் —இன்மையுள் இன்மை விருந்து ஒரால் - வலியின்மையுள் வலியின்மையாவது விருந்தினரை நீக்குதல்; வன்மையுள் வன்மை மடவார்ப் பொறை - வலியுடைமையுள் வலியுடைமையாவது அறியாதாரைப் பொறுத்தல்.

[ஒரால் என்பது ஆல் விகுதிபெற்ற தொழிற்பெயர்.]

இது, விருந்தினரை விலக்குதல் எளிமையுள் எளிமையென்றும், அறிவிலார் செய்த மிகையைப் பொறுத்தல் வலிமையுள் வலிமையென்றும் கூறிற்று. கஉசா.

ஒறுத்தாரை ஒன்றாக வையாரே; வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போல் பொதிந்து.

# இல்லறவியல்

இ - ள் —ஒறுத்தாரை ஒன்றாக வையார் - (தமக்குத் துன்பம் செய்தாரை மாறாக) ஒறுத்தாரை ஒரு பொருளாக மதித்துவையார், பொறுத்தாரை பொன்போல் பொதிந்து வைப்பர் - பொறுத்தாரைப் பொன்னைப் பொதிந்து வைத்தல்போலப் போற்றிவைப்பர் (உலகத்தார்).

[ஏகாரம் அசை. ஒறுத்தல் - தண்டித்தல். பொதிந்து வைத்தல் - மறைத்து வைத்தல் - போற்றி வைத்தல்.]

இது, மிகை செய்தாரைப் பொறுத்தோரை உலகத்தார் பெரியோராகப் போற்றுவரென்றது. கஉஎ.

ஒறுத்தார்க் கொருநாளை இன்பம்; பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்.

இ - ள் :—ஒறுத்தார்க்கு ஒருநாளே இன்பம் - (மிகை செய்தாரை) ஒறுத்தவர்க்கு (ஒறுத்த அற்றை) ஒரு நாளே இன்பம் (உண்டாம்); பொறுத்தார்க்கு பொன்றும் துணையும் புகழ் - பொறுத்தவர்க்குச் சாம் அளவும் புகழ் (உண்டாம்).

இது, மிகை செய்தாரைப் பொறுத்தார்க்கு இன்பமும் புகழும் உண்டாமென்றது. கஉஅ

உண்ணாது நோற்பார் பெரியர்; பிறர்சொல்லும்
இன்னாச்சொல் நோற்பாரின் பின்.

இ - ள் —உண்ணாது நோற்பார் பெரியர் - உண்ணாது நோற்பார் எல்லாரினும் பெரியர், பிறர் சொல்லும் இன்னாத சொல் நோற்பாரின் பின் - பிறர் சொல்லும் கடுஞ்சொல்லைப் பொறுப்பாரின்பின்.

இது, பிறர் சொல்லும் தீச்சொற்களைப் பொறுப்பவர் தவம் பண்ணுவாரினும் பெரியரென்றது. கஉகூ.

துறந்தாரின் தூய்மை யுடையார், இறந்தார்வாய்
இன்னாச்சொல் நோற்கிற் பவர்.

இ - ள் :—இறந்தார் வாய் இன்னுச்சொல் நோற்கிற்பவர் - மிகுந்தாரது வாயினின்று வரும் தீச்சொற்களைப் பொறுக்குமவர், துறந்தாரின் தூய்மை யுடையார் - துறந்தவர்களைப்போலத் தூய்மை யுடையார்.

[மிகுந்தார் - நெறியைக்கடந்தார் - பிழைசெய்தார். தூய்மை யுடையார் - தூய ஒழுக்கத்தை யுடையார்.]

இது, மிகைசெய்தாரைப் பொறுப்பவா பற்றறத் துறந்தவரோ டொப்ப ரென்றது. கரு0.

## கச-வது.—ஒழுக்க முடைமை.

ஒழுக்கமுடைமையாவது, தத்தம் நிலைக்கு ஏற்ற ஒழுக்க முடையராதல். [இது, பொறையுடைமை சாரபாக நிகழ்தலின் அதன்பின் கூறப்பட்டது.]

பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம், தெரிந்தோம்பித்
தேரினும் அஃதே துணை.

இ - ள் :—பரிந்து ஓம்பி ஒழுக்கம் காக்க - வருந்திப் போற்றி ஒழுக்கத்தினைக் காக்க, தெரிந்து ஓம்பி தேரினும் அஃதே துணை - (எல்லா அறங்களினும் நல்லதனைத்) தெரிந்து (அதனையும்) தப்பாமல் ஆராய்ந்து பாரப்பினும் (தமக்கு) ஒழுக்கமே துணையா மாதலால்.

இஃது, ஒழுக்கத்தைக் காக்க வேண்டு மென்றது. கருக.

உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்.

இ - ள் :—அறிவு இலாதார் பல கற்றும் - அறிவில்லாதவர் பல நூல்களைக் கற்றாலும், உலகத்தோடு ஒட்ட ஒழுகல் கல்லார் - உயர்ந்தாரோடு பொருந்த ஒழுகுதலை அறியார்.

ஒழுக்கமாவது உயாந்தாா ஒழுகின நெறியில் ஒழுகுதல் என்பதூஉம் அவ்வொழுக்கம் கல்வியினும் வலியுடைத் தென்பதூஉம் இது கூறிற்று. கருஉ.

மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான் ;
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்.

இ - ள் :—ஓத்து பார்ப்பான் மறப்பினும் கொளலாகும் - நூல்களைக் கற்பவன் (அவற்றை) மறந்தானாயினும் பின்னும் கற்றுக்கொள்ளலாம். ஒழுக்கம் குன்ற பிறப்பு கெடும்-ஒழுக்கம் குறையுமாயின் அவன் பிறப்பின்பயன் கெடும்.

[பிறப்பின் பயன் - மக்கட்பிறப்பை அடைந்ததனால் அடையும் பயன். பிறப்பு என்பது ஆகுபெயர், அதன் பயனுக்காயினமையால்.]

இது, கல்வியினும் ஒழுக்கம் வலிதான வாறு கூறிற்று. ௧௩௩.

ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர், இழுக்கத்தின்
ஏதம் படுபாக் கறிந்து.

இ - ள் :—ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் - ஒழுக்கத்தின் நின்று நீங்கார் அறிவுடையோர், இழுக்கத்தின் ஏதம் படுபாக்கு அறிந்து - (ஒழுக்கத்தைத்) தப்புதலால் குற்றம் வருதலை யறிந்து.

[படுபாக்கு என்பது தொழிற்பெயர் : பாக்கு - விகுதி.]

இஃது, அறிவுடையார் ஒழுக்கத்தினைத் தவிராரென்றது. குற்றம் வருதல் பின்னர்க் காணப்படும். ௧௩௪.

ஒழுக்கம் உடைமை குடிமை ; இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்.

இ - ள் :—ஒழுக்கம் உடைமை குடிமை - (ஒருவன்) ஒழுக்கம் உடையவனாக உயர்ந்த குலத்தானாகும் ; இழுக்கம் இழிந்த பிறப்பாய் விடும் - (ஒருவன் ஒழுக்கத்தைத்) தப்புதலால் இழிந்த குலத்தானாகும்.

ஒழுக்கத்தால் குலம் ஆகுமென்றும், ஒழுக்கமின்மையால் குலம் கெடுமென்றும் இது கூறிற்று. ௧௩௫.

அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன் றில்லை
ஒழுக்கம் இலான்கண் உயர்வு.

# ஒ ழு க் க மு டை மை

இ - ள் —அழுக்காறு உடையான்கண் ஆக்கம் போன்று - மனக்கோட்ட முடையவன் மாட்டு ஆக்கம் (இல்லையானாற்) போல, ஒழுக்கம் இலான்கண் உயர்வு இல்லை - ஒழுக்கம் இல்லாதான்மாட்டு மிகுதி இல்லையாம். [மிகுதி - உயர்ச்சி.]

இஃது, ஒழுக்க மில்லாதானுக்கு உயர்ச்சி இல்லை என்றது.

**ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை ; இழுக்கத்தின்**
**எய்துவர் எய்தாப் பழி.**

இ - ள் .—ஒழுக்கத்தின் மேன்மை எய்துவர் - ஒழுக்கத்தாலே (தாம் முன்னர்) எய்தாத மேம்பாட்டை எய்துவர். இழுக்கத்தின் எய்தா பழி எய்துவர் - ஒழுக்கமின்மையாலே (தமக்கு) அடாத பழியை எய்துவர்.

[எய்தா என்பது ஈறுகெட்டு நின்றது. அடாத - தகாத.]

இஃது, ஒழுக்கத்தால் புகழும், ஒழுக்கமின்மையால் இகழும் அடைவரென்பது. க௩எ.

**நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் ; தீயொழுக்கம்**
**என்றும் இடும்பை தரும்.**

இ - ள் —நன்றிக்கு நல் ஒழுக்கம் வித்து ஆகும் - முத்திக்கு நல்ல ஒழுக்கம் விதையாகும். தீ ஒழுக்கம் என்றும் இடும்பை தரும் - தீய ஒழுக்கம் என்றும் இடும்பையைத் தரும்.

என்றும் - இருமையின் கண்ணும்.

நல்லொழுக்கம் இன்பத்தையும் தீயொழுக்கம் துன்பத்தையும் தருமென்று இது கூறிற்று. க௩அ.

**ஒழுக்கம் உடையவர்க் கொல்லாவே தீய**
**வழுக்கியும் வாயாற் சொலல்.**

இ - ள்.—தீய வழுக்கியும் வாயால் சொலல் - தீமை பயக்கும் சொற்களை மறந்தும் வாயாற் சொல்லுதல், ஒழுக்கம் உடையவர்க்கு ஒல்லாது - ஒழுக்கம் உடையாருக்கு இயலாது. [ஏகாரம், அசை.]

இஃது, ஒழுக்கமுடையார் தீய சொற்களைச் சொல்லாரென்றது. கஙகூ.

ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.

இ - ள்.—ஒழுக்கம் விழுப்பம் தரலால் - ஒழுக்கமுடைமை மேன்மையைத் தருதலானே, ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் - அவ்வொழுக்கத்தைத் தனது உயிரைப் பாட்டிலும் காக்கவேண்டும்.

[படும் என்பது வேண்டும் என்னும் பொருளில் வந்தது.]

மேற்கூறிய நன்மையெல்லாம் தருதலின் ஒழுக்கத்தினைத் தப்பாமல் செய்ய வேண்டுமென்று இது வலியுறுத்தியது. கசo.

## கரு-வது.—பிறனில் விழையாமை.

பிறனில் விழையாமையாவது, பிறனுடைய மனையாளது தோள் நலம் விரும்பாமை. [இது, விலக்கவேண்டிய தீயொழுக்கங்களி லெல்லாம் முதன்மைவாய்ந்த தாதலால், ஒழுக்கமுடைமையின்பின் கூறப்பட்டது.]

அறனியலான் இல்வாழ்வான் என்பான், பிறனியலாள்
பெண்மை நயவா தவன்.

இ - ள்:—அறன் இயலான் இல்வாழ்வான் என்பான் - அற நெறியானே இல்வாழ்வான் என்று சொல்லப்படுமவன், பிறன் இயலாள் பெண்மை நயவாதவன் - பிறன் வழியிற் செல்பவளது பெண்மையை விரும்பாதவன்.

[பெண்மை என்பது அவளது நலத்தை உணர்த்தி நின்றது.]
இது, பிறனில் விழையாமை வேண்டுமென்றது. கசக.

# பிறனில் விழையாமை

பிறன்பொருளாட் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்
தறம்பொருள் கண்டார்கண் இல்

இ - ள். — பிறன் பொருளாள் பெட்டு ஒழுகும் பேதைமை-பிறனுடைய பொருளாயிருப்பவளை விரும்பி ஒழுகுகின்ற அறியாமை, ஞாலத்து அறம் பொருள் கண்டார்கண் இல் - உலகத்து அறம் பொருள் அறிந்தாரமாட்டு இல்லையாம்.

[அறம் - அறநூல். பொருள் - பொருள்நூல்.]

இது, பிறனில் விழைதல் மறமென்றும் களமென்றும் கூறிற்று. கசஉ.

அறன்கடை நின்றாரு ளெல்லாம் பிறன்கடை
நின்றாரிற் பேதையார் இல்.

இ - ள். — அறன்கடை நின்றாருளெல்லாம் - காமத்தின் கண்ணே நின்றாரெல்லாருள்ளும், பிறன்கடை நின்றாரின் பேதையார் இல் - பிறனொருவன் கடைத்தலை பற்றி நின்றவரைப்போல் அறியாதார் இல்லை. [கடைத்தலை - தலைவாயில்.]

இது, பிறனில் விழைதல் பெரும்பேதைமை யென்றது. கச௩.

எனைத்துணைய ராயினும் என்னாம், தினைத்துணையும்
தேரான் பிறனில் புகல்.

இ - ள். — எனைத் துணையர் ஆயினும் - எல்லா அமைதியையும் உடையாராயினும், தினைத் துணையும் தேரான் பிறன் இல் புகல் - (அவர்) தினையளவும் தேராது பிறனுடைய இல்லிலே புகுவராயின், என் ஆம் - அவர் அமைதி யாதாகும்? (ஒன்றும் இல்லாததாகும்.)

["யாமெய்யாக் கண்டவற்றுள்" என்னும் தொடக்கக் குறளின்கீழ்க் குறிக்கப்பட்ட தொல்காப்பியச் சூத்திர விதிப்படி தேரான் என்னும் ஒருமைப்பெயர் தேரார் என்னும் பன்மைப்பெயர்க் காயிற்று. அமைதி - நிறைவு - நற்குண நிறைவு. தினைத்துணையும் - சிறிதும்.]

பிறனில் விழைவால் வரும் குற்றம் கூறுவார், முற்பட எல்லாக் குணமும் அழியுமென்று கூறினார். கசச.

**விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரில்**
**தீமை புரிந்தொழுகு வார்.**

இ - ள் .—தெளிந்தார் இல் தீமை புரிந்து ஒழுகுவார் - தம்மைத் தெளிந்தார் இல்லின்கண்ணே தீமையைப் புரிந்து ஒழுகுவார், மன்ற விளிந்தாரின் வேறு அல்லர் - மெய்யாகச் செத்தாரின் வேறல்லர்.

அவர் அறம் - பொருள் - இன்பம் எய்தாமையின், பிணத்தோடு ஒப்பரென்றார். கசரு.

**எளிதென இல்லிறப்பான் எய்துமெஞ் ஞான்றும்**
**விளியாது நிற்கும் பழி.**

இ - ள் —எளிது என இல் இறப்பான் - (தனக்கு) எளிதென்று நினைத்து (ப் பிறனுடைய) இல்லின்கண்ணே மிகுமவன், எஞ்ஞான்றும் விளியாது நிற்கும் பழி எய்தும் - எல்லாநாளும் அழியாது நிற்கும் பழியைப் பெறுவான்.

[மிகுமவன் - மிகை செய்யுமவன் - பிழை செய்யுமவன்.]

இஃது, அவனுக்கு அழியாத பழி உண்டாமென்றது. கசசு.

**பகைபாவம் அச்சம் பழியென நான்கும்**
**இகவாவாம் இல்லிறப்பான் கண்.**

இ - ள் :—இல் இறப்பான்கண் - (பிறன்) இல்லின்கண்ணே மிகுவான் மாட்டு, பகை பாவம் அச்சம் பழி என நான்கும் இகவாவாம் - பகையும் பாவமும் அச்சமும் பழியும் என்னும் நான்கு பொருள்களும் நீங்காவாம்.

இஃது, அவனைவிட்டுப் பகையும் பாவமும் அச்சமும் பழியும் நீங்கா வென்றது. கசஎ.

## பிறனில் விழையாமை

பிறன்மனை நோக்காத பேராண்மை, சான்றோர்க்
கறனொன்றோ ஆன்ற வொழுக்கு.

இ - ள் :—பிறன் மனை நோக்காத பேராண்மை - பிறனது மனையாளைப் பாராத பெரிய ஆண்மைதானே, சான்றோர்க்கு அறன் ஒன்றோ ஆன்ற ஒழுக்கு - சான்றோர்க்கு அறனும் ஆன்ற ஒழுக்கமுமாம்.

[ஒன்றோ என்பது எண்ணுப்பொருளில் வந்தது.]

இது, பிறன்மனை நோக்காமை அறனும் ஒழுக்கமுமா மென்றது.

நலக்குரியார் யாரெனின், நாமநீர் வைப்பில்
பிறற்குரியாள் தோடோயா தார்.

இ - ள் :—நாம நீர் வைப்பில் - அச்சத்தைத் தருகின்ற நீர் சூழ்ந்த உலகத்தில், நலக்கு உரியார் யார் எனின் - நலத்துக்கு உரியார் யார் எனில், பிறற்கு உரியாள் தோள் தோயாதார் - பிறனுக்கு உரியவளது தோளைத் தீண்டாதார்.

நலக்குரியார் - விரும்புதற்குரியார். [நலத்துக்கு என்பது நலக்கு எனக் குறைந்துநின்றது.]

இது, பிறனில் விழையாதார் யாவராலும் விரும்பப்படுவ ரென்றது. ௧௪௯.

அறன்வரையான் அல்ல செயினும், பிறன்வரையாள்
பெண்மை நயவாமை நன்று.

இ - ள் :—அறன் வரையான் அல்ல செயினும் - அறத்தை வரையாதே அறமல்லாதன செய்யினும், பிறன் வரையாள் பெண்மை நயவாமை நன்று - பிறன் இடத்தாளானவளது பெண்மையை விரும்பாமை நன்று.

[வரையாமை - உரித்தாகச் செய்யாமை. அல்ல - அறன் அல்லாதவை - மறங்கள்.]

இது, பிறனில் விழையான் ஓர் அறனும் செய்திலனாயினும், பல நன்மைகளை அடைவானென்றது. கருO.

## ககூ-வது.—வெகுளாமை.

வெகுளாமையாவது, வெகுளுதற்குக் காரணமுள்ள இடத்தும் வெகுளாராதல். [வெகுளுதற்கு காரணமான பிறனில் விழைதலைச் செய்தாரமாட்டும் வெகுளுதல் ஆகாதென்றற்கு இது பிறனில்விழையாமையின் பின்கூறப்பட்டது.]

மறத்தல் வெகுளியை யார்மாட்டும், தீய
பிறத்தல் அதனான் வரும்.

இ - ள் .—யார்மாட்டும் வெகுளியை மறத்தல் - யார்மாட்டும் வெகுளியைச் செய்தலை மறக்க, தீய பிறத்தல் அதனான் வரும் - தீயன பிறத்தல் அவ்வெகுளியானே வருமாதலான்.

[தீயன - தீவினைகளும் அவற்றின் பயனாகிய துன்பங்களும். பிறத்தல் - உண்டாதல்.]

இது, வெகுளாமை வேண்டுமென்றது. கருக.

செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான்; அல்லிடத்
காக்கிலென் காவாக்கா லென்? [துக்

இ - ள் .—செல்லிடத்துக் காப்பான் சினம் காப்பான் - இயலும் இடத்தில் தனது வெகுளியைக் காப்பவனே வெகுளியைக் காப்பவன் ஆவன்; அல் இடத்து காக்கில் என் காவாக்கால் என் - இயலாத இடத்தில் அதனைத் தவிர்த்ததினால் (தனக்கு உண்டாகும் பெருமை) யாது? தவிராததினால் (வெகுளப்பட்டார்க்கு உண்டாகும் சிறுமை) யாது?

[இயலும் இடம் - (வெகுளி) செல்லும் இடம்-வெகுளிசென்று வருத்தக்கூடிய இடம்.]

இது, வலியவன் வெகுளாமை வேண்டுமென்றது. கருஉ.

## வெகுளாமை

இணரெரி தோய்வன்ன இன்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று.

இ-ள் :—இணா எரி தோய்வு அன்ன இன்னா செயினும் - தொடாவுபட்ட நெருப்பு மேன்மேலும் வந்துறுதல்போல ஒருவன் தனக்கு இன்னாதவற்றைப் பலகால் செய்யினும், புணரின் வெகுளாமை நன்று - கூடுமாயின் வெகுளாதொழில் நன்று.

மேல் வலியவன் பொறுக்க வேண்டும் என்றவர், அவன் பொறுக்குங்கால் (பொறுக்கப்படுவோா) சிமைசெய்யினும் பொறுக்க வேண்டு மென்றுா. கருஅ.

செல்லா இடத்தும் சினம்தீது ; செல்லிடத்தும்
இல்லதனின் தீய பிற.

இ-ள் —செல்லா இடத்தும் சினம் தீது - இயலாத இடத்தும் சினம் தீது, செல் இடத்தும் அதனின் தீய பிற இல் - இயலுமிடத்திலும் அதனின் தீதாயிருப்பன பிற இல்லை.

[செல்லாத என்பது ாறு கெட்டு நின்றது.]

இது, செல்லிடத்தும் செல்லாத இடத்தும் சினம் தனக்குத் தீமையை விளைக்கும் என்றது. கருச.

தன்னைத்தான் காக்கச் சினங்காக்க ; காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்.

இ-ள் .—தன்னைத்தான் காக்க சினம் காக்க - ஒருவன் தன்னைத்தான் காக்க வேண்டுவனுயின் சினம் தோற்றுமற் காக்க; காவாக்கால் சினம் தன்னையே கொல்லும் - காவானுயின சினம் தன்னையே கொல்லும்.

இது, சினத்தால் தனக்கு உயிாக்கேடு வருமென்றது. கருரு.

சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்
ஏமப் புணையைச் சுடும்.

## இல்லறவியல்

இ - ள் .—சினம் என்னும் சேர்ந்தாரைக்கொல்லி - சினம் என்றுசொல்லப்படும் நெருப்பு, ஏமம் இனம் என்னும் புணையைச் சுடும் - தான் துன்பக்கடலில் அழுந்தாமல் கரையேற விடுகின்ற நட்டோராகிய புணையைச் சுடும்.

சேர்ந்தாரைக் கொல்லி-நெருப்பு. இது காரணக்குறி [நூற்றுவரைக் கொல்லி என்பதுபோல].

இது, சினம் தன்னை அடுத்தாரைக் கொல்லு மென்றது. கருகு.

சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு,
நிலத்தெறிந்தான் கைபிழையா தற்று.

இ - ள் —சினத்தை பொருள் என்று கொண்டவன் கேடு - சினத்தைப் பொருளாகக் கொண்டவன் கெடுதல், நிலத்து எறிந்தான் கை பிழையாதது அற்று - நிலத்து எறிந்தவன் கை தப்பாமல் படுவது போலும்.

[எறிதல்-அடித்தல். பிழையாதது என்பது குறைந்துநின்றது.]

இது, சினத்தால் தனக்குப் பொருட்கேடு வருமென்றது.கருஎ.

நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்
பகையும் உளவோ பிற.

இ - ள் —நகையும் உவகையும் கொல்லும் சினத்தின் - நகுதலையும் மகிழ்தலையும் கெடுக்கும் சினத்தைப்போல, பகையும் பிற உளவோ - பகையாயிருப்பன வேறு சில உளவோ ?

இது, சினத்தால் தனக்கு இன்பக்கேடு வரு மென்றது. கருஅ.

உள்ளிய வெல்லாம் உடனெய்தும், உள்ளத்தான்
உள்ளான் வெகுளி எனின்.

இ - ள் .—உள்ளத்தால் வெகுளி உள்ளான் எனின் - தன் நெஞ்சினால் வெகுளியை நினையானாகில், உள்ளிய எல்லாம் உடன் எய்தும்- தான் நினைத்தன எல்லாம் ஒரேகாலத்துக் கூடப்பெறும்.

இது, சினத்தை விடுதல் நினைத்தவற்றையெல்லாம் எய்துவிக்கு மென்றது. கருசு.

இறந்தார் இறந்தார் அனையர் சினத்தைத்;
துறந்தார் துறந்தார் துணை.

இ - ள் —சினத்தை இறந்தார் இறந்தார் அனையர் - சினத்தை மிகுத்தார் செத்தாரோ டொப்பர், துறந்தார் துறந்தார் துணை - அதனை ஒழிந்தார் (எல்லாப் பொருளையும்) துறந்தாரோ டொப்பர்.

இது, வெகுளாதார் பெரிய ரென்றது. கசு௦.

## கஎ-வது—இன்னா செய்யாமை

இன்னா செய்யாமையாவது, தமக்கு இன்னாதனவாகத் தோன்று மவற்றைப் பிறர்க்குச் செய்யாமை. இது வெகுட்சி பிறந்து நிகழ்வ தொன்றாதலின் வெகுளாமையின்பின் கூறப்பட்டது.

[இன்னா - துன்பம் தரும் செயல்கள்.]

இன்னா எனத்தான் உணர்ந்தவை துன்னாமை
வேண்டும் பிறன்கண் செயல்.

இ - ள் —தான் இன்னா என உணர்ந்தவை - தான் இன்னாத (இவை) என்று அறிந்தவற்றை, பிறன்கண் செயல் துன்னாமை வேண்டும் - பிறர்க்குச் செய்தலை மேவாமை வேண்டும்.

இஃது, இன்னா செய்யாமை வேண்டு மென்றது. கசுக.

கறுத்தின்னா செய்தவக் கண்ணும் மறுத்தின்னா
செய்யாமை மாசற்றார் கோள்.

இ - ள் .—கறுத்து இன்னா செய்தவக் கண்ணும் - (தாம் செய்த குற்றத்தினாலே) வெகுண்டு இன்னாதவற்றை (த்தமக்குச்) செய்தவன் மாட்டும், மறுத்து இன்னா செய்யாமை மாசு அற்றார் கோள் - (தாம் அதற்கு) மாறாகப் பின்பு இன்னாத செய்யாமை குற்றமற்றார் கோட்பாடு.

இது, தமக்கு இன்னா செய்தார்க்கும் தாம் இன்னா செய்ய லாகா தென்றது. ௧௬௨.

செய்யாமை செற்றார்க்கும் இன்னாத செய்தபின்
உய்யா விழுமம் தரும்.

இ - ள் :—செய்யாமை செற்றார்க்கும் இன்னாத செய்தபின் - (தான்) ஒரு குற்றம் செய்யாதிருக்க (த் தனக்கு) இன்னாத செய்த வர்க்கும் இன்னாத செய்தபின், உய்யா விழுமம் தரும் - (அஃது) உய்வில்லாத நோயைத் தரும்.

[உய்வு - உய்தல் - பிழைத்தல்.]

இது, காரணமின்றி இன்னா செய்பவர்க்கும் பொல்லாங்கு செய்தலைத் தவிரவேண்டு மென்றது. ௧௬௩.

சிறப்பீனும் செல்வம் பெறினும், பிறர்க்கின்னா
செய்யாமை மாசற்றார் கோள்.

இ - ள் :—சிறப்பு ஈனும் செல்வம் பெறினும் - மிகுதியைத் தரு கின்ற செல்வத்தைப் பெறினும், பிறர்க்கு இன்னா செய்யாமை மாசு அற்றார் கோள் - பிறர்க்கு இன்னாதவற்றைச் செய்யாமை குற்ற மற்றார் கோட்பாடு.

பழிவாராத செல்வம் பெறினும், இன்னாத செய்தலைத் தவிர வேண்டும் என்றது இது. ௧௬௪.

எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானும்
மாணா செய்யாமை தலை.

இ - ள் :—எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் - யாதொ ன்றாயினும் எந்நாளும் யார்மாட்டும், மனத்தானும் மாணா செய்யா மை தலை - மனத்தினாலும் இன்னாதவற்றைச் செய்யாமை நன்று.

[யாதொன்றாயினும் - ஒருசிறிதாயினும். எனைத்தானும் என்ப தில் ஆயினும் என்பது ஆனும் எனக்குறைந்து நின்றது.]

இஃது, இன்னாசெய்யாமை தலையான அறமாமென்றது. ௧௬௫.

## இன்னா செய்யாமை

அறிவினன் ஆகுவ துண்டோ பிறிதுநோய்
தன்னோய்போல் போற்ருக் கடை

இ - ள் —பிறிது நோய் தன்னோய்போல் போற்ருக் கடை-பிறி நோர் உயிர்க்கு உறும் நோயைத் தனக்குறு நோய்போலக் காவாத இடத்து, அறிவினன் ஆகுவது உண்டோ - அறிவுடையனுகிய அதனுல் ஆகுவது உண்டோ ? (இல்லை).

[ஆகுவது - ஆகும் பயன்.]

இஃது, அறிவுடையார் இன்னா செய்யாரென்றது. கருரு.

தன்னுயிர்க் கின்னாமை தானறிவான் என்கொலோ
மன்னுயிர்க் கின்னா செயல்.

இ - ள் .—தன் உயிர்க்கு இன்னுமை தான் அறிவான் - தன் உயிர்க்கு உள்ள இன்னுமையை (உயிரில்லாப் பொருள்கள் போல அறியாது கிடத்தலன்றி)த் தான் அறியுமவன், மன் உயிர்க்கு இன்னா செயல் என்கொலோ - (பின்னை) நிலைபுள்ள (பிற) உயிர்களுக்கு இன்னுதவற்றைச் செய்கின்றது யாதனைக் கருதியோ ?

[கொல் என்பது அசை.]

இஃது, இன்னு செய்கின்றவர் அறிவிலா ரென்றது. கரு௭.

பிறர்க்கின்னு முற்பகல் செய்யின் தமக்கின்னு
பிற்பகல் தாமே வரும்.

இ - ள் :—பிறர்க்கு இன்னு முன்பகல் செய்யின் - பிறருக்கு இன்னுதவற்றை முற்பொழுது செய்யின், பின்பகல்தாமே தமக்கு இன்னு வரும் - பிற்பொழுதுதாமே தமக்கு இன்னுத வரும்.

. இன்னு செய்ததினுல் வரும் குற்றம் என்னை என்முர்க்கு, இது கூறப்பட்டது. கருஅ.

நோயெல்லாம் நோய்செய்தார் மேலவாம்; நோய்செய்
நோயின்மை வேண்டு பவர். [யார்

இ - ள். — நோய் எல்லாம் நோய் செய்தார் மேலவாம் - (இக் காலத்து நுகர்கின்ற) துன்பமெல்லாம் (முற்காலத்துப் பிறர்க்குத்) துன்பம் செய்தார்மாட்டே உள்ளனவாம்; (ஆதலால்), நோய் செய்யார் நோய் இன்மை வேண்டுபவர் - (இக்காலத்துப் பிறர்க்கு) துன்பத்தைச் செய்யார் (வருங்காலத்துத்) தமக்குத் துன்பம் வாராமையை வேண்டுவார்.

இஃது, எதிர்காலத்தில் துன்பம் நுகரவேண்டாதார் நிகழ்காலத்தில் துன்பம் செய்யலாகா தென்றது. கசுக.

இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்.

இ - ள்:—இன்னா செய்தாரை ஒறுத்தல் - இன்னாதன செய்தாரை ஒறுக்குமாறு (எதுவெனின்), அவர் நாண நல் நயம் செய்து விடல் - அவர் நாணும்படியாக நல்ல நயமுடையவற்றை (ஒருவன்) செய்துவிடுக (என்க).

[நயமுடையவற்றை - இன்பம் தரும் செயல்களை.]

இஃது, இன்னா செய்தாரை ஒறுக்கும் நெறி கூறிற்று. கஎ0.

## கஉ-வது—கொல்லாமை

கொல்லாமையாவது, யாதோர் உயிரையும் கொல்லாமை. இது, வெகுட்சி முதிர்ந்துழி நிகழ்வதொன்றாதலின், அதன்பின் கூறப்பட்டது.

தன்னுயிர் நீப்பினும் செய்யற்க, தான்பிறிது
இன்னுயிர் நீக்கும் வினை.

இ - ள்:—தன் உயிர் நீப்பினும் - (ஊனை உட்கொள்ளாக்கால்) தன் உயிர் நீங்குமாயினும், பிறிது இன் உயிர் நீக்கும் வினை செய்

யற்க - பிறிதொன்றினுடைய இனிய உயிரை நீக்கும் தொழிலினைச் செய்யற்க.

உயிர்க்கேடு வருங்காலத்து நோய் மருந்தாக ஊனை உட்கொள்ளற்குக் கொல்லுதல் குற்றமன்றென்பாரைக் குறித்து இது கூறப்பட்டது. களக.

**ந**ல்லா றெனப்படுவ தியாதெனின், யாதொன்றும்
கொல்லாமை சூழும் நெறி.

இ - ள் —நல் ஆறு எனப்படுவது யாதெனின் - நல்வழி என்று சொல்லப்படுவது யாதென வினவின், யாதொன்றும் கொல்லாமை சூழும் நெறி - யாதோர் உயிரையும் கொல்லாமையைச் சிந்திக்கும் வழி (என்க).

இது, நன்னெறியாவது கொல்லாமை யென்றது. களஉ.

**ஒ**ன்றாக நல்லது கொல்லாமை; மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று.

இ - ள் .—ஒன்றாக நல்லது கொல்லாமை - இணையின்றாக நல்லது கொல்லாமை: அதன் பின்சார பொய்யாமை நன்று - அதன் பின்பே அணையப் பொய்யாமை நன்று.

[ஒன்றாக - இரண்டாவதின்றாக - இணையின்றாக. நல்லது - நல்லஅறம். மற்று என்பது அசை.]

இது, பல அறங்களினும் பொய்யாமை நன்று, அதனினும் கொல்லாமை நன்றென்றது. களங.

**அ**றவினை யாதெனின் கொல்லாமை, கோறல்
பிறவினை யெல்லாம் தரும்.

இ - ள் :—அறவினை யாதெனின்-நல்ல வினை யாதெனின், கொல்லாமை - கொல்லாமை (என்க), கோறல் எல்லா பிறவினையும் தரும் - கொல்லுதல் எல்லாத் தீவினைப் பயனையும் தருமாதலான்.

[அறவினை என்றதனால், பிறவினை தீவினையென்று கொள்ளப்பட்டது. பிறவினையும் என்பது உம்மை கெட்டுநின்றது. பிறவினை என்பது ஆகுபெயர், அதன் பயனுக்காயினமையால்.]

இஃது, அறத்தொழிலாவது கொல்லாமை யென்றது. ௧௭௪.

நிலைஅஞ்சி நீத்தாரு ளெல்லாம், கொலைஅஞ்சிக்
கொல்லாமை சூழ்வான் தலை.

இ - ள் :—நிலை அஞ்சி நீத்தாருள் எல்லாம் - (மனைவாழ்க்கையில்) நிற்றலை அஞ்சித் துறந்தவரெல்லாரினும், கொலை அஞ்சி கொல்லாமை சூழ்வான் தலை - கொலையை அஞ்சிக் கொல்லாமையைச் சிந்திப்பவன் (இல்வாழ்க்கையில் நிற்பினும்) தலைமை யுடையவன்.

இது, கொல்லாமை துறவினும் நன்றென்றது. ௧௭௫.

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல், நூலோர்
தொகுத்தவற்று ளெல்லாம் தலை.

இ - ள் :—பல் உயிர் பகுத்து உண்டு ஓம்புதல் - பல உயிர்களுக்குப் பகுத்துண்டு (அவற்றைப்) பாதுகாத்தல், நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை - நூலுடையார் திரட்டின அறங்களெல்லாவற்றிலும் தலையான அறம்.

[பகுத்துண்டல் - தன் உணவைப் பல உயிர்களுக்கும் பகிர்ந்து கொடுத்துத் தான் உண்டல்.]

இது, கொல்லாமை எல்லாச் சமயத்தார்க்கும் நன்றென்றது.

கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாள்
செல்லா துயிருண்ணும் கூற்று. [மேல்

இ - ள் :—கொல்லாமை மேல் கொண்டு ஒழுகுவான் வாழ்நாள் மேல் - கொல்லாமையை மேலான விரதமாகக்கொண்டு ஒழுகுமவன் வாழ்நாளின்மேல், உயிர் உண்ணும் கூற்று செல்லாது - உயிரை உண்ணும் கூற்றுச் செல்லாது.

பிறவாமை உண்டா மாதலால், கூற்றுச் செல்லா தென்றார்.

இது, கொல்லாமையின் பயன் கூறிற்று. கஎஎ.

உயிருடம்பு நீக்கியார் என்ப, செயிருடம்பூண்
செய்யாத வாழ்க்கை யவர்.

இ - ள் :—செயிர் உடம்பு ஊன் செய்யாத வாழ்க்கை யவர் - குற்றமான உடம்பினையும் ஊனைச் செய்யாத மனைவாழ்க்கையினை யும் உடையாரை, உயிர் உடம்பு நீக்கியார் என்ப - (முற்பிறப்பின் கண்)உயிரை உடம்பினின்று நீக்கினவரென்று கூறுவர் (பெரியோர்).

[குற்றமான உடம்பு - உறுப்புக் குறைந்ததும் நோய் கூடியது மான உடம்பு.]

இது, கொலையினால் வரும் குற்றம் கூறிற்று. கஎஅ.

கொலைவினைய ராகிய மாக்கள் புலைவினையர்
புன்மை தெரிவார் அகத்து.

இ - ள் :—புன்மை தெரிவார் அகத்து - பொல்லாமையை ஆராய் வாரிடத்து, கொலைவினைய ராகிய மாக்கள் வினைப்புலையர் - கொலைத்தொழிலினையுடைய மாக்கள் தொழிற்புலைய ராகுவர்.

[மனவறி வின்றி ஐம்பொறி யறிவை யுடைய மனித உருவி னரை மாக்களென்பர் தொல்காப்பியனார்.]

இது, கொலைவினையரை உலகத்தார் கன்ம சண்டாள ரென்ப ரென்றது. கஎகூ.

நன்றாகும் ஆக்கம் பெரிதெனினும் சான்றோர்க்குக்
கொன்றாகும் ஆக்கம் கடை.

இ - ள் :—கொன்று ஆகும் ஆக்கம் - (ஓர் உயிரைக்) கொன்று ஆகின்ற ஆக்கமானது, நன்று ஆகும் பெரிது ஆக்கம் எனினும் - நன்

மையைத் தரும் பெரிதான ஓர் ஆக்கமேயாயினும், சான்றோர்க்கு கடை - உயர்ந்தோர்க்கு ஆகாது.

வேள்வியின் வரும் கொலையும் ஆகாது, பெரியோர் வீடுபேற்றை விரும்பிக் கன்மத்தை விடுத்தலால் என்று கூறினார். ௧௮௦.

## ௧௯-வது.—புலான் மறுத்தல்.

புலால் மறுத்தலாவது, (புலால் தின்றால் அருளில்லையா மென்பதனால்) புலாலை விடுகை. [புலால் கொலையால் வருதலானும், புலாலுண்ணல் கொலைக்கு ஏதுவாகலானும், இவ்வதிகாரம் கொல்லாமையின் பின் கூறப்பட்டது.]

உண்ணாமை வேண்டும் புலாலைப் பிறிதொன்றின்
புண்ண துணர்வார்ப் பெறின்.

இ - ள்:—புலாலை உண்ணாமை வேண்டும் - புலாலை உண்ணாமை வேண்டும்; உணர்வார் பெறின் - (அதன் உண்மைத் தன்மையைக்) காண்பார் உண்டாயின், அது பிறிது ஒன்றின் புண் - அது பிறிது ஒன்றின் புண்ணாம்.

[பிறிது ஒன்றின் - வேறு ஓர் பிராணியின்.]

இது, புலால் மறுத்தல் வேண்டு மென்பதூஉம், அது ஞாயமா மென்பதூஉம் கூறிற்று. ௧௮௧.

பொருளாட்சி போற்றாதார்க் கில்லை; அருளாட்சி
ஆங்கில்லை ஊன்தின் பவர்க்கு.

இ - ள்:—பொருள் ஆட்சி போற்றாதார்க்கு இல்லை - பொருள் தனை ஆளுதல் (அதனைக்) காக்கமாட்டாதார்க்கு இல்லை; ஆங்கு அருள் ஆட்சி ஊன் தின்பவர்க்கு இல்லை - அதுபோல அருளினை ஆளுதல் ஊன் தின்பவர்க்கு இல்லை.

ஊனுண்ண அருட்கேடு வரும் என்றார். ௧௮௨.

**தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பான்**
**எங்ஙனம் ஆளும் அருள் ?**

இ - ள்.—தன் ஊன் பெருக்கற்கு - தன்னுடம்பை வளர்த்தற்கு, தான் பிறிது ஊன் உண்பான் - தான் பிறிதொன்றினது உடம்பை உண்ணுமவன், எங்ஙனம் அருள் ஆளும் - எவ்வாறு அருளினை ஆள்வான் ?

ஊனுண்ணார் அருள் செய்வரோ என்றார்க்கு, இது கூறப்பட்டது. கஅங.

**படைகொண்டார் நெஞ்சம்போல்நன்றூக்கா தொன்றன்**
**உடல்சுவை உண்டார் மனம்.**

இ - ள் —படைகொண்டார் நெஞ்சம்போல் நன்று ஊக்காது - ஆயுதம் கைக்கொண்டவர்கள் நெஞ்சுபோல நன்மையை நினையாது, ஒன்றின் உடல் சுவை உண்டார் மனம் - ஒன்றின் உடலைச் சுவைபட உண்டார் மனம்.

இஃது, ஊனுண்பார் நெஞ்சம் அறத்தை நயவாமைக்கு கஅச.

**தினற்பொருட்டால் கொள்ளா துலகெனின், யாரும்**
**விலைப்பொருட்டால் ஊன்தருவார் இல்.**

இ - ள்.—தினல் பொருட்டு உலகு கொள்ளாது எனில் - தின்னுதற்காக உலகத்தார் கொள்ளாராகில், விலைபொருட்டு ஊன் தருவார் யாரும் இல் - விலைக்காக ஊன் விற்பார் யாரும் இல்லையாம். [ஆல் இரண்டும் அசை.]

கொன்று தின்றது, விலைக்குக் கொண்டு தின்பார்க்குக் குற்றமென்னை யென்றார்க்கு, அதனானும் கொலைப்பாவம் வருமென்று இது கூறிற்று. கஅரு

**அருளல்ல தியாதெனின் கொல்லாமை கோறல் ;**
**பொருளல்ல தவ்வூன் தினல்.**

இ - ள் .—அருள் அல்லது யாது எனின் - அருளல்லது யாதெனில், கொல்லாமை கோறல் - கொல்லாமையைச் சிதைத்தல் (என்க), பொருள் அல்லது அவ்வூன் தினல் - பொருளல்லது (யாதெனில்) அவ்வூனைத் தின்னல் (என்க).

[பொருளல்லது - பயனில்லாதது. கொல்லாமையைச் சிதைத்தல் - கொலையைச் செய்தல்]

புலால் உண்பதனால் அருள் கெடுதலே யன்றிப் பெறுவதொரு பயனும் இல்லையென்று இது கூறிற்று. க௮௬.

**செ**யிரிற் றலைப்பிரிந்த காட்சியார் உண்ணார்
உயிரிற் றலைப்பிரிந்த ஊன்.

இ - ள் .—செயிரின் தலைப்பிரிந்த காட்சியார் உண்ணார் - குற்றத்தினின்றும் நீங்கின தெளிவையுடையார் உண்ணார், உயிரின் தலைப்பிரிந்த ஊன் - உயிரினின்றும் நீங்கின உடம்பை.

இது மேற்கூறிய குற்றமல்லாம் பயத்தலின், புலாலைத் தெளிவுடையோர் உண்ணாரென்றது. ௧௮௭.

**அ**விசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றின்
உயிர்செகுத் துண்ணாமை நன்று.

இ - ள் .—அவி சொரிந்து ஆயிரம் வேட்டலின் - நெய்யைச் சொரிந்து ஆயிரம் வேள்வி வேட்டலினும், ஒன்றின் உயிர் செகுத்து உண்ணாமை நன்று - ஒன்றின் உயிரை நீக்கி அதன் உடம்பை உண்ணாமை நன்று.

இது, புலாலுண்ணாமை எல்லாப் புண்ணியங்களினும் நன்றென்றது. க௮௮.

**கொ**ல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்.

இ - ள்:—கொல்லான் புலாலை மறுத்தானை - கொல்லானுமாய்ப் புலாலையுண்டலைத் தவிர்ந்தவனுமாய் வாழ்பவனை; எல்லா உயிரும் கைகூப்பி தொழும் - எல்லா உயிரும் கைகூப்பித் தொழும். [கைகூப்பி - கைகுவித்து.]

இது, புலாலுண்ணாதான் தேவர்க்கும் மேலாவனென்றது.

உண்ணாமை யுள்ள துயிர்நிலை; ஊனுண்ண
அண்ணாத்தல் செய்யா தளறு.

இ - ள்.—(ஊன்) உண்ணாமை உயிர்நிலை உள்ளது - ஊனை உண்ணாமையினுலே உயிர் நிலையைப் பெறுதல் உள்ளதாம்; ஊன் உண்ண அளறு அண்ணாத்தல் செய்யாது - ஊனை உண்பவர் (உண்டாரை எல்லா உலகத்தினும் இழிந்த) நரகம் (விழுங்கிக் கொண்டு) அங்காவாது.

அங்காவாமை - புறப்பட விடாமை - [வெளிப்பட விடாமை.]

[உயிர் நிலையைப் பெறுதல் - உயிர் பிறப்பிறப்பின்றி நிற்றல் - வீடு.]

இஃது, ஊன் உண்ணாமையால் வரும் பேறு சொன்னது. க௨௦.

## ௨௦-வது.—கள்ளாமை.

கள்ளாமையாவது, யாதொரு பொருளையும் களவிற்கொள்ளாராதல். [கொலைக்கும் புலைக்கும் பின்னர்த் தவிர்க்க வேண்டுவது களவாதலால், இவ்வதிகாரம் அவற்றின்பின் கூறப்பட்டது.]

எள்ளாமை வேண்டுவான் என்பான், எனைத்தொன்றுங்
கள்ளாமை காக்கதன் னெஞ்சு.

இ - ள்:—எள்ளாமை வேண்டுவான் என்பான் - பிறரால் இகழப்படாமையை வேண்டுவான் (இவன்) என்று சொல்லப்படுமவன், எனைத்து ஒன்றும் கள்ளாமை - யாதொரு பொருளையும் களவில் கொள்ளாமல், தன் நெஞ்சு காக்க - தன் நெஞ்சைக் காக்க.

இது, களவு ஆகாதென்றது. க௨௧.

**உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருள்;**
**கள்ளத்தால் கள்வோம் எனல்.**

இ - ள் :—பிறன் பொருள் உள்ளத்தால் உள்ளலும் தீது - பிறன் பொருளை நெஞ்சினால் நினைத்தலும் தீதாம், கள்ளத்தால் கள்வோம் எனல் - (ஆதலால் அதனை) மறைவினாலே கள்வோமென்று முயலா தொழிக. [ஏகாரம் அசை. எனல் எதிர்மறை வியங்கோள்.]

இது, களவு தீதென்றது. கஅஉ.

**கள்வார்க்குத் தள்ளும் உயிர்நிலை; கள்ளார்க்குத்**
**தள்ளாது புத்தேள் உலகு.**

இ - ள் .—கள்வார்க்கு - பிறர் பொருளைக் கள்வார்க்கு, உயிர் நிலை தள்ளும் - உயிர் நிலையாகிய வீடு (பெறுதல்) தப்பும், கள்ளார்க்கு புத்தேள் உலகு தள்ளாது - கள்ளாதாருக்குத் தேவருலகம் (பெறுதல்) தப்பாது.

இது, கள்வார் முத்தி பெறுதலு மிலர், கள்ளார் சுவர்க்கம்பெறா மையு மிலர் என. கஅங.

**களவினால் ஆகிய ஆக்கம், அளவிறந்**
**தாவது போலக் கெடும்.**

இ - ள் —களவினால் ஆகிய ஆக்கம் - களவிற்கொண்ட பொருளால் ஆகிய ஆக்கம், அளவு இறந்து ஆவதுபோல கெடும் - மேன் மேல் ஆவதுபோலக் கெடும்.

இது, களவினால் வரும்பொருள் நிலையா தென்றது. கஅச.

**களவின்கண் கன்றிய காதல் விளைவின்கண்**
**வீயா விழுமம் தரும்.**

இ - ள் :—களவின்கண் கன்றிய காதல் - களவின் மிக்க ஆசையானது, விளைவின்கண் - பயன்படும் காலத்து, வீயா விழுமம்

தரும் - கேடு இல்லாத நோயைத் தரும்.

இது, களவு நரகம் புகுத்தும் என்றது. ககரு.

அளவல்ல செய்தாங்கே வீவர் களவல்ல
மற்றைய தேற்றா தவர்.

இ - ள்.—அளவு அல்ல செய்து - நேர் அல்லாதன செய்து, ஆங்கே வீவர் - அவ்விடத்தே கெடுவார், களவு அல்ல மற்றைய தேற்றாதவர் - களவல்லாத மற்றை அறங்களைத் தெளியாதவர்.

[ஆங்கே என்பது ஈறு கெட்டு நின்றது. நேர் - நீதி.]

இது, கள்வரை அரசர் கொல்வ ரென்றது. ககசு.

அருள்கருதி அன்புடையர் ஆதல் பொருள்கருதிப்
பொச்சாப்புப் பார்ப்பார்கண் இல்.

இ - ள்:—அருள் கருதி அன்பு உடையர் ஆதல் - அருளைக் குறித்து உயிர் மீது அன்பு உடையராய் ஒழுகுதல், பொருள் கருதிப் பொச்சாப்பு பார்ப்பார்கண் இல் - பொருளைக்குறித்து (ப்பிறரது) மறவியைப் பார்ப்பார்மாட்டு இல்லை.

இது, கள்வார்க்கு அருளும் அன்பும் இல்லையா மென்றது.

அளவின்கண் நின்றொழுகல் ஆற்றார் களவின்கண்
கன்றிய காத லவர்.

இ - ள்:—களவின்கண் கன்றிய காதல் அவர் - களவின்கண்ணே மிக்க ஆசையை யுடையவர், அளவின்கண் நின்று ஒழுகல் ஆற்றார் - நேரின்கண் நின்று ஒழுகுதலைச் செய்யமாட்டார்.

இது, கள்வார் நேர் செய்யமாட்டா ரென்றது. ககஅ.

களவென்னுங் காரறி வாண்மை அளவென்னும்
ஆற்றல் புரிந்தார்கண் இல்.

இ - ள்:—களவு என்னும் கார அறிவு ஆண்மை - களவாகிய பொல்லா அறிவுடைமை, அளவு என்னும் ஆற்றல் புரிந்தார் கண் இல் - நேர்மையாகிய பெருமையைப் பொருந்தினோர் மாட்டு இல்லை.

இது, நேர்மையை அறிந்தவன் களவுகாணு னென்றது. கஅஅ.

அளவறிந்தார் நெஞ்சத் தறம்போல நிற்கும்
களவறிந்தார் நெஞ்சிற் கரவு.

இ - ள்:—அளவு அறிந்தார் நெஞ்சத்து அறம்போல - நேர் அறிந்தவர் நெஞ்சத்து அறம் நிற்குமாறுபோல, களவு அறிந்தார் நெஞ்சில் கரவு நிற்கும் - களவு அறிந்தவர் நெஞ்சில் வஞ்சகம் நிற்கும்.

இது, களவு காண்பாரைப் பின்பு தவிர்க்கமுடியா தென்றது.

## உக-வது.—தீவினையச்சம்

தீவினையச்சமாவது, தீவினைகளைப் பிறருக்குச் செய்யாமை. [இல்வாழ்வார விலக்கவேண்டிய கொடிய பாவங்களில் மேல் விதந்து கூறுதவற்றையெல்லாம் பொதுவகையாக இவ்வதிகாரத்தாற் கூறுகின்றார்.]

தன்னைத்தான் காதல னாயின் எனைத்தொன்றுந்
துன்னற்க தீவினைப் பால்.

இ - ள்:—தன்னைத் தான் காதலன் ஆயின் - தனக்குத் தான் நல்லவனாயின், எனைத்து ஒன்றும் தவினைப்பால் துன்னற்க - யாதொன்றாயினும் தீவினைப்பகுதியாயினவற்றைச் செய்யா தொழிக.

[யாதொன்றாயினும் - ஒரு சிறிதும்.]

இது, தீவினைக்கு அஞ்சவேண்டு மென்றது. உ0க.

எனைப்பகை உற்றாரும் உய்வர்; வினைப்பகை
வீயாது பின்சென் றடும்.

இ - ள்:—எனைப்பகை உற்றாரும் உய்வர் - எல்லாப்பகையும் உற்றார்க்கும் உய்தி உண்டாம்; வினைப்பகை வீயாது பின்சென்று அடும் - தீவினையாகிய பகை நீங்காது (என்றும்) புக்குழிப் புகுந்து கொல்லும்.

அஃதாமாறு பின்பே கூறப்படும். [உய்தி - பிழைத்தல்.]

இது, தீவினையானது (தன்னைச் செய்தானைப்) பின்சென்று அடுமென்றது. ௨0௨.

தீவினை செய்தார் கெடுதல், நிழல்தன்னை
வீயா தடியுறைந் தற்று.

இ - ள்:—தீவினை செய்தார் கெடுதல் - தீயவானவற்றைப் (பிறர்க்குச்) செய்தார் கெடுதல், நிழல் தன்னை வீயாது அடி உறைந்தால் அற்று - தன் நிழல் தன்னை நீங்காதே தன் அடியின்கீழ் ஒதுங்கினாற் போலும்.

இது, தீவினை அடுமாறு காட்டிற்று. ௨0௩.

மறந்தும் பிறன்கேடு சூழற்க; சூழின்
அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு.

இ - ள்:—மறந்தும் பிறன் கேடு சூழற்க - ஒருவன் மறந்தும் பிறனுக்குக் கேட்டைச் சூழாதொழிக; சூழின் - சூழ்வானாயின், சூழ்ந்தவன் கேடு அறம் சூழும் - (அவனாற் சூழப்பட்டவன் அதற்கு மாறாகக் கேடு சூழ்வதன் முன்னே) சூழ்ந்தவனுக்குக் கேட்டை (த் தீமைசெய்தார்க்குத் தீமை பயக்கும்) அறந்தானே சூழும். [சூழ்தல் - நினைத்தல்.]

இது, தீமையை நினைப்பினும் அது கேடு தருமென்றது. ௨0௪.

இலமென்று தீயவை செய்யற்க; செய்யின்
இலனாகும் மற்றும் பெயர்த்து.

இ - ள் :—இலம் என்று தீயவை செய்யற்க - ஒருவன் நல்கூர்ந்தேம் என்றுநினைந்து (ச்செல்வத்தைக் கருதித்) தீவினையைச் செய்யாதொழிக; செய்யின் பெயர்த்தும் இலன் ஆகும் - செய்வானாயின் பின்பும் நல்கூரவினை னுவன்.

[மற்று என்பது அசைநிலை. "இலம்" என்பது தீவினை செய்வாரது கூற்றாகக் கூறப்பட்டது.]

இது, வறுமை தீரத் தீமை செய்யினும் பின்பும் வறியனாகு மென்றது. ௨0௫.

தீப்பால தான்பிறர்கட் செய்யற்க, நோய்ப்பால
தன்னை அடல்வேண்டா தான்.

இ - ள் :—தன்னை நோய்ப்பால அடல் வேண்டாதான் - தன்னைத் துன்பப்பகுதியானவை நலிதல் வேண்டாதவன், தீப்பால பிறர்கண் செய்யற்க - தீமைபாயினவற்றைப் பிறர்க்குச் செய்யாதொழிக.

[பகுதி - வகை. தான் என்பது அசை.]

இது, தீவினை செய்தார்க்கு நோய் உண்டாகுமென்றது. ௨0

தீயவை தீய பயத்தலால், தீயவை
தீயினும் அஞ்சப் படும்.

இ - ள் :—தீயவை தீய பயத்தலால் - தீத்தொழிலானவை (தமக்குத்) தீமையைப் பயத்தலானே, தீயவை தீயினும் அஞ்சப்படும் - அத்தொழில்கள் (தொடிற் சுடுமென்னும்) தீக்கு அஞ்சுதலினும் மிக அஞ்சப்படும்.

இது, தீய செயல் தீயினும் மிகுந்த துன்பத்தை விளைக்குமென்றது. ௨0௭

## தீ வி னை ய ச் ச ம்

தீவினையார் அஞ்சார், விழுமியார் அஞ்சுவர்,
தீவினை என்னும் செருக்கு.

இ - ள்.—தீவினை என்னும் செருக்கு - தீவினையாகிய களிப்பை, தீவினையார் அஞ்சார் - (என்றும்) தீத்தொழில் செய்வார் அஞ்சார்; விழுமியார் அஞ்சுவர் - சீரியார் அஞ்சுவார்.

[செல்வம் முதலியவற்றின் களிப்பாற் பெரும்பாலும் தீவினை நிகழ்வதால் "தீவினை யென்னும் செருக்கு" என்றார்.]

இது, தீவினை செய்தற்கு நல்லோர் அஞ்சுவாரென்றது. உ0அ.

அருங்கேடன் என்ப தறிக மருங்கோடித்
தீவினை செய்யான் எனின்.

இ - ள்.—மருங்கு ஓடி தீவினை செய்யான் எனின் - ஒருவன் மருங்கு ஓடிப் பிறர்க்குத் தீவினைகளைச் செய்யானாயின்; அருங்கேடன் என்பது அறிக - தான் கேடு இல்லாதவன் என்று அறிக.

[மருங்கு ஓடி - அறநெறியை விட்டுப் பக்கத்தில் ஓடி; அதாவது அறநெறியினின்றும் பிறழ்ந்து.]

இது, தீவினை செய்யாதார்க்குக் கேடில்லை யென்றது. க0ம.

அறிவினு ளெல்லாம் தலையென்ப தீய
செறுவார்க்கும் செய்யா விடல்.

இ - ள்:—செறுவார்க்கும் தீய செய்யாது விடல் - தமக்குத் தீமை செய்வார்க்கும் தாம் தீமை செய்யாதொழுகுவதற்கு ஏதுவாகிய அறிவை, அறிவினுள் எல்லாம் தலை என்ப - (எல்லா அறங்களையும் அறியும்) அறிவெல்லாவற்றுள்ளும் தலையான அறிவென்று சொல்லுவர் (நல்லோர்.)

[விடான் என்று கூறினார், விடுதற்குக் காரணமாகிய அறிவினை. செய்யாது எப்பொழுது கெடுகின்றது.]

இது, தீவினையைச் செய்யாத அறிவு எல்லாவற்றுள்ளும் தலைமையுடைத்தென்றது. உகo.

## உஉ-வது.—ஒப்புரவறிதல்.

ஒப்புரவறிதலாவது, இல்லையென இரந்துவந்தார் யாவர்க்கும் வரையாது கொடுக்கும் ஆற்றல் இல்லாரெனினும், தன் அளவிற்கும் தன் வருவாய்க்கும் ஏற்கத் தக்கார்க்குத் தக்கன அறிந்து கொடுத்தல். [ஒப்புரவு செய்யாமையும் தீவினையின்பால் படுமாதலால் இவ்வதிகாரம் தீவினையச்சத்தின்பின் கூறப்பட்டது.]

தாளாற்றித் தந்த பொருளெல்லாம், தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு.

இ - ள்.—தாள் ஆற்றித் தந்த பொருள் எல்லாம் - ஒருவன் முயற்சி செய்து ஈட்டிய பொருளெல்லாம், தக்கார்க்கு வேளாண்மை செய்தல் பொருட்டு - தகுதியுடையார்க்கு உபகாரம்செய்தற்காக.

இது, பொருள் உண்டானால் ஒப்புரவு செய்க என்றது. உகக.

கைம்மாறு வேண்டா கடப்பாடு; மாரிமாட்
டென்னாற்றும் கொல்லோ உலகு.

இ - ள்.—கடப்பாடு கைம்மாறு வேண்டா - ஒப்புரவு (செய்யுங்கால்) கைம்மாறு (கருதிச்) செய்யவேண்டா; மாரிமாட்டு உலகு என் ஆற்றுமோ - (எல்லார்க்கும் நல்மழை சுரக்கின்ற) மாரிக்கு உலகம் என்ன கைம்மாறு செய்யுமோ ?

கடப்பாடு - ஒப்புரவு. [கொல் என்பது அசை.]

ஒப்புரவாவது கைம்மாறு கருதாத கொடை என்று இது கூறிற்று. உகஉ.

இடனில் பருவத்தும் ஒப்புரவிற் கொல்கார்
கடனறி காட்சி யவர்.

இ - ள் —இடன் இல் பருவத்தும் - (செல்வம்) விரிவு அற்ற காலத்திலும், ஒப்புரவிற்கு ஒல்கார் - ஒப்புரவிற்குத் தளரார், கடன் அறி காட்சியவர் - ஒப்புரவை அறியும் அறிவையுடையார்.

இது, செல்வம் விரிவில்லாத காலத்திலும் ஒப்புரவு செய்ய வேண்டுமென்றது. உகங.

நயனுடையான் நல்கூர்ந்தா னாதல் செயுநீர்மை
செய்யா தமைகலா வாறு.

இ - ள் :—நயன் உடையான் நல்கூர்ந்தான் ஆதல் - நயனுடையான் நல்கூர்ந்தானாகின்றது, செயும் நீர்மை செய்யாது அமைகலா ஆறு - செய்தல் வேண்டுவன செய்யாதே அமையமாட்டாமையாலே.

[நயன் உடையான் - ஒப்புரவை அறிந்தவன்.]

இது, செல்வம் குறைபடினும் அறிவுடையார் ஒப்புரவு செய்வரென்றது. உகச.

ஒப்புரவி னால்வருங் கேடெனின் அஃதொருவன்
விற்றுக்கோட் டக்க துடைத்து.

இ - ள் .—ஒப்புரவினால் கேடு வரும் எனின் - ஒப்புரவுசெய்தலினாலே பொருட்கேடு வருமென்று சொல்லின், அஃது ஒருவன் விற்றுக்கோள் தக்கது உடைத்து - அக்கேட்டை (க்கேடாகச் சேர்த்துக்கொள்ளல்கூடாது;) ஒன்றை விற்று ஒன்றைக் கொள்ளுகின்ற வாணிகமாகக் கொள்ளும் தகுதியை யுடைத்து.

இது, ஒப்புரவுசெய்தலினால் கெட்டானாயினும் அதனை ஆக்கமாகக் கொள்ளல் தகுமென்றது, பின் பயப்பன நன்மையாதலான். உகரு.

**ஊ**ருணி நீர்நிறைந் தற்றே, உலகவாம்
பேரறி வாளன் திரு.

இ - ள் .—ஊருணி நீர் நிறைந்த அற்றே - ஊராரால் உண்ணப்படும் நீர்நிலை நீர் நிறைந்த நன்மையே போலும், உலகு அவாவும் பேர் அறிவாளன் திரு - உலகத்தாரெல்லாரும் நச்சுகின்ற பெரிய (ஒப்புரவு) அறிவானது செல்வம்.

[நச்சுதல் - விரும்புதல். அவாவும் என்பது ஈற்று மிசை உகரம் மெய்யொடும் கெட்டு நின்றது. நிறைந்த என்பது ஈற்றகரம் கெட்டு நின்றது.]

இஃது, ஒப்புரவு செய்வார்க்கு உளதாகிய செல்வத்தை (நச்சிச் சென்றோர்) வேண்டியவாறு கொள்ளலா மென்றது. உகரு.

**ப**யமரம் உள்ளூர்ப் பழுத்தற்றால், செல்வம்
நயனுடை யான்கண் படின்.

இ - ள் :—பயமரம் ஊருள் பழுத்தால் அற்று - பயன்படும் மரம் ஊர்நடுவே பழுத்தாற்போலும், நயன் உடையான்கண் செல்வம் படின் - பிறரால் விரும்பப்படுவான்மாட்டுச் செல்வம் உண்டாயின்.

இஃது, ஒப்புரவு செய்வானது செல்வம் உபகாரம் வேண்டாதார்க்கும் பயன்படு மென்றது. உகசா.

**ம**ருந்தாகித் தப்பா மரத்தற்றால், செல்வம்
பெருந்தகை யான்கண் படின்.

இ - ள் :—மருந்து ஆகி தப்பா மரத்து அற்று - (பிணி) மருந்தாகி (தேடுவார்க்கு) மறைதலில்லாத மரத்தை ஒக்கும், செல்வம் பெருந்தகையான்கண் படின் - செல்வமானது பெருந்தகைமையான் மாட்டு உண்டாயின். [ஆல் என்பது அசை.]

இஃது, ஒப்புரவு செய்கொனது செல்வம் வறிஞருடைய வறுமைப் பிணியை நீக்கும் மருந்து. உகஅ.

ஒத்த தறிவான் உயிர்வாழ்வான்; மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்.

இ-ள் —ஒத்தது அறிவான் உயிர்வாழ்வான் - ஒப்புரவு அறிவோன் உயிர்வாழ்வானென்று சொல்லப்படுவான், மற்றையான் செத்தாருள் வைக்கப்படும் - அஃது அறியாதான் செத்தவருள் ஒருவனாக எண்ணப்படுவன்.

இஃது, ஒப்புரவு அறியாதாரை யிணைத்தோரொடொப்ப ரென்றது.

புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறலரிதே
ஒப்புரவின் நல்ல பிற.

இ-ள் —புத்தேள் உலகத்தும் ஈண்டும் - தேவர் உலகத்தினும் இவ்வுலகத்தினும், ஒப்புரவின் நல்ல பிற - ஒப்புரவொழுகல்போல நல்லவாகிய பிற, பெறல் அரிது - பெறுதற் கரிது.

இஃது, ஒப்புரவு செய்தற்போல நன்றாயிருப்பனவாகிய பிற தேவருலகத்திலும் இவ்வுலகத்திலு மில்லையென்றது. உஉ0.

## உ௩-வது.—ஈகையுடைமை.

ஈகையாவது, இல்லென இரந்து வந்தார் யாவர்க்கும் வரையாது கொடுத்தல். [இது செல்வரால் செய்யப்படுவ தொன்றாதலால், இவ்வதிகாரம் நல்கூர்ந்தா ரல்லாதாரால் செய்யப்படும் ஒப்புரவுடைமையின்பின் கூறப்பட்டது.]

**நல்லா றெனினும் கொளல்தீது ; மேலுலகம்**
**இல்லெனினும் ஈதலே நன்று.**

இ - ள் :—நல் ஆறு எனினும் கொளல் தீது - (ஒருவன் மாட்டுக் கொள்ளல்) நன்மை பயக்கும் நெறியெனினும் கொள்ளல் தீது ; மேல் உலகம் இல் எனினும் ஈதலே நன்று - (ஒருவருக்குக் கொடுத்தால்) பாவம் உண்டெனினும் கொடுத்தல் நன்று.

கொள்வோர் அமைதியை அறிந்து கொடுக்கவேண்டுமேனும், இது வரையா விந்தையாதலால் யாதோராற்றானும் கொடை நன்றென்பது கூறிற்று. உஉக.

**வறியார்க்கொன் றீவதே யீகைமற் றெல்லாம்**
**குறியெதிர்ப்பை நீர துடைத்து.**

இ - ள் :—ஈகை வறியார்க்கு ஒன்று ஈவதே - ஈகையாவது இல்லாதார்க்கு யாதானும் ஒன்றைக் கொடுத்தல் ; மற்றெல்லாம் குறிஎதிர்ப்பை நீரது உடைத்து - (இஃது) ஒழிந்த கொடையெல்லாம் குறிஎதிர்ப்பை கொடுத்த நீர்மையாதலை யுடைத்து.

[குறிஎதிர்ப்பை - குறித்த எதிர்ப்பை. எதிர்ப்பை எதிர் கொடுப்பது - கைம்மாறு.]

இது, கொடுக்குங்கால் இல்லாதார்க்குக் கொடுக்க வேண்டுமென்றது. உஉஉ.

**இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்**
**குலனுடையான் கண்ணே யுள.**

இ - ள் :—இலன் என்னும் எவ்வம் உரையாமை ஈதல் - (இரந்து வந்தாற்கு) இல்லையென்னுகின்ற துன்பத்தைக் கூறாது ஈதலும், குலன் உடையான் கண்ணே உள - குடிப்பிறந்தார்மாட்டே யுளதாம்.

[ஈதல் என்னும் ஒருமைப்பெயர் உள என்னும் பன்மை வினையோடு பொருந்தி நின்றது.]

இது, கொடுக்குங்கால் மாறாது கொடுக்கவேண்டு மென்றது.

இன்னு திரக்கப் படுதல், இரந்தவர்
இன்முகம் காணும் அளவு.

இ - ள் :—இரக்கப்படுதல் இன்னுது - (பிறனொருவனுல்) இரக்கப்படுதலும் இன்னுது; (எவ்வளவுமெனில்), இரந்தவன் இன்முகம் காணும் அளவு - இரந்துவந்தவன் (தான் வேண்டியது பெற்றது றுனே காட்டும்) இனிதான முகங்காணும் அளவும் (என்க).

இது, கொடுக்குங்கால் தாழாது கொடுக்கவேண்டு மென்றது.

சாதலின் இன்னுத தில்லை; இனிததூஉம்
ஈதல் இசையாக் கடை.

இ - ள் :—சாதலின் இன்னுதது இல்லை - சாதலின் மிக்க துன்பம் தருவது இல்லை; ஈதல் இசையாக்கடை அதூஉம் இனிது - (இரந்து வந்தார்க்குக்) கொடுத்தல் முடியாதவிடத்து அதுவும் இனிதாம்.

இஃது, ஈயாது வாழ்தலிற் சாதல் நன் றென்றது. ௨௨௫.

ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல், தாமுடைமை
வைத்திழக்கும் வன்கண் ணவர்.

இ - ள் :—தாம் உடைமை வைத்து இழக்கும் வன்கண்ணவா - தாம் உடையபொருளைக் கொடாதே வைத்து (ப்பின்) இழக்கின்ற வன்கண்ணா, ஈந்து உவக்கும் இன்பம் அறியாகொல் - (கொடுத்த) கொடையினுல் (பெற்றவா) முகமலாச்சி கண்டறியாரோ?

[ஈந்து என்பது வலித்து நின்றது. கொல் என்பது ஈண்டு ஐயப்பொருளைத் தந்துநின்றது.]

இது, பிறர்க்கு இடாதார் தம் பொருளை இழப்ப ரென்றது.

இரத்தலின் இன்னுத மன்ற நிரப்பிய
தாமே தமியர் உணல்.

## இல்லறவியல்

இ - ள் :—இரத்தலின் மன்ற இன்னாத - இரத்தல்போல மெய்யாக இன்னாவாம், நிரப்பிய தாமே தமியர் உணல் - (தாமே) தேடின உணவைத் தாமே தமியராயிருந்து உண்டல்.

தமியராய் - ஒருவருங் காணாமல். [உணல் என்னும் ஒருமைப் பெயர் இன்னாத என்னும் பன்மைச் சொல்லோடு பொருந்தி நின்றது.]

இது, பிறர்க்கு இடாதார் துன்பம் உழப்ப ரென்றது. உஉஎ.

பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னும்
தீப்பிணி தீண்டல் அரிது.

இ - ள்:—பாத்தூண் மரீஇயவனை - பகுத்து உண்டலைப் பழகியவனை; பசி என்னும் தீப்பிணி தீண்டல் அரிது - பசியாகிய பொல்லாநோய் தீண்டுதல் இல்லை.

(ஒருவன் பிறர்க்கு ஈயாதொழிதல், ஈந்தால் பொருள் குறையும்; அதனாலே பசியுண்டாமென் றஞ்சியன்றோ? அவ்வாறு நினைத்தல் வேண்டா.) பகுத்துண்ணப் பசி வாரா தென்று இது கூறிற்று.

அற்றார் அழிபசி தீர்த்தல்; அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி.

இ - ள் :—அற்றார் அழிபசி தீர்த்தல் - பொருளற்றாரது (குணங்களை) அழிக்கும் பசியைப் போக்குக, அஃது ஒருவன் பொருள் வைப்பு உழி பெற்றான் - அதுசெய்தல் ஒருவன் தான் தேடின பொருள் வைத்தற்கு இடம் பெற்றது போலாம்.

இது, பகுத்துண்ணப் பொருள் அழியா தென்றது. உஉ௬.

ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல்; அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்.

இ - ள் :—ஆற்றுவார் ஆற்றல் பசி ஆற்றல் - பெரியாரது பெருமையாவது பசியைப் பொறுத்தல்; அப்பசியை மாற்றுவார் ஆற்றலின் பின் - (அதுவும் பெரிதாவது) பிறர் பசியைத் தீர்ப்பாரது பெருமைக்குப் பின்பு.

இது, தவம் பண்ணுவாரினும் தானம் பண்ணுவார் வலியுடைய ரென்றது. ௨௱0.

## ௨௪-வது.—புகழுடைமை.

அஃதாவது, புகழ்பட வாழ்தல். [புகழ், வள்ளியோரால் செய்யப்படுவதொன்றாதலின், இவ்வதிகாரம் செல்வரால் செய்யப்படும் ஈகையின்பின் கூறப்பட்டது.]

**தோன்றின் புகழொடு தோன்றுக; அஃதிலார்**
**தோன்றலின் தோன்றாமை நன்று.**

இ - ள் .—தோன்றின் புகழொடு தோன்றுக - பிறக்கின் புகழ் உண்டாகப் பிறக்க, அஃது இலார் தோன்றலின் தோன்றாமை நன்று - புகழ் இல்லார் பிறத்தலின் பிறவாமை நன்று.

இது, புகழ்பட வாழவேண்டு மென்றது. ௨௱௩௧.

**ஈதல் இசைபட வாழ்தல்; அதுவல்லது**
**ஊதிய மில்லை உயிர்க்கு.**

இ - ள் .—இசைபட வாழ்தல் ஈதல் - புகழ்பட வாழ்தலாவது கொடுத்தலே; அது அல்லது உயிர்க்கு ஊதியம் இல்லை - கொடையான் அல்லது உயிர்க்கு இலாபம் (வேறொன்று) இல்லை.

இது, புகழ் உண்டாம் ஆறு கூறிற்று. ௨௱௩௨.

**உரைப்பார் உரைப்பவை யெல்லாம் இரப்பார்க்கொன்**
**றீவார்மேல் நிற்கும் புகழ்.**

இ-ள்:—உரைப்பார் உரைப்பவை எல்லாம் - சொல்லுவார் சொல்லுவன எல்லாம்; இரப்பார்க்கு ஒன்று ஈவார்மேல் நிற்கும் புகழ் - இரந்து வந்தார்க்கு அவர் வேண்டியதொன்றைக் கொடுப்பார்மேல் நில்லாநின்ற புகழையே.

இஃது, ஈகையே புகழுக்குச் சிறந்த காரணமென்றது. உ௩௩.

ஒன்றா உலகத் துயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன் றில்.

இ-ள்:—உயர்ந்த புகழ் அல்லால் - உயர்ந்த புகழல்லது, உலகத்து ஒன்றாக - உலகத்து இணையின்றாக, பொன்றாது நிற்பது ஒன்று இல் - கெடாது நிற்பது பிறிது இல்லை.

இது, புகழ் மற்றுள்ள பொருள்போலன்றி அழியாது நிற்குமென்றது. உ௩௪.

நிலவரை நீள்புகழ் ஆற்றின், புலவரைப்
போற்றாது புத்தேள் உலகு.

இ-ள்:—நிலவரை நீள் புகழ் ஆற்றின் - நிலத்தெல்லையின்கண்ணே நெடிய புகழைச் செய்வானாயின், புத்தேள் உலகு புலவரை போற்றாது - தேவருலகம் புலவரைப் போற்றாது (இவனைப் போற்றும்).

புலவரென்றார் தேவரை, அவர் புலனுடையராதலான்.

இது, புகழ்செய்தாரைத் தேவருலகம் போற்றுமென்றது.

புகழ்பட வாழாதார், தந்நோவார், தம்மை
இகழ்வாரை நோவ தெவன்.

இ-ள்:—புகழ்பட வாழாதார் - புகழ்பட வாழமாட்டாதார்,

தம் நோவார் - தம்மை நோவாது, தம்மை இகழ்வாரை நோவது எவன் - தம்மை இகழ்வாரை நோகின்றது யாதினுக்கு?

இது புகழ்பட வாழமாட்டார் இகழப்படுவ ரென்றது. உ௩௬.

**வசையென்ப வையகத்தார்க் கெல்லாம், இசையென்னும்**
**எச்சம் பெறாஅ விடின்.**

இ - ள் — இசை என்னும் எச்சம் பெறாவிடின் - புகழாகிய ஒழிபு பெறாவிடின், வையகத்தார்க்கு எல்லாம் வசை என்ப - (அப் பெறாமைதானே) உலகத்தார்க் கெல்லாம் வசையாம் என்று சொல்லுவர் (நல்லோர்).

[ஒழிபு - ஒருவன் இறந்தபின் இறவாது (ஒழியாது) நிற்பது.]

மேல் புகழ் இல்லாதாரை இகழ்ப என்றார். அவர் குற்றமில்லாராயின் இகழப்படுவாரோ என்றார்க்கு, வேறு குற்றம் வேண்டா, புகழின்மைதானே அமையும் என்பதனைக் கூறினார். உ௩எ.

**வசையொழிய வாழ்வாரே வாழ்வார்; இசையொழிய**
**வாழ்வாரே வாழா தவர்.**

இ - ள் — வசை ஒழிய வாழ்வாரே வாழ்வார் - வசை ஒழிய வாழ்வாரே உயிர்வாழ்ந்தாராவார், இசை ஒழிய வாழ்வாரே வாழாதவர் - புகழ் ஒழிய வாழ்வாரே உயிர் வாழாதாராவர்.

இது, புகழில்லார் பிணத்தோ டொப்ப ரென்றது. உ௩அ.

**வசையிலா வண்பயன் குன்றும், இசையிலா**
**யாக்கை பொறுத்த நிலம்.**

இ - ள், — இசை இலா யாக்கை பொறுத்த நிலம் - புகழ் இல்லாத உடம்பைப் பொறுத்த நிலத்தின்கண், வசை இலா வண்பயன் குன்றும் - பழியற்ற நல்விளைவு குறையும்.

# இல்லறவியல்

இது, புகழில்லாதான் இருந்த இடத்தில் விளைவு குன்றுமென்றது. உ௩௫.

நத்தம்போல் கேடும் உளதாகும் சாக்காடும்
வித்தகற் கல்லால் அரிது.

இ - ள் :—நத்தம்போல் கேடும் - ஆக்கம்போல் கேடும், உளதாகும் சாக்காடும் - உளதாகும்போல் சாதலும், வித்தகற்கு அல்லால் அரிது - வல்லவற் கல்லதரிது.

இது, புகழ்பட வாழ்தல் மக்களெல்லார்க்கும் அரிதென்றது.

---

# துறவறவியல்.

[துறவறமாவது, இல்லின்கண்ணின்று நீங்கித் தவம் முதலாயின செய்தல். அது கூறிய அதிகாரம் பதின்மூன்றினும் **அருளுடைமை** முதலாகத் **தவமுடைமை** ஈறாக இல்லின்கண்ணின்று நீங்கியாரால் செய்யப்படுவன நான்கும், **கூடாவொழுக்கம்** முதலாகப் **பயனில சொல்லாமை** ஈறாக அவரால் தவிரப்படுவன ஐந்துமாக ஒன்பது அதிகாத்தால் கூறி; அதன்பின் துறவிற்கு இன்றியமையாது அறிதற்பாலதாகிய **நிலையாமை** ஓர் அதிகாரத்தால் கூறி; அதன்பின் **துறவிலட்சணம்** ஓர் அதிகாரத்தால் கூறி; துறவினால் எய்தற்பாலதாகிய **மெய்யுணர்தல்** ஓர் அதிகாரத்தால் கூறி; பிறப்பிற்கு ஏதுவாகிய **அவாவினை அறுத்தல்** ஓர் அதிகாரத்தால் கூறினாராகக் கொள்ளப்படும்.]

## உரு-வது.—அருளுடைமை.

அருளுடைமையாவது, யாதானும் ஓர் உயிர் இடர்ப்படின் அதற்காகத் தன்னுயிர்க் குற்ற துன்பத்தினால் வருந்துமாறுபோல வருந்தும் ஈரமுடைமை.

நல்லாற்றான் நாடி அருளாள்க; பல்லாற்றான்
தேரினும் அஃதே துணை.

இ - ள் :—நல் ஆற்றான் நாடி அருள் ஆள்க - நல்ல வழியாலே நாடி அருளை உண்டாக்குக ; பல் ஆற்றான் தேரினும் அஃதே துணை - பல வழியிலும் (ஓடி) ஆராயினும் (தமக்கு) அருளே துணையாம்.

நல்லாற்றான் நாடி என்றது, அருளுடைமை யுண்டாகப் பல அறங்களையும் செய்து என்றவாறு. [நாடி - விரும்பி-செய்து.]

இஃது, அருளுடைமை வேண்டு மென்றது. உசக.

அருட்செல்வம் செல்வத்துட் செல்வம்; பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள.

இ - ள் :—செல்வத்துள் செல்வம் அருள்செல்வம் - செல்வத்துள் (வைத்துச்) செல்வமாவது அருளுடைமையாகிய செல்வம்; பொருள்செல்வம் பூரியார்கண்ணும் உள - பொருளாகிய செல்வங்கள் கீழாயினாமாட்டும் உளவாதலால்.

இஃது, அருள் நிலை கூறிற்று. [அருள் நிலை-அருளின் தன்மை.]

அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை இருள்சேர்ந்த
இன்னா உலகம் புகல்.

இ - ள் :—அருள் சேர்ந்த நெஞ்சினார்க்கு - அருளைப் பொருந்தின நெஞ்சினை உடையவர்க்கு, இருள் சேர்ந்த இன்னா உலகம் புகல் இல்லை - இருளைப் பொருந்தின நரகலோகம் புகுதல் இல்லை.

[இன்னா உலகம் - துன்ப உலகம் - நரகலோகம்.]

இஃது, அருளுடையார் நரகம் புகாரென்றது. உசங.

மன்னுயிர் ஓம்பி அருளாள்வார்க் கில்லென்ப
தன்னுயிர் அஞ்சும் வினை.

இ - ள் :—மன் உயிர் ஓம்பி அருள் ஆள்வார்க்கு - நிலைபெற்ற உயிர்களை ஓம்பி அருளை ஆள்வார்க்கு, தன் உயிர் அஞ்சும் வினை இல் என்ப - தன் உயிர் அஞ்சுவரும் வினை (வருவது) இல்லை என்று சொல்லுவர் (நல்லோர்).

இஃது, அருளுடையார்க்குத் தீமை வராதென்றது. உசச.

அல்லல் அருளாள்வார்க் கில்லை; வளிவழங்கும்
மல்லல்மா ஞாலம் கரி.

இ - ள் :—அருள் ஆள்வார்க்கு அல்லல் இல்லை - அருளை உடையார்க்கு அல்லல் இல்லை ; கரி வளி வழங்கும் மல்லல் மா ஞாலம் - (அதற்குச்) சான்று காற்று இயங்கும் வளப்பத்தினையுடைய பெரிய உலகம்.

[அல்லல் - துன்பம். உலகம் - உலகத்தார் - பெரியோர்.]

அருளுடையார்க்கு அல்லலில்லாமை உலகத்தார்மாட்டே காணப்படுமென்று இது கூறிற்று. ௨௪௫.

**அ**ருளில்லார்க் கவ்வுலகம் இல்லை, பொருளில்லார்க்
கிவ்வுலகம் இல்லாகி யாங்கு.

இ - ள் :—அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை - அருள் இல்லாதார்க்கு மேலுலகம் (உறும் காட்சி) இல்லை, பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல் ஆகி ஆங்கு - பொருள் இல்லாதார்க்கு இவ்வுலகின்கண் (நுகரும் நுகர்ச்சி) இல்லையானாற் போல.

இஃது, அருளில்லாதார் சுவர்க்கம் புகா ரென்றது. ௨௪௬.

**தெ**ருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால் தேரின்
அருளாதான் செய்யும் அறம்.

இ - ள் :—தேரின் - ஆராயின், அருளாதான் செய்யும் அறம் - அருளில்லாதவன் செய்யும் அறம், தெருளாதான் மெய்ப்பொருள் கண்டால் அற்று - தெருளாதான் மெய்ப்பொருளைத் தெளிந்தாற் போலும்.

இஃது, அருளில்லாதார் அறம் செய்யவும் மாட்டா ரென்றது.

**பொ**ருணீங்கிப் பொச்சாந்தார் என்பர் அருணீங்கி
அல்லவை செய்தொழுகு வார்.

இ - ள் :—அருள் நீங்கி அல்லவை செய்து ஒழுகுவார் - (முற்பிறப்பின்கண்) அருளினின்று நீங்கி அல்லாதவற்றைச் செய்து ஒழுகினயர், பொருள் நீங்கி பொச்சாந்தார் என்பா-(இப்பிறப்பின்கண்) பொருளினின்று நீங்கி மறவியும் உடையவர் என்று சொல்லுவா (ஆன்றோர்).

இஃது, அருள் இல்லாதாாக்குப் பொருள் இல்லையா மென்றது.

பொருளற்றார் பூப்பர் ஒருகால்; அருளற்றார்
அற்றார்; மற்றாதல் அரிது.

இ - ள் —பொருள் அற்றா ஒரு கால் பூப்பா - பொருள் இல்லாதாா ஒரு காலத்தே பொருளுடையராகவும் கூடும்; அருள் அற்றா அற்றா - அருள் இல்லாதாா கெட்டாா; மற்று ஆதல் அரிது - பின்பு (ஒரு காலத்தும்) ஆக்கமுடையவராதல் இல்லை.

இஃது, அருளில்லாாக்குப் பொருளின்மையேயன்றி எல்லாக் கேடும் உண்டா மென்றது. ௨௪௮.

வலியார்முன் தம்மை நினைக்க; தாம் தம்மின்
மெலியார்மேற் செல்லும் இடத்து.

இ - ள் :—தாம் தம்மின் மெலியாாமேல் செல்லும் இடத்து - தாம் தம்மின் மெலியாாமேல் வெகுண்டெழும் இடத்து, வலியார் முன் தம்மை நினைக்க-வலியாாமுன் தாம் நிற்கும் நிலையை நினைக்க.

இஃது, அருள் உண்டாகும் ஆறு கூறிற்று. ௨௫0.

## ௨௬-வது.—இனியவை கூறல்.

இனியவை கூறலாவது, கேட்டாா மனம் மகிழும் சொற்களைக் கூறுதல். [இஃது, அருளுடையாரிடத்து நிகழ்வ தொன்றாகலின், அருளுடைமையின்பின் கூறப்பட்டது.]

## இனியவை கூறல்

அகனமர்ந் தீதலின் நன்றே, முகனமர்ந்
தின்சொல னாகப் பெறின்.

இ - ள் .—அகன் அமர்ந்து ஈதலின் நன்று - மனம் பொருந்திக் கொடுத்தலினும் நன்று, முகன் அமர்ந்து இன்சொலன் ஆகப் பெறின் - முகம் பொருந்தி இன்சொல் சொல்லவல்லவனாயின். [ஏகாரம் அசை.]

இஃது, இனிய பார்வையோடு இன்சொல் கூறுதல் அன்போடு ஈதலினும் சிறந்த தென்றது. உ௫க.

முகத்தான் அமர்ந்தினிது நோக்கி, அகத்தானாம்
இன்சொ லினதே அறம்.

இ - ள் .—முகத்தான் அமர்ந்து-கண்ணுமுகமும் பொருந்தி, இனிது நோக்கி- இனிதாக நோக்கி, அகத்தான் ஆம் இன்சொலினதே - மனத்தோடே பொருந்திய இன்சொல்லையுடையதே, அறம் - அறமாம்.

இஃது, இனிய பார்வையையும் இனிய சொல்லையு முடையதே அறமா மென்றது. உ௫உ.

அல்லவை தேய அறம்பெருகும், நல்லவை
நாடி இனிய சொலின்.

இ - ள் .—நல்லவை நாடி இனிய சொலின் - நல்லவான சொற்களை ஆராய்ந்து இனியவாகச் சொல்லுவானாயின், அல்லவை தேய அறம் பெருகும் - அதனானே அறமல்லாதன தேய அறம் வளரும்.

இது, நல்ல பொருள்களை இன்சொற்களால் சொல்லின் மறம் கெடுமெனவும் அறம் வளருமெனவும் கூறிற்று. உ௫௩.

பணிவுடையன் இன்சொல னாதல், ஒருவற்
கணி; அல்ல மற்றுப் பிற.

இ - ள் :—ஒருவற்கு அணி - ஒருவனுக்கு அழகாவது, பணிவுடையன் இன்சொல்லன் ஆதல் - தாழ்ச்சியுடையனாய் இனிய சொற்களைக் கூறவல்லவன் ஆதல் ; பிற அல்ல - பிறவாகிய அழகெல்லாம் அழகெனப்படா. [மற்று - அசை.]

இது, தாழ்ந்தொழுக வேண்டு மென்பதும், அதனாலாம் பயனும் கூறிற்று. உருச.

சிறுமையுள் நீங்கிய இன்சொல், மறுமையும்
இம்மையும் இன்பம் தரும்.

இ - ள் :—சிறுமையுள் நீங்கிய இன்சொல் - புன்மையுள்நின்று நீங்கிய இனிய சொற்கள், இம்மையும் மறுமையும் இன்பம்தரும் - இம்மையின்கண்ணும் மறுமையின்கண்ணும் இன்பத்தைத் தரும்.

இஃது, இன்சொல்லும் புன்மை யற்றதா யிருத்தல் வேண்டு மென்பதூஉம், அதனால் இம்மையிலும் மறுமையிலும் இன்பம் சித்திக்கு மென்பதூஉம் கூறிற்று. உருரு.

துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும், யார்மாட்டும்
இன்புறூஉம் இன்சொ லவர்க்கு.

இ - ள் :—துன்பு உறூம் துவ்வாமை இல்லாகும் - துன்பம் உறுவிக்கின்ற நுகராமையாகிய நல்குரவு இல்லையாகும், யார்மாட்டும் இன்பு உறூம் இன்சொல் அவர்க்கு - யாவர் மாட்டும் (கூறும்) இன்பம் உறுவிக்கின்ற இனியசொல்லை உடையார்க்கு.

இஃது, இன்சொல் இம்மையில் கேடுறாமல் செய்யு மென்றது.

நயனீன்று நன்றி பயக்கும் பயனீன்று,
பண்பின் தலைப்பிரியாச் சொல்.

இ - ள் :—நயன் ஈன்று - பிறரால் விரும்பப்படுதலையும் பயந்து, பயன் ஈன்று - பொருளையும் பயந்து, நன்றி பயக்கும் - அறத்தினை யும் பயக்கும், பண்பின் தலைப்பிரியாச் சொல் - குணத்தினின்று நீங்காத சொல். [குணம் - இனிமை.]

இஃது, இன்சொல் நட்பையும் பொருளையும் அறத்தையும் பயக்கு மென்றது. ௨௫௭.

இன்சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாம்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்.

இ - ள் .—செம்பொருள் கண்டார் வாய்ச்சொல் இன்சொலால் - (இருவர் மாறுபடச் சொன்ன மாற்றத்தினது) உண்மைப்பொரு ளைக் கண்டார் கூறும் மெய்யாகிய சொற்களும் இன்சொல்லாத லானே, ஈரம் அளைஇ படிறு இலவாம் - (அவை) அருளொடு பொருந் திக் குற்றம் இலவாம்.

இஃது, ஒருவனைக் கடிந்து சொல்ல வேண்டும் இடத்தும் இன் சொல்லாலே கடிய வேண்டு மென்றது. ௨௫௮.

இன்சொல் இனிதீன்றல் காண்பான், எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது.

இ - ள் .—இன்சொல் இனிது ஈன்றல் காண்பான் - (பிற னொருவன்) இனியவாகச் சொல்லும் சொற்கள் தனக்கு இன்பத் தைப் பயத்தலைக் காண்பான், வன்சொல் வழங்குவது எவனோ - (அவற்றிற்கு மறுதலையாகிய) வன்சொற்களை வழங்குவது எப்பயனை நோக்கியோ ? [கொல் - அசை.]

இது, வன்சொல் சொல்லுதல் மடமை யென்றது. ௨௫௯.

இனிய உளவாக இன்னாத கூறல்,
கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று.

இ - ள்.—இனிய உளவாக இன்னாத கூறல் - (இனியவாகச் சொல்லும் சொற்கள் பிறர்க்கு இன்பத்தைத் தருதலைக் கண்டவன்) இனிய சொற்கள் இருக்க (அவற்றை விட்டு)க் கடிய சொற்களைக் கூறுதல், கனி இருப்ப காய் கவர்ந்த அற்று - (பழமும் காயும் ஓரிடத்தே கண்டவன்) பழங்கள் இருக்க (அவற்றைவிட்டு)க் காயைக் கொண்ட தன்மைத்து.

[கவர்ந்த என்பது ஈற்றகரம் கெட்டு நின்றது.]

இஃது, இனிய சொற்களை விட்டுக் கடிய சொற்களைக் கூறுதல் தமக்குந் துன்பத்தை விளைக்குமென்றது. கூ00.

## உள-வது.—அடக்கமுடைமை.

அடக்கமுடைமையாவது, மனம் மொழி மெய்களால் அடங்கி ஒழுகுதல். [மொழியடக்கம் இனியவை கூறலின்பின் நிகழ்வதாதலால் இனியவை கூறலின்பின்னும், மெய்யடக்கமும் மனவடக்கமும் தவத்திற்கு இன்றியமையாதனவாதலால் தவமுடைமையின்முன்னும் இது கூறப்பட்டது.]

காக்க பொருளா அடக்கத்தை; ஆக்கம்
அதனினூஉங் கில்லை உயிர்க்கு.

இ - ள்.—பொருளாக அடக்கத்தை காக்க-(ஒருவன் தனக்குப்) பொருளாக அடக்கத்தை உண்டாக்குக; உயிர்க்கு ஆக்கம் அதனின் ஊங்கு இல்லை - உயிர்க்கு ஆக்கம் அதினின் மேற்பட்டது பிறிதில்லை.

[பொருளாக என்பது ஈறு கெட்டுநின்றது.]

இஃது, அடக்கமுடைமை வேண்டுமென்றது. உகூக

செறிவறிந்து, சீர்மை பயக்கும், அறிவறிந்து
ஆற்றின் அடங்கப் பெறின்.

இ - ள் :—செறிவு அறிந்து - அடக்கப்படுவனவும் அறிந்து, அறிவு அறிந்து - அறியப்படுவனவும் அறிந்து, ஆற்றின் அடங்கப் பெறின் - நெறியாலே அடங்கப்பெறின், சீர்மை பயக்கும் - நன்மை பயக்கும்.

[செறிவு - அடக்கம்.] அடக்கப்படுவன மெய், வாய், கண், மூக்கு, செவி. அறியப்படுவன ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை.

இஃது, அடக்கம் நன்மையை நல்குமென்றது. ௨௯௨.

ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்,
எழுமையும் ஏமாப் புடைத்து.

இ - ள் :—ஒருமையுள் ஐந்து ஆமைபோல் அடக்கல் ஆற்றின்- ஒரு பிறப்பிலே பொறிகள் ஐந்தினையும் ஆமைபோல அடக்கவல்லவனாயின், எழுமையும் ஏமாப்பு உடைத்து - (அஃது) அவனுக்கு எழு பிறப்பிலும் காவலாநிலை யுடைத்து.

இஃது, அடக்கம் மறுபிறப்பிலும் நன்மையைப் பயக்குமென்றது. ௨௯௩.

நிலையில் திரியா தடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது.

இ - ள் —நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம் - தனது நிலையில் கெடாதே அடங்கினவனது உயர்ச்சி, மலையினும் மாண பெரிது - மலையினும் மிகப் பெரிது.

நிலை - வாணச்சிரம தருமம்.

இஃது, அடக்கம் உயர்வை நல்குமென்றது. ௨௯௪.

யாகாவா ராயினும் நாகாக்க, காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

## துறவறவியல்

இ - ள் :—யா காவாராயினும் நா காக்க - எல்லாவற்றையும் அடக்கிலராயினும் நா ஒன்றனையும் அடக்குக, காவாக்கால் சொல் இழுக்குள்பட்டு சோகாப்பர் - அதனை அடக்காக்கால் சொல் சோர்வுள்பட்டுத் தாமே சோகிப்பராதலான்.

இது, நாவடக்கம் இல்லாதார் சோகத்தின்மாட்டே பிணிக்கப்படுவ ரென்றது. உகூரு.

தீயினால் சுட்டபுண் உள்ளாறும்; ஆறாதே
நாவினால் சுட்ட வடு.

இ - ள் :—தீயினால் சுட்ட புண் உள் ஆறும் - தீயினால் சுட்ட புண் உள்ளாறித் தீரும்; நாவினால் சுட்ட வடு ஆறாது - நாவினால் சுட்ட புண் (ஒரு காலத்திலும்) தீராது.

இது, நாவடக்கம் இல்லாதார்க்குப் பிறர் பகையாகித் தீங்கிழைப்ப ரென்றது. உசாசா.

ஒன்றானும் தீச்சொல் பொருட்பயன் உண்டாயின்,
நன்றாகா தாகி விடும்.

இ - ள் :—ஒன்றானும் தீச்சொல் பொருள் பயன் உண்டாயின்- ஒரு சொல்லேயாயினும் (கேட்டார்க்கு இனியதாயிருந்து) தீய சொல்லின் பொருளைப் பயக்குமாயின், நன்று ஆகாதது ஆகிவிடும்- (சொல்லியது முழுவதும்) நன்மை ஆகாததாயேவிடும்.

[ஆகாதது என்பது ஆகாது எனக் குறைந்து நின்றது.]

இஃது, ஒருவன் சால மொழி கூறினும் தீதா மென்றது.

எல்லார்க்கும் நன்றாம் பணிதல்; அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து.

இ - ள் :—பணிதல் எல்லார்க்கும் நன்றாம் - அடங்கியொழுகல் எல்லார்க்கும் நன்மையாம்; அவருள்ளும் செல்வர்க்கே செல்வம்

தகைத்து - அவரெல்லாரினும் செல்வமுடையார்க்கே மிகவும் நன்மை உடைத்தாம்.

செல்வம் - மிகுதி.

இஃது, அடக்கம் செல்வமுடையார்க்கு உயர்வைத் தரு மென்றது. உ௬அ.

கதம்காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி
அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து.

இ-ள்:—கதம் காத்து கற்று அடங்கல் ஆற்றுவான் - வெகுளியும் அடக்கிக் கல்வியும் உடையவனாய் (அதனால் வரும் பெருமிதமும்) அடக்கவல்லவன்மாட்டு, அறம் உழைந்து செவ்வி பார்க்கும் ஆற்றின்-அறமானது (தானே வருதற்கு) வருந்திக் காலம் பார்க்கும் நெறியானே.

இஃது அடக்கமுடையார்க்கு அறம் உண்டா மென்றது. உ௬௬.

அடக்கம் அமரருள் உய்க்கும்; அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்.

இ-ள்:—அடக்கம் அமரருள் உய்க்கும் - (மனம் மொழி மெய்களை அடக்கி ஒழுக அவ்) அடக்கம் தேவரிடத்தே கொண்டு செலுத்தும்; அடங்காமை ஆர் இருள் உய்த்துவிடும் - (அவற்றை அடக்காதொழுக அவ்) அடங்காமைதானே நரகத்திடைக் கொண்டுசெலுத்தி விடும்.

மேல் பலவாகப் பயன் கூறினாராயினும், ஈண்டு அடக்கத்திற்கும் அடங்காமைக்கும் இதுவே பயனென்று தொகுத்துக் கூறினார்.

## உ௪-வது.—தவமுடைமை.

தவமாவது, ஊணும் உறக்கமும் குறைத்தலும், வெயிலும் பனியும் தாங்கலும், தேவர் வழிபாடு முதலாயின மேற்கொண்டு

முயறலுமாம். [அடக்கமடைந்தபின்னரே தவம் செய்ய முடியுமாதலான் இஃது அதன்பின் கூறப்பட்டது.]

தவம்செய்வார் தம்கருமம் செய்வார்; மற் றல்லார்
அவம்செய்வார் ஆசையிற் பட்டு.

இ-ள்:—தம் கருமம் செய்வார் தவம் செய்வாரே - தம் கருமம் செய்வார் தவம் செய்வாரே; அல்லார் ஆசையில் பட்டு அவம் செய்வார் - அஃதல்லாத செய்வா ரெல்லாம் ஆசையிலே அகப்பட்டுப் பயனில்லாதன செய்கின்றார்.

[மற்று என்பது அசை. ஏகாரம் தொக்கது.]

இது, தவம் பண்ணவேண்டு மென்றது. உஎக.

துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்
மற்றை யவர்கள் தவம்?

இ-ள்:—துறந்தார்க்கு துப்புரவு வேண்டி - துறந்தவர்களுக்கு உணவு கொடுத்தலை வேண்டி, மற்றையவர்கள் தவம் மறந்தார் கொல் - இல்வாழ்வார் தவம்செய்தலைத் தவிர்ந்தா ராயினரோ?

இது, தானத்தினும் தவம் மிகுதியுடைத் தென்றது. உஎஉ.

தவமும் தவமுடையார்க் காகும்; அவமதனை
அஃதிலார் மேற்கொள் வது.

இ-ள்:—தவமும் தவம் உடையார்க்கு ஆகும் - தவம்செய்தலும் முன்பு நல்வினை செய்தார்க்கு வரும்; அஃது இலார் அதனை மேற்கொள்வது அவம் - நல்வினை யில்லாதார் தவத்தை மேற்கொள்வது பயனில்லை.

இது, முன் அறம் செய்யார்க்குத் தவம் வராது, வரினும் தப்பு மென்றது. உஎங.

**உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை**
**அற்றே தவத்திற் குரு.**

இ - ள்.—உற்றநோய் நோன்றல் - (தமக்கு) உற்ற நோயைப் பொறுத்தலும், உயிர்க்கு உறுகண் செய்யாமை அற்றே - பிற வுயிருக்கு நோய் செய்யாமையுமாகிய அத்தன்மையே, தவத்திற்கு உரு - தவத்திற்கு வடிவாம்.

இது, தவம் இன்னதென்று கூறிற்று. உஎச.

**தன்னுயிர் தானறப் பெற்றானை ஏனைய**
**மன்னுயி ரெல்லாந் தொழும்.**

இ - ள் —தன் உயிர் தான் அற பெற்றானை - தன் உயிரானது தானென்று கருதும் கருத்து அறப் பெற்றவனை, ஏனைய மன் உயிரெல்லாம் தொழும் - ஒழிந்தனவாகிய நிலைபெற்ற உயிர்களெல்லாம் தொழும்.

உயிரென்றது சலிப்பற்ற அறிவை. தானென்றது வேறாக நின்ற நிலைமையை. தான் அறுதலாவது அகங்காரம் நீங்குதல்.

இது, தான் அறப் பெற்றான் தெய்வம் ஆவானென்றது. உஎரு.

**சுடச்சுடப் பொன்போல் ஒளிவிடும் துன்பஞ்**
**சுடச்சுட நோற்கிற் பவர்க்கு.**

இ - ள் —சுட சுட (ஒளி விடும்) பொன்போல் - நெருப்பின் கண்ணே இட இட (த்தன்னோடு கலந்த மாசு அற்று) ஒளிவிடுகின்ற பொன்னைப்போல, துன்பம் சுட சுட நோற்கிற்பவர்க்கு ஒளிவிடும் - துன்பம் நலிய நலியத் தவம் செய்வார்க்கு (த்தம்மொடு மருவின வினைவிட்டு) ஒளிவிடும்.

இது, தவம் செய்வாரது வினை நீங்கி ஒளி உண்டாமென்றது.

**கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்**
**ஆற்றல் தலைப்பட் டவற்கு.**

இ - ள்.—கூற்றம் குதித்தலும் கைகூடும் - கூற்றத்தைத் தப்புதலும் கைகூடும், நோற்றலின் ஆற்றல் தலைப்பட்டவற்கு-தவத்தினாலாகிய வலியைக் கூடினாற்கு.

இது, தவம் செய்வார், (மார்க்கண்டன் தப்பினாற்போல)மரணத்தைத் தப்பலா மென்றது. உ௬௯.

**ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்**
**எண்ணிற் றவத்தான் வரும்.**

இ - ள்.—ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும் - (இவ்விடத்துப்) பகைவரைத் தெறுதலும் நட்டோரை ஆக்குதலுமாகிய வலி, எண்ணின் தவத்தான் வரும் - ஆராயின் முன் செய்த தவத்தினாலே வரும்.

இது, பிறரை ஆக்குதலும் கெடுத்தலும் தம் தவத்தினாலே வருமென்றது. உ௬௮.

**இலர்பலர் ஆகிய காரணம் நோற்பார்**
**சிலர்பலர் நோலா தவர்.**

இ - ள்.—இலர் பலர் ஆகிய காரணம் - பொருளில்லாதார் (உலகத்துப்) பலராதற்குக் காரணம், நோற்பார் சிலர்-தவம் செய்வார் சிலர்; (உளர் சிலர் ஆகிய காரணம்) நோலாதவர் பலர் - பொருளுள்ளார் (உலகத்துச்) சிலராதற்குக் காரணம் தவம் செய்யாதார் பலர்.

[உளர் சிலராகிய காரணம் என்பது சொல்லெச்சமாகக் கொள்ளப்பட்டது.]

இது. பொருள் உண்டாதற்கும் தவம் காரண மென்றது. உ௭௦

**வேண்டிய வேண்டியாங் கெய்தலான் செய்தவம்**
**ஈண்டு முயலப் படும்.**

இ-ள்.—வேண்டிய வேண்டியாங்கு எய்தலான் - விரும்பியன விரும்பினபடியே வருதலால், செய் தவம் ஈண்டு முயலப்படும் - நல்ல தவஞ்செய்தலை இவ்விடத்தே முயலவேண்டும்.

இது, போகநுகர்ச்சியும் தவத்தானே வருமென்றது. உ௭0.

## உகூ-வது.—கூடா வொழுக்கம்.

கூடாவொழுக்கமாவது, மேற் கூறிய தவத்திற்குப் பொருந்தாத ஒழுக்கம். தவமுடையோரால் விலக்கப்பட வேண்டுவதாதலின், இது தவமுடைமையின்பின் கூறப்பட்டது.

**மனத்தது மாசாக மாண்டார்நீ ராடி**
**மறைந்தொழுகும் மாந்தர் பலர்.**

இ-ள்.—மனத்தது மாசாக - மனத்தின்கண் மாசு உண்டாக வைத்து, மாண்டார் நீராடி - மாட்சிமைப்பட்டாரது நீர்மையைப் பூண்டு, மறைந்து ஒழுகும் மாந்தர் பலர் - (பொருந்தாத இடத்திலே) மறைந்து ஒழுகும் மாந்தர் பலர்.

[மாட்சிமைப்பட்டாரது நீர்மை - தவத்தினரது வேடம் முதலியன. பொருந்தாத இடம் - தீய ஒழுக்கத்திற்குரிய இடம். மறைந்து - பிறர் அறியாது.]

மனத்தது என்பது வேற்றுமை மயக்கம், ஆறும் வேற்றுமை உருபு ஏழாம் வேற்றுமைப் பொருள் தந்து நின்றமையால்.

இது, கூடாவொழுக்கத்தால் மனமாசு உண்டாகுமென்றது.

**புறம்குன்றி கண்டனைய ரேனும், அகம்குன்றி**
**மூக்கின் கரியார் உடைத்து.**

இ - ள்.—புறம் குன்றி கண்டு அனையரேனும் - புறத்தில் குன்றிமணி நிறம்போன்ற தூயவேடத்தராயிருப்பினும், அகம் குன்றி மூக்கின் கரியார் உடைத்து - அகத்தில் குன்றி மூக்குப்போலக் கரியராயிருப்பாரை உடைத்து (இவ்வுலகம்).

இது, தவத்தினார் வடிவு கண்டு தேறப்படா ரென்பது. [தவத்தினார் வடிவை ஒருவன் கொண்டுள்ளதாலேயே (அவன் உண்மையான தவத்தினனென்று கருதி) அவனோடு இணங்கார் அறிவுடையா ரென்பது இது.] ௨௮௨.

வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று.

இ - ள்.—வலியில் நிலைமையான் வல் உருவம் - வலியில்லாத நிலைமையை யுடையவன் வலிதாகிய தவஉருவம் (கொடல்), பெற்றம் புலியின் தோல் போர்த்து மேய்ந்தற்று - பெற்றமானது (பிறர் பயப்படும் படிக்குப்) புலியினது தோலைப் போர்த்து (பைங்கூழ்) மேய்ந்த தன்மைத்து.

[பெற்றம் - பசு. வலியில்லாத நிலைமை - (பிறர் பொருளைக் கவர எழும் மனத்தைத் தடுத்து நிறுத்தும்) வலியில்லாத தன்மை.

இது, பிறர் பொருளைக் கவர்வானது தவவேடத்தைக்கண்டு அஞ்சற்க என்பது. ௨௮௩.

தவம்மறைந் தல்லவை செய்தல் புதல்மறைந்து
வேட்டுவன் புள்சிமிழ்த் தற்று.

இ - ள்.—தவம் மறைந்து அல்லவை செய்தல் - தவத்திலே மறைந்து தவமல்லாதவற்றைச் செய்தல், வேட்டுவன் புதல் மறைந்து புள் சிமிழ்த்தால் அற்று - வேட்டுவன் தூற்றிலே மறைந்து புள்ளைப் பிணித்தால்போலும்.

# கூடா வொழுக்கம்

[தவத்திலே - தவவேடத்திலே. தவமல்லா தவற்றை - காமச் செயல்களை. தூறு - புதர். சிமிழ்த்தால் என்பது ஆல் கெட்டுநின் றது.]

(அர்ச்சுனன் சுபத்திரையைக் கவர்தற்காகத் தவவேடம் கொண்டது போலப்) பெண்களைக் கவர்தற்காகத் தவவேடம் கொள்வோரும் உண்டென்றது இது. உஅச.

**வா**னுயர் தோற்றம் எவன்செய்யும், தன்னெஞ்சம்
தானறி குற்றம் படின்?

இ - ள் :—வான் உயர் தோற்றம் எவன் செய்யும் - வான் அளவும் உயர்ந்த பெருமையுண்டாயினும் அஃது யாதினைச் செய்யவற்று, தன் நெஞ்சம் அறிய குற்றம் படின் - தன் நெஞ்சு அறியக் குற்றம் உண்டாயின்?

தான் என்பது அசை. [அறிய என்பது ஈறு கெட்டுநின்றது. வான் அளவும் உயர்ந்த பெருமை யுண்டாயினும் - (தவத்தினால்) மிக வுயர்ந்த பெருமையைப் பெற்றிருப்பினும். நெஞ்சு - மனச்சாட்சி.]

இது, கூடாவொழுக்கத்தினைப் பிறர் அறிந்து இகழாராயினும் அவன் செய்கின்ற தவத்தினால் பயன் உண்டாகா தென்றது. உஅரு.

**வ**ஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும்.

இ - ள் :—வஞ்ச மனத்தான் படிற்று ஒழுக்கம்-கள்ள மனத்தினனது குற்றத்தினையுடைய ஒழுக்கத்தை, பூதங்கள் ஐந்தும் அகத்தே நகும் - (பிறர் அறியாராயினும் தன் உடம்பிலுண்டான) பூதங்கள் ஐந்தும் அறிந்து தம்முள்ளே நகாநிற்கும்.

பூதங்கள் என்றது, அவையிற்றின் காரியமாகிய பொறிகளை. [குற்றத்தினையுடைய ஒழுக்கம் - தீய ஒழுக்கம்.]

இது, பிறர் அறியாரென்று கருதித் தீயன செய்யலாகா தென்றது. உஅசு.

நெஞ்சிற் றுறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணார் இல்.

இ - ள் :—நெஞ்சில் துறவார்-நெஞ்சில் துறவாராய், துறந்தார் போல் வஞ்சித்து வாழ்வாரின் - துறந்தார்போல வஞ்சனைசெய்து வாழுமவர்களைப்போல, வன்கணார் இல் - கொடியார் இல்லை (உலகத்து).

இஃது, அகத்தில் பற்றினை வைத்துக்கொண்டு புறத்தில் துறவு வேடத்தைப் பூணுமவர் மிகக் கொடிய ரென்றது. உஅஎ.

பற்றற்றேம் என்பார் படிற்றொழுக்கம் எற்றெற்றென்
றேதம் பலவுந் தரும்.

இ - ள் :—பற்று அற்றேம் என்பார் படிற்று ஒழுக்கம் - பற்றினை அற்றேம் என்பாரது குற்றத்தினையுடைய ஒழுக்கம், எற்று எற்று என்று பல ஏதமும் தரும் - (எல்லாராலும்) எற்று எற்று என்று சொல்லும்படியாகப் பல குற்றமும் உண்டாக்கும்.

எற்று என்பது இசைச்சொல். [எற்றல் - கொல்லல், வெட்டல்.]

இது, தவவேடத்தினரது தீய ஒழுக்கம் அவருக்கு இம்மையிலும் தீமை பயக்கு மென்றது. உஅஅ.

மழித்தலும் நீட்டலும் வேண்டா, உலகம்
பழித்த தொழித்து விடின்.

இ - ள் :—மழித்தலும் நீட்டலும் வேண்டா - மழித்தலும் நீட்டலும் வேண்டா, உலகம் பழித்தது ஒழித்து விடின் - உலகத்தார் கடிந்தவையிற்றைத் தாமும் கடிந்து விடுவாராயின்.

[மழித்தல் - மொட்டையடித்தல். நீட்டல் - சடை வளர்த்தல். கடிதல் - விலக்குதல். உலகத்தார் கடிந்தவை - அறிவுடையோர் விலக்கியவை. அவை தீய ஒழுக்கங்கள்.]

இது, வேடத்தால் பயனில்லை, நல்ல ஒழுக்கம் வேண்டும் என்றது. உஅகூ.

கணைகொடிது யாழ்கோடு செவ்விதாங் கன்னர்
வினைபடு பாலால் கொளல்.

இ - ள் .—கணை கொடிது - (செவ்விய) கணை கொடுமையைச் செய்யும் ; கோடு யாழ் செவ்விது - கோடிய யாழ் செவ்வையைச் செய்யும் ; ஆங்கு - அதுபோல, (யாவரையும் வடிவுகண்டு அறியலாகாது ;) அன்னர் வினை படு பாலால் கொளல் - அவரவர் செய்யும் வினையின் பகுதியாலே அறிக.

இது, வேடத்தை ஆதாரமாகக் கொள்ளாது, செயலை ஆதாரமாகக் கொண்டு, ஒருவரை (இத்தன்மையரென்று) மதிக்க வேண்டுமென்றது. உகூ0.

## ௲ய-வது.—அழுக்காறாமை.

அழுக்காறாமையாவது, பிறர் ஆக்கம் முதலாயின கண்டு பொறாமையால் வருகின்ற மனக்கோட்டத்தைச் செய்யாமை. [இது முதலாகக் கூடாவொழுக்கப் பகுதியில் சிலவற்றை விதந்து கூறுகின்றார். அழுக்காறு இம்மையினும் மறுமையினும் நன்மையொன்றையும் பயவாது தீமையையே பயப்பதாதலால், அழுக்காறாமை முதற்கண் கூறப்பட்டது.]

ஒழுக்காறாக் கொள்க ஒருவன்,தன் நெஞ்சத்
தழுக்கா றிலாத இயல்பு.

இ - ள் :—ஒருவன் தன் நெஞ்சத்து அழுக்காறு இலாத இயல்பு - ஒருவன் தன் நெஞ்சத்தில் அழுக்காறு இல்லாத இயல்பை, ஒழுக்கு ஆறாக கொள்க - தனக்கு ஒழுக்க நெறியாகக் கொள்க.

[ஒழுக்காறாக என்பது ஈறு கெட்டுநின்றது.]

இஃது, அழுக்காற்றைத் தவிர வேண்டுமென்றது. ௨௯௧.

விழுப்பேற்றின் அஃதொப்ப தில்லை,யார் மாட்டும்
அழுக்காற்றின் அன்மை பெறின்.

இ - ள் .—யாா மாட்டும் அழுக்காற்றின் அன்மை பெறின்-யாரிடத்தும் அழுக்காறு செய்யாமையைப் பெறுவானாயின், அஃது ஒப்பது விழுப்பேற்றின் இல்லை - அதனை ஒப்பது விழுமிய பேறுகளுள் பிறிதில்லை.

இஃது, அழுக்காறுசெய்யாமை எல்லா நன்மைகளிலும் மிக்கதென்றது. ௨௯௨.

அழுக்காற்றின் அல்லவை செய்யார், இழுக்காற்றின்
ஏதம் படுபாக் கறிந்து.

இ - ள் :—அழுக்காற்றின் அல்லவை செய்யார - அழுக்காற்றினானே அறமல்லாதவற்றைச் செய்யார் (நல்லோர), இழுக்காற்றின் ஏதம் படும்பாக்கு அறிந்து - (அவ்வறம்) தப்பின நெறியினால் குற்றம் வருதலை அறிந்து.

இஃது, அழுக்காற்றால் பல குற்றங்கள் வருமென்றது. (அவை வருமாறு பின்னர்க் கூறப்படும்.) ௨௯௩.

அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கக் கெடும்.

இ - ள் :—அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் - அழுக்காற்று நெஞ்சத்தானுடைய ஆக்கமும், செவ்வியான் கேடும் - செவ்விய நெஞ்சத்தானுடைய கேடும், நினைக்க கெடும் - விசாரிக்கக் கெடும்.

[அவ்வியம் - கோட்டம். செவ்வி - நேர்மை. விசாரிக்க - ஆராயின்.]

இஃது, அழுக்காறுடையார் செல்வம் கெடு மென்றது, "அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன் றில்லை, ஒழுக்கம் இலான்கண் உயர்வு" என்றா ராதலின். ௨௬௪.

**அழுக்காற் றகன்றாரும் இல்லை; அஃ தில்லார்**
**பெருக்கத்திற் றீர்ந்தாரும் இல்.**

[இ - ள் .—அழுக்காற்று அகன்றாரும் இல்லை - அழுக்காற்றினால் செல்வமுடைய ரானாரும் இல்லை; அஃது இல்லார் பெருக்கத்தின் தீர்ந்தாரும் இல் - அழுக்கா றில்லாதா ராய்ச் செல்வத்தினின்று நீங்கினாரும் இல்லை.]

[உரையாசிரியர் இக்குறட்கு மேற்குறித்த பொருள் கூறுது "முன்பு சொன்னதே பொருள்" என்று கூறிச்சென்றார்.]

இஃது, அழுக்கா றில்லாதார் பொருளுக்குக் கேடு உண்டாகா தென்றது. ௨௬௫.

**அறனாக்கம் வேண்டாதா னென்பான், பிறனாக்கம்**
**பேணா தழுக்கறுப் பான்.**

இ - ள் :—அறன் ஆக்கம் வேண்டாதான் என்பான் - (தனக்கு) அறனாகிய வாழ்வு வேண்டாதான் என்று சொல்லப்படுவான், பிறன் ஆக்கம் பேணாது அழுக்கறுப்பான் - பிறனுடைய ஆக்கத்தைக் கண்டு மகிழாதே அழுக்காறுசெய்வான்.

இஃது, அழுக்காறுடையார்க்குப் புண்ணியம் இல்லையா மென்று கூறிற்று. ௨௬௬.

**கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்றம், உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும்.**

இ - ள் :—கொடுப்பது அழுக்கு அறுப்பான் சுற்றம் - (பிறனொருவன் மற்றொருவனுக்குக்) கொடுப்பதனை அழுக்காற்றினாலே விலக்குவானது சுற்றம், உடுப்பதும் உண்பதும் இன்றி கெடும் - உடுப்பதும் உண்பதும் இன்றிக் கெடும்.

[அழுக்கறுப்பான் என்பதனை அழுக்கு எனவும் அறுப்பான் எனவும் பிரித்து, அழுக்கு என்பதற்கு அழுக்காற்றினால் எனவும், அறுப்பான் என்பதற்கு விலக்குவான் எனவும் இவ்வுரையாசிரியர் உரைத்திருப்பது கவனித்தற் பாலது. அழுக்கறுத்தல் என்பதனை ஒருசொல் நீர்மைத்தாகக் கொண்டு உரைத்துள்ளார் பரிமேலழகர். உடுப்பது - உடை. உண்பது - உணவு.]

அழுக்காறு நல்குரவு தருமென்று இது கூறிற்று.´ உகூஎ

**அவ்வித் தழுக்கா றுடையானைச் செய்யவள்
தவ்வையைக் காட்டி விடும்.**

இ - ள் .—அழுக்காறு உடையானை செய்யவள் அவ்வித்து - அழுக்காற்றினை யுடையானைத் திருமகள் அழுக்காறு செய்து, தன் தவ்வையை காட்டி விடும் - தன் தமக்கையாகிய மூதேவிக்குக் காட்டி (இவன்பால் செல்லென்று கூறி அவனினின்று) போம்.

[தவ்வையை என்பது வேற்றுமை மயக்கம்.]

இது, நல்குரவிற்குக் காரணம் கூறிற்று. உகூஅ.

**அழுக்கா றெனஒரு பாவி திருச்செற்றுத்
தீயுளி உய்த்து விடும்.**

இ - ள் :—அழுக்காறு என ஒரு பாவி - அழுக்காறு என்று சொல்லப்படுகின்ற ஒரு பாவி, திரு செற்று தீயுளி உய்த்து விடும் - செல்வத்தையும் கெடுத்துத் தீக்கதியுள்ளும் கொண்டு விடும்.

ஒரு பாவி - நிகரில்லாத பாவி.

அழுக்காறு செல்வம் கெடுத்தலேயன்றி நரகம் புகுவிக்கு மென்று இது கூறிற்று. ௨௯௯.

அழுக்கா றுடையார்க் கதுசாலும், ஒன்னார்
வழுக்கியும் கேடீன் பது.

இ - ள் :—அழுக்காறு உடையார்க்கு - அழுக்காற்றை யுடையானுக்கு, ஒன்னார் கேடு ஈன்பது வழுக்கியும் - பகைவர் கேடு பயத்தல் தப்பியும், அது சாலும் - அவ்வழுக்காறு தானே அமையும்.

இஃது, அழுக்காற்றால் உயிர்க்கேடு வருமென்றது. ௩௦௦.

## ௩௧-வது.—வெஃகாமை.

வெஃகாமையாவது, பிறர்பொருளை விரும்பாமை. [தன்னயத்தைக் காரணமாகக் கொண்ட கூடாவொழுக்கங்களுக் கெல்லாம் வெஃகுதல் காரணமாதலால், இவ்வதிகாரம் அழுக்காறாமையின்பின் கூறப்பட்டது.]

வேண்டற்க வெஃகியாம் ஆக்கம், விளைவயின்
மாண்டற் கரிதாம் பயன்.

இ - ள் :—வெஃகி ஆம் ஆக்கம் வேண்டற்க - பிறர்பொருளை விரும்பி ஆகும் ஆக்கத்தை வேண்டாதொழிக ; விளைவயின் ஆம் பயன் மாண்டற்கு அரிது - (அது) பயன்படுங்காலத்தில் ஆகும் பயன் நன்றாதல் இல்லையாதலான்.

[மாண்டற்கு அரிது - மாட்சிமைப்படுதற்கு அரிது - மாட்சிமைப்படுதல் இல்லை - நன்றாதல் இல்லை.]

இது, வெஃகலால் ஆகும் ஆக்கம் நல்ல பயனை நல்காதென்று கூறிற்று. ௩௦௧.

அஃகி அகன்ற அறிவென்னாம், யார்மாட்டும்
வெஃகி வெறிய செயின் ?

இ - ள் —அஃகி அகன்ற அறிவு என் ஆம் - நுண்ணிதாகப் பரந்த அறிவுடையனாயிருத்தலால் யாதுபயன் ஆகும், வெஃகி யார் மாட்டும் வெறிய செயின் - பிறர்பொருளைவிரும்பி எல்லாரிடத்தும் ஈரமில்லாதன செய்வானாயின் ?

[அறிவு என்பது அறிவுடையனாயிருக்குந் தன்மையைக் குறித்து நின்றது. ஈரமில்லாதன - அன்பில்லாத செயல்கள்.]

இஃது, அறிவுடையார் வெஃகுதல் செய்யாரென்றது. ௱௨0௫.

இலமென்று வெஃகுதல் செய்யார், புலம்வென்ற
புன்மையில் காட்சி யவர்.

இ - ள் :—இலம் என்று வெஃகுதல் செய்யார் - (யாம்) வறியம் என்று பிறர்பொருளைவிரும்புதல் செய்யார், புலம் வென்ற புன்மை இல் காட்சியவர் - ஐம்புலனையும் வென்ற புன்மை இல்லாத தெளிவையுடையார்.

[ஐம்புலன் - சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம். அவற்றை வெல்லலாவது, அவற்றைப்பற்றி எழும் அவாவினை ஒழித்தல்.]

இது, துறந்தார் வெஃகுதல் செய்யாரென்றது. ௩0௪.

சிற்றின்பம் வெஃகி அறனல்ல செய்யாரே
மற்றின்பம் வேண்டு பவர்.

இ - ள் .—சிற்றின்பம் வெஃகி அறன் அல்ல செய்யார் - சிற்றின்பத்தை நல்கும் பொருளை விரும்பி அறனல்லாதவற்றைச் செய்யார், மற்று இன்பம் வேண்டுபவர் - பேரின்பமாகிய வீடுபேற்றைக் காமிப்பவர்.

[மற்று இன்பம் - சிற்றின்பமல்லாத இன்பம் - பேரின்பம். ஏகாரம் அசை. அறனல்லாத - மறச்செயல்கள்.]

இது, வீடுபெற விரும்புவோர் வெஃகுதல் செய்யா ரென்றது.

படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்
நடுவன்மை நாணு பவர்.

இ - ள் :—படு பயன் வெஃகி பழிப்படுவ செய்யார் - (தமக்கு) உண்டாகும் பயனை விரும்பிப் பழியொடுபடுவன செய்யார், நடு வன்மை நாணுபவர் - நடுவன்மைக்கு நாணுபவர்.

[நாணுபவர் - அஞ்சுபவர். பழிபொடுபடுவன - பழியைஉண்டு பண்ணும் பாவச் செயல்கள்.]

இது, நடுவுநிலைமை வேண்டுபவர் வெஃகுதல் செய்யாரென்றது.

அருள்வெஃகி ஆற்றின்கண் நின்றான்,பொருள்வெஃகிப்
பொல்லாத சூழக் கெடும்.

இ - ள் :—அருள் வெஃகி ஆற்றின்கண் நின்றான் - அருளை விரும்பி அறநெறியிலே நின்றவனும், பொருள் வெஃகி பொல்லாத சூழ கெடும் - பொருளை விரும்பி அறனல்லாதவற்றைச் சூழக் கெடுவன்.

[நின்றானும் என்பது உம்மை தொக்கு நின்றது. உம்மை உயர்வு சிறப்பும்மை. அஃது, அருளைவிரும்பி அறநெறியில் நின்றவன் வேறொன்றாலும் கெடான் என்பதனைச் சுட்டிநின்றது. சூழ்தல் - நினைத்தல்.]

இஃது, அருளுடையானும் வெஃகுதல் செய்யக் கெடுவ னென்றது. ௲௦௬.

நடுவின்றி நன்பொருள் வெஃகின், குடிபொன்றிக்
குற்றமும் ஆங்கே தரும்.

இ - ள் :—நடுவு இன்றி நன் பொருள் வெஃகின் - நடுவுநிலை யின்றி மிக்க பொருளை விரும்புவானாயின், குடி பொன்றி குற்றமும் ஆங்கே தரும் - (அதனாலே அவன்) குலமும் கெட்டு அவ்விடத்தே குற்றமும் உண்டாம்.

இது, வெஃகுதல் செய்வார்க்குச் சந்தான நாசம் உண்டா மென்றது. ௱௭௦ எ.

இறலீனும் எண்ணாது வெஃகின்; விறலீனும்
வேண்டாமை என்னும் செருக்கு.

இ - ள் :—எண்ணாது வெஃகின் இறல் ஈனும் - விசாரியாதே பிறர்பொருளைவிரும்புவானாயின் (அது அவனுக்குக்) கேட்டைத் தரும்; வேண்டாமை என்னும் செருக்கு விறல் ஈனும் - (பிறன்பொருளை) வேண்டாமையாகிய பெருமிதம் ஆக்கத்தைத் தரும்.

இது, வெஃகுதல் செய்வார்க்கு உயிர்க்கேடு வரு மென்றது.

அஃகாமை செல்வத்திற் கியாதெனின், வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள்.

இ - ள் :—செல்வம் அஃகாமைக்கு யாது எனின் - செல்வம் சுருங்காமைக்குக் காரணம் யாதோவெனின், பிறன் வேண்டும் கைப் பொருள் வெஃகாமை - பிறன் விரும்பும் கைப்பொருளை (த்தான்) வேண்டாமை (என்க).

இது, வெஃகுதல் செய்யாதார்க்குச் செல்வம் அழியா தென்றது. ௱௭௦க.

அறனறிந்து வெஃகா அறிவுடையார்ச் சேரும்
திறனறிந் தாங்கே திரு.

இ - ள் :—அறன் அறிந்து வெஃகா அறிவுடையார் - அறத்தை அறிந்து பிறர்பொருளை விரும்பாத அறிவுடையாரை, திரு திறன் அறிந்து சேரும் - திருமகள் (தானே) தகுதியறிந்து சேர்வள்.

அறன் அறிதல் - பிறர்பொருளை விரும்பாமை அறனென்று அறிதல்.

இது, வெஃகுதல் செய்யாதார்க்குச் செல்வம் உண்டாமென்றது. ௱௮௰.

## ௲௨-வது.—புறங்கூறாமை.

புறங்கூறாமையாவது, யாவரையும் இகழ்ச்சியாக அவர் புறத்தே உரையாமை. [புறங்கூறுதல் வாக்கால் நிகழும் குற்றங்களுள் மிகக்கொடியதாதலால், இவ்வதிகாரத்தை மனத்தால் நிகழும் அழுக்காற்றையும் வெஃகுதலையும் நீக்கவேண்டு மென்ற பின்னாக் கூறினார்.]

கண்ணின்று கண்ணறச் சொல்லினும், சொல்லற்க
முன்னின்று பின்னோக்காச் சொல்.

இ - ள் :—கண் நின்று கண் அற சொல்லினும்-(ஒருவன்) கண்ணெதிரே நின்று கண்போத்துச் சொல்லினும் (அமையும்;), பின் முன் நின்று நோக்காச் சொல் சொல்லற்க - பிற்காலத்து அவன் முன்னே நின்று (எதிர் முகம்) நோக்கவொண்ணாத சொல்லைச் சொல்லாதொழிக.

இது, புறங்கூறுதலைத் தவிர்க என்றது. அன்றியும், கடியசொல் கூறலும் ஆகா தென்றது. ௱௮௧.

புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின், சாதல்
அறங்கூறும் ஆக்கம் தரும்

இ - ள்:—புறங்கூறி பொய்த்து உயிர் வாழ்தலின்-(காணா இடத்துப்) புறஞ்சொல்லி (க்கண்ட இடத்து)ப் பொய் சொல்லி உயி

நோடு வாழ்தலின், சாதல் அறம் கூறும் ஆக்கம் தரும் - (புறஞ் சொல்லாதிருந்து நல்குரவினால்) சாதல் அறநூல் சொல்லுகின்ற ஆக்கமெல்லாம் தரும்.

இது, புறங்கூறாமை ஆக்கமெல்லாம் தருமென்றது. ௱௮௨.

அறங்கூறான் அல்ல செயினும், ஒருவன்
புறங்கூறான் என்றல் இனிது.

இ - ள் :—ஒருவன் அறம் கூறான் அல்ல செயினும் - ஒருவன் அறத்தை வாயால் சொல்லுதலும் செய்யானாய்ப் பாவங்களைச் செய்யினும், புறங்கூறான் என்றல் இனிது - பிறரைப் புறஞ்சொல்லான் என்று உலகத்தாரால் சொல்லப்படுதல் நன்றாம்.

இது, பாவம் செய்யினும் புறங்கூறாமை நன்மை பயக்குமென்றது. ௱௮௩.

அறஞ்சொல்லும் நெஞ்சத்தான் அன்மை, புறஞ்சொல்லும்
புன்மையால் காணப் படும்.

இ - ள் :—அறம் சொல்லும் நெஞ்சத்தான் அன்மை - அறத்தை நினைக்கின்ற மனமுடையன் அல்லாமை, புறஞ்சொல்லும் புன்மையால் காணப்படும் - (பிறரைப்) புறஞ்சொல்லும் புல்லியகுணம் ஏதுவாக அறியப்படும்.

[நெஞ்சால் சொல்லலாவது, நினைத்தல்.]

இது, புறஞ்சொல்லுவார் மனம் அறத்தை அறியாதென்றது.

அறனழீஇ அல்லவை செய்தலின் தீதே,
புறனழீஇப் பொய்த்து நகை.

இ - ள் :—அறன் அழீஇ அல்லவை செய்தலின் தீது - அறத்தை அழித்து அறமல்லாதவற்றைச் செய்தலினும் தீது, புறன் அழீஇ

பொய்த்து நகை - (ஒருவனைக்) காணாத இடத்து இழித்துரைத்து (க்கண்ட இடத்து)ப் பொய்செய்து நகுதல்.

இது, புறங்கூறுதல் பாவத்தினும் மிக்கபாவ மென்றது. ௧௮௫

பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர், நகச்சொல்லி
நட்பாடல் தேற்றா தவர்.

இ - ள் :—பக சொல்லி கேளிர் பிரிப்பர் - நீங்கும்படி சொல்லித் தம் கேளிராவாரைப் பிரிப்பர், நக சொல்லி நட்பு ஆடல் தேற்றாதவர் - மகிழச் சொல்லி நட்பினை உயர்வுபண்ண மாட்டாதார்.

இது, புறங்கூறுவார் நட்டவரை இழப்ப ரென்றது. ௧௮௬.

துன்னியார் குற்றமும் தூற்றும் மரபினார்
என்னைகொல் ஏதிலார் மாட்டு.

இ - ள் .—துன்னியார் குற்றமும் தூற்றும் மரபினார் - (தம்மோடு) செறிந்தார் குற்றத்தையும் பிறர்க்கு உரைக்கின்ற செய்தியையுடையார், ஏதிலார் மாட்டு என்னை கொல் - (தம்மோடு) செறிவில்லாதார் மாட்டு யாங்ஙனம் செய்வரோ ?

இது, புறங்கூறுவார் யாவரோடும் பற்றில ரென்றது. ௧௮௭.

அறம்நோக்கி ஆற்றுங்கொல் வையம், புறம்நோக்கிப்
புன்சொல் உரைப்பான் பொறை.

இ - ள் :—புறம் நோக்கி புன்சொல் உரைப்பான் பொறை - பிறன் இல்லாத இடம் பார்த்துப் புறஞ்சொல் கூறுவான் உடலை, வையம் அறம் நோக்கி ஆற்றும் - நிலம் தானே அறத்தை நோக்கிப் பொறுத்ததாம் (அல்லது போக்கும்). [கொல் என்பது அசை.]

இது, புறங்கூறுவார்க்குத் துணையாவார் இல்லை யென்றது.

பிறன்பழி கூறுவான் தன்பழி யுள்ளும்
திறன்தெரிந்து கூறப் படும்.

இ - ள்:—பிறன் பழி கூறுவான் - பிறனுடைய பழியைச் சொல்லுமவன், தன் பழியுள்ளும் திறன் தெரிந்து கூறப்படும் - தனக்குண்டான பழிகளிலும் சிலவற்றை வேறுபடத் தெரிந்து (பிறரால்) சொல்லப்படுவான்.

இது, புறங்கூறுவானைப் பிறரும் புறங்கூறுவரென்றது. ௩௧௯.

ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கின்,பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு.

இ - ள்:—ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கின் - பிறர் குற்றம்போலத் தமது குற்றத்தையும் காணவல்லராயின், மன்னும் உயிர்க்கு பின் தீது உண்டோ - (தமது) நிலைபெற்ற உயிர்க்குப் பின்வரும் தீமை உண்டோ? (இல்லை.)

இது, புறஞ்சொல்லாமைக்குக் காரணம் கூறிற்று. ௩௨0.

## ௩௩-வது.—பயனில சொல்லாமை.

பயனில சொல்லாமையாவது, கேட்டார்க்கும் தனக்கும் நற்பயன்படாத சொற்களைக் கூறாமை. [வாக்கினால் நிகழும் பாவம் நான்கினுள் பொய்யை "வாய்மை" யாலும், கடுஞ்சொல்லை "இனியவை கூற" லாலும், குறளையைப் "புறங்கூறாமை" யாலும் விலக்கிப் பயனில் சொல்லை இவ்வதிகாரத்தால் விலக்குகின்றார்.]

சொல்லுக சொல்லின் பயனுடைய; சொல்லற்க
சொல்லில் பயனிலாச் சொல்.

இ - ள்:—சொல்லின் பயனுடைய சொல்லுக - (ஒருவன்) சொல்லுவனாயின் பயன் உடைய சொற்களைச் சொல்லுக; சொல்

லில் பயன் இலா சொல் சொல்லற்க - சொற்களில் பயன் இல்லாத சொற்களைச் சொல்லாதொழிக.

இது, பயனில சொல்லாமை வேண்டுமென்பது. ௱௨௧.

**ப**யனில பல்லார்முன் சொல்லல், நயனில
நட்டார்கண் செய்தலின் றீது.

இ - ள் :—பயன் இல பல்லார்முன் சொல்லல் - பயன் இல்லாத சொற்களைப் பலர்முன்பு சொல்லல், நயன் இல நட்டார்கண் செய்தலின் தீதே - நன்மையில்லாதவற்றை நட்டார்மாட்டுச் செய்தலினும் தீதே.

[நன்மை இல்லாத - தீய செயல்கள். தீது என்பது தேற்றேகாரம் கெட்டு நின்றது.]

இது, பயனில கூறல் இம்மை மறுமை இரண்டின்கண்ணும் தீமை பயக்கு மென்றது. ௱௨௨.

**ந**யனிலன் என்பது சொல்லும், பயனில
பாரித் துரைக்கும் உரை.

இ - ள் :—நயனிலன் என்பது சொல்லும் - நயனுடையன் அல்லன் என்பதனை அறிவிக்கும், பயன் இல பாரித்து உரைக்கும் உரை - பயனில்லாதவற்றைப் பரக்கவிட்டுச் சொல்லும் சொற்கள்.

இது, பயனில சொல்லுவார் இம்மையின்கண் படுவதோர் இயம் பப்பட்டா ரென்றது. ௱௨௩.

**ந**யன்சாரா நன்மையின் நீக்கும், பயன்சாராப்
பண்பில்சொல் பல்லார் அகத்து.

இ - ள் :—பயன் சாரா பண்பில் சொல் பல்லார் அகத்து - ஒரு பயனைச் சாராத பண்பில்லாச் சொல்லைப் பலரிடத்து (க் கூறுவனாயின்), நயன் சாரா நன்மையின் நீக்கும் - அவன் நடு சாராது நன்மையின் நீங்குவான்.

[கூறுவனாயின் என்பது எச்சமாக வருவிக்கப்பட்டது.]

இது, பயனில கூறல் பிறரால் விரும்பப்படாமையுமன்றி நன்மையும் பயவா தென்றது. ௱௯௪.

சீர்மை சிறப்பொடு நீங்கும், பயனில
நீர்மை யுடையார் சொலின்.

இ-ள்:—பயன் இல நீர்மை உடையார் சொலின் - பயன் இல்லாதவற்றை நீர்மையுடையார் கூறுவாராயின், சீர்மை சிறப்பொடு நீங்கும் - (அவர்க் குண்டான) சீர்மையும் சிறப்பும் போம்.

[நீர்மை - நீரின்தன்மை - அருள். சீர்மை - நன்மை. சிறப்பு - மேன்மை. ஒடு என்பது இங்கு எண்ணுப்பொருளில் வந்தது.]

இது, நீர்மையுடையார் பயனில கூறுவாராயின், அவருடைய எல்லா நன்மையும் போ மென்றது. ௱௯௫.

பல்லார் முனியப் பயனில சொல்லுவான்
எல்லாரும் எள்ளப் படும்.

இ-ள்.—பயன் இல பல்லார் முனிய சொல்லுவான் - பயன் இல்லாதவற்றைப் பலர் வெறுக்கச் சொல்லுமவன், எல்லாரும் எள்ளப்படும் - எல்லாராலும் இகழப்படுவன்.

இது, பயனில கூறுவான் பிறரால் இகழப்படுவ னென்றது.

பயனில்சொல் பாராட்டு வானை மகனெனல்;
மக்கட் பதடி எனல்.

இ-ள்;—பயன் இல் சொல் பாராட்டுவானை - பயன் இல்லாத சொல்லைக் கொண்டாடுவானை, மகன் எனல் - மகன் என்றுசொழிக; மக்கள் பதடி எனல் - மக்களில் பதர் என்று சொல்லுக.

[முதல் 'எனல்' அல்லீற்று எதிர்மறை வியங்கோள். இரண்டாம் 'எனல்' அல்லீற்று உடன்பாட்டு வியங்கோள்.]

# பயனில சொல்லாமை

இது, பயனில்சொல் பாராட்டுதல் மக்கட் பண்பில்லை யென்றது. ௱௨௭.

அரும்பயன் ஆயும் அறிவினார் சொல்லார்
பெரும்பயன் இல்லாத சொல்.

இ - ள் :—அரும்பயன் ஆயும் அறிவினார் - அரிய பொருளை ஆராயும் அறிவினையுடையார், பெரும் பயன் இல்லாத சொல் சொல்லார் - பெரிய பயன் இல்லாத சொற்களைச் சொல்லார்.

[அரிய பொருள் - உணர்தற்கு அரிய பொருள்; அதாவது மெய்ப்பொருள்.]

இது, பயனில்சொல் மேற்கூறிய குற்றமெல்லாம் பயத்தலின் அதனை அறிவுடையார் சொல்லா ரென்றது. ௱௨௮.

பொருடீர்ந்த பொச்சாந்தும் சொல்லார், மருடீர்ந்த
மாசறு காட்சி யவர்.

இ - ள் :—பொருள் தீர்ந்த பொச்சாந்தும் சொல்லார் - பொருள் இல்லாத சொல்லை மறந்தும் சொல்லார், மருள் தீர்ந்த மாசு அறு காட்சியவர் - மயக்கம் தீர்ந்த குற்றம் அற்ற தெளிவினையுடையார்.

[பொருள் - பயன். தீர்தல் - நீங்குதல்.]

இது, தெளிவுடையார் பயனில கூறா ரென்றது. ௱௨௯.

நயனில சொல்லினும் சொல்லுக சான்றோர்
பயனில சொல்லாமை நன்று.

இ - ள் :—சான்றோர் நயன் இல சொல்லினும் சொல்லுக-சான்றோர் நயன் இல்லாதவற்றைச் சொல்லினும் சொல்லுக; பயன் இல சொல்லாமை நன்று-பயன் இல்லாதவற்றைச் சொல்லாமை நன்று.

[சான்றோர் - கல்வி யறி வொழுக்கங்களால் நிறைந்தோர்.]

இது, பயனில கூறுதல் சான்றோர்க்கு ஆகா தென்றது. ருருO.

## ருச-வது.—நிலையாமை.

அஃதாவது, மயக்கத்தினால் நானென்று நினைத்திருக்கின்ற யாக்கையும், தனதென்று நினைத்திருக்கின்ற பொருளும் நிலை நில்லாமையைக் கூறுதல். [நவத்தினையுடையார் கூடாவொழுக்கத்தை நீத்தபின்னர் 'யான்' 'எனது' என்னும் பற்றுக்களைத் துறக்க வேண்டுதலின், அவற்றின் நிலையாமை முதற்கண் கூறப்பட்டது.]

நில்லா தவற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை

இ - ள் :—நில்லாதவற்றை நிலையின என்று உணரும்-நில்லாத பொருள்களை நிலைநிற்பன என்று நினைக்கின்ற, புல் அறிவாண்மை கடை - புல்லிய அறிவுடைமை இழிந்தது.

இது, பொருள்களை உள்ளவாறு காணவொட்டாத மயக்கத்தைக் கடியவேண்டு மென்றது. ருருக.

அற்கா இயல்பிற்றுச் செல்வம்; அதுபெற்றால்
அற்குப ஆங்கே செயல்.

இ - ள் :—செல்வம் அற்கா இயல்பிற்று - செல்வம் நில்லாத இயல்பையுடைத்து; அது பெற்றால் ஆங்கே அற்குப செயல் - அதனைப் பெற்றால் அப்பொழுதே நிற்பனவாகிய அறங்களைச் செய்க.

நிலையாமை மூன்று வகைப்படும். அவை செல்வம் நிலையாமை, இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை என்பன.

செல்வம் நிலையில்லாத தென்றும், செல்வத்தைப் பெற்றபொழுதே அறம் செய்யவேண்டு மென்றும் இது கூறிற்று. ருருஉ.

*கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்;*
*போக்கும் அதுவிளிந் தற்று.*

இ - ள் :—கூத்தாட்டு அவைக்குழாம் அற்று பெருஞ் செல்வம்- கூத்தாட்டு (க்காண்டற்கு) அவைக்கூட்டம் (திரண்டால்) போலும் பெருஞ் செல்வம் (திரளுமாறு); அது விளிந்தால் அற்று போக்கும் - அந்த அவை எழுந்துபோனால் போலும் அது போமாறும்.

[அவை - சபை. அத்து சாரியை. திரண்டால் என்பதும் திருளுமாறு என்பதும் எச்சமாக வருவிக்கப்பட்டன. விளிந்தால் என்பது ஆல் கெட்டு நின்றது. ஏகாரம் அசை.]

இது, செல்வத்தின் வரத்தும் போக்கும் ஒரு பொழுதிலே நிகழு மென்றது. ௩௩௨.

*நாளென ஒன்றுபோல் காட்டி உயிரீரும்*
*வாள தூணர்வார்ப் பெறின்.*

இ - ள் :—நாள் என்பது ஒன்றுபோல் காட்டி உயிர் ஈரும் வாள் - நாள் என்பது (இன்பம் தருவதாகிய) ஒன்றுபோலக் காட்டி உயிரை ஈருகின்ற ஒருவாளாம், அஃது உணர்வார் பெறின் - அதனை அறிவாரைப் பெறின்.

[அஃது என்பது ஆய்தம் கெட்டுநின்றது. அதனை அறிவாரைப் பெறின் - அதன் உண்மைத்தன்மையை அறிவார் உண்டாயின்.]

இஃது, "உயிரீரும்" என்றமையால் இளமை நிலையாமை கூறிற்று. ௩௩௪.

*நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை*
*மேற்சென்று செய்யப் படும்.*

இ - ள் :—நா செற்று விக்குள் மேல் வாராமுன் - நா (வழங்காமல்) செறுத்து விக்குளானது மீதூர்ந்து வருவதன்முன்னே, நல்

வினை மேல்சென்று செய்யப்படும் - நல்வினையை மேல்விழுந்து செய்யவேண்டும்.

[செறுத்தல் - ஒட்டிப்போதல். மீதூர்ந்து வருதல் - மேல் வருதல். மேல்விழுந்து-முன்சென்று-விரைந்து. படும் என்பது வேண்டும் என்னும் பொருள் தந்து நின்றது.]

இஃது, உயிரானது கழிவதன்முன்னே நல்வினையைச் செய்ய வேண்டுமென்றது ௩௩௫.

நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு.

இ - ள்.—ஒருவன் நெருநல் உளன் இன்று இல்லை என்னும் பெருமை - "ஒருவன் நேற்று உளனாயிருந்தான் இன்று இல்லையாயி னன்" என்று சொல்லும் பெருமையை, இவ்வுலகு உடைத்து - இவ்வுலகம் உடைத்து.

["நெருநல் உளனொருவன் இன்று இல்லை" என்பது உலகத் தார் கூற்றாகக் கூறப்பட்டுள்ளது.]

இது, யாக்கை நிலையாமை கூறிற்று. ௩௩௬.

ஒருபொழுதும் வாழ்வ தறியார், கருதுப
கோடியும் அல்ல பல.

இ - ள்:—ஒருபொழுதும் வாழ்வது அறியார்-ஒருபொழுதள வும் (தம் உயிர்) நிலைநிற்குமென்பதனை அறியாராயிருந்தும், கோடி யும் அல்ல பல கருதுப - (தமது வாழ்நாள்கள்) கோடியும் அல்ல பலவாகக் கருதுவர் (உலகத்தார்).

மேல், ஒருநாள் உளனானவன் பிற்றை ஞான்று செத் தானென்றார்; ஈண்டு, ஒருபொழுதளவும் உயிர் நிலையாகா தென்றார். ௩௩௭.

குடம்பை தனித்தொழியப் புள்பறந் தற்றே,
உடம்போ டுயிருடை நட்பு.

இ-ள்.—குடம்பை தனித்து ஒழிய புள் பறந்தால் அற்று - கூடு தனியே கிடக்கப் புள்ளுப் பறந்துபோனும் போலும், உடம்போடு உயிர் உடை நட்பு - உடம்போடு உயிர் கொண்டுள்ள நட்பு.

[ஏகாரம் அசை. நட்பு என்பது நட்பின் விடுகையை உணர்த்தி நின்றது. உடைய என்பது ஈறு கெட்டுநின்றது.]

மேல், உயிர் நிலைநிற்றற்கு ஒருபொழுதென்று காலம் கூறினார். இஃது, உயிர் நினைத்தபொழுது போமென்றது. ௩௩௮.

உறங்கு வதுபோலும் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு.

இ-ள்.—உறங்குவது போலும் சாக்காடு - உறங்குவதனோடு ஒக்கும் சாக்காடு; உறங்கிவிழிப்பது போலும் பிறப்பு - உறங்கிவிழிப்பதனோடு ஒக்கும் பிறப்பு.

இது, போன உயிர் மீண்டும் பிறக்குமென்பதூஉம், இறத்தலும் பிறத்தலும் உறங்குதலும் விழித்தலும்போல மாறிவருமென்பதூஉம் கூறிற்று. ௩௩௯.

புக்கில் அமைந்தின்று கொல்லோ, உடம்பினுள்
துச்சில் இருந்த உயிர்க்கு.

இ-ள்:—உடம்பினுள் துச்சில் இருந்த உயிர்க்கு - (தனதல்லாத) உடம்பினுள்ளே ஒதுக்குக் குடியாக இருந்த உயிர்க்கு, புக்கில் அமைந்தது இன்றோ - போயிருக்க இடம் அமைந்ததில்லையோ? (அமைந்த) தாயின் இதனுள் இராதென்றவாறு. [கொல் என்பது அசை.]

இது, மேற்கூறியவாற்றான் உயிர் மாறிப் பிறந்துவரினும் ஓர் இடத்தே தவறுமென்பது கூறிற்று. [தவறுதலாவது, பிறவி தவறுதல்; அஃதாவது, வீடு பெறுதல்.] ௩௪௦.

## ௩௫-வது.—துறவுடைமை.

துறவென்பது, ஒருவன் தவம் பண்ணுகின்ற காலத்து யாதாயினும் ஒரு தொடர்ப்பாடு உளதாயினும் அதனைப் பற்றறத் துறத்தல். இது மயக்கமற்றார்க்கு வருவதொன்றாதலின், நிலையாமையின்பின் கூறப்பட்டது.

அடல்வேண்டும் ஐந்தின் புலத்தை; விடல்வேண்டும்
வேண்டிய வெல்லாம் ஒருங்கு.

இ - ள்:—ஐந்தின் புலத்தை அடல்வேண்டும் - (துறப்பார்க்குப்) பொறிகளைந்தினுக்கும் நுகர்ச்சியான ஐந்தினையும் கொல்லுதல் வேண்டும்; வேண்டிய எல்லாம் ஒருங்கு விடல்வேண்டும் - (அதற்காகத் தான்) விரும்பின எல்லாவற்றையும் ஒரேகாலத்தில் விடுதல் வேண்டும்.

[பொறிகள் ஐந்தாவன — மெய், வாய், கண், மூக்கு, செவி. அவற்றிற்கு நுகர்ச்சியான (அஃதாவது அநுபவமான) ஐந்தாவன.— ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை. அந்நுகர்ச்சியான ஐந்தையும் கொல்லுதலாவது, அவை தன்மனத்தைக் கவராதபடி அவற்றை அடக்கியாளுதல்.]

இஃது, ஐம்புலன்களையும் வெல்லவேண்டுமென்பதூஉம், அதற்குத் தான் விரும்பிய பொருள்களையெல்லாம் ஒருங்கு விடவேண்டுமென்பதூஉம் கூறிற்று. ௩௪௧.

இயல்பாகும் நோன்பிற்கொன் றின்மை; உடைமை
மயலாகும் மற்றும் பெயர்த்து.

இ - ள்.—ஒன்று இன்மை நோன்பிற்கு இயல்பாகும்-யாதொரு பொருளையும் இலதாதல் தவத்திற்கு இயல்பாகும்; உடைமை பெயர்த்தும் மயல் ஆகும் - பொருளுடைமை மீண்டும் (பிறத்தற்குக் காரணமான) மயக்கத்தைத் தரும்.

[உம்மை "பெயாத்து' என்பதனோடு கூட்டியுரைக்கப்பட்டது. மற்று என்பது அசை. ஆகும் என்ப[illegible]ம் என்னும் பொருளில் வந்தது.]

இது, பொருளுடைமை பிறப்பிற்கு ஏதுவாய மயக்கத்தை உண்டுபண்ணு மென்றது. ௩௪௨.

**ம**ற்றும் தொடர்ப்பா டெவன்கொல், பிறப்பறுக்கல்
உற்றார்க் குடம்பு மிகை.

இ - ள் :—பிறப்பு அறுக்கல் உற்றாக்கு உடம்பு மிகை - பிறப் பறுக்கல் உற்றாக்கு உடம்பும் மிகையாயிருக்க, மற்றும் தொடாப பாடு எவன் - மற்றும் சில தொடாப்பாடுகளை உண்டாக்குவது யாதினைக் கருதியோ ?

[கொல் என்பது அசை. பிறப்பு அறுக்கல் உற்றா - பிறப் பினை ஒழித்தற்குரிய தவத்தினைச் செய்வாா. மிகை - மிகுதி. தொடாப்பாடு - பற்று.]

இது, தவம் செய்வாாக்குச் சிறுபற்றும் ஆகா தென்றது.

**ப**ற்றி விடாஅ இடும்பைகள், பற்றினைப்
பற்றி விடாஅ தவர்க்கு.

இ - ள் —பற்றினை பற்றி விடாதவாக்கு-பொருள்களைப பற்றி விடாதாரை, இடும்பைகள் பற்றி விடா-துன்பங்கள் பற்றி விடாதே நிற்கும்.

இது, பொருள்களைத் துறவாக்கால் வினை கெடா தென்றது.

**யா**தனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்.

இ - ள் :—யாதனின் யாதனின் நீங்கியான் - யாதொன்றினின் றும் யாதொன்றினின்றும் நீங்கினான், அதனின் அதனின் நோதல் இலன் - அதனளவு அதனளவு துன்பமுறுதல் இலன்.

## துறவறவியல்

இது, பற்றினை விடவிடத் துன்பம் குறையு மென்றது. ௩௪௫.

**பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும்; மற்று**
**நிலையாமை காணப் படும்.**

இ - ள் :—பற்று அற்ற கண்ணே பிறப்பு அறுக்கும் - (ஒருவன் எல்லாப் பொருள்களோடும் பற்று அற்றபொழுதே (அது) பிறப்பை அறுக்கும்; மற்று நிலையாமை காணப்படும் - அதனை விடாத பொழுது நிலையாமை காணப்படும்.

[நிலையாமை - நிலையாமையையுடைய யாக்கை. காணப்படும் உண்டாகும்.]

இஃது, எல்லாப் பற்றினையும் அறுக்கப் பிறப்பு அறுமென்றது.

**வேண்டின் உண்டாகத் துறக்க; துறந்தபின்**
**ஈண்டியற் பால பல.**

இ - ள் —உண்டாக வேண்டின் துறக்க - (தன் உயிர்க்கு ஆக்கம்) உண்டாகவேண்டின் (தன் உடைமை யெல்லாவற்றையும்) துறக்க; துறந்தபின் ஈண்டு இயல் பல பால-துறந்தபின் இவ்விடத்தே இயலும் பகுதிகள் பல.

இது, துறவினது இம்மைப்பயன் கூறிற்று. ௩௪௬.

**தலைப்பட்டார் தீரத் துறந்தார்; மயங்கி**
**வலைப்பட்டார் மற்றை யவர்**

இ - ள் .—தீர துறந்தார் தலைப்பட்டார் - பற்றறத் துறந்தவர் முத்தியைத் தலைப்பட்டார்; மற்றையவர் மயங்கி வலைப்பட்டார் - அல்லாதார் மயங்கிப் பிறப்பாகிய வலையிலே அகப்பட்டார்.

[தலைப்படுதல் - பொருந்துதல் - அடைதல். வலைபோலத் துன்பத்தைத் தருதலின், பிறப்பினை வலையென்று கூறினார்.]

இது, துறவினது மறுமைப்பயன் கூறிற்று. ௩௪௮.

**யா**னென தென்னும் செருக்கறுப்பான், வானோர்க்
குயர்ந்த உலகம் புகும்.

இ – ள் :—யான் எனது என்னும் செருக்கு அறுப்பான் - யானென்றும் எனதென்றும் நினைக்கின்ற மயக்கத்தை அறுக்குமவன், வானோர்க்கு உயர்ந்த உலகம் புகும் - தேவர்க்கு மேலாகிய உலகத்தின்கண்ணே செல்லுவன்.

இது, துறவினால் வீடு எய்து மென்றது. ௩௪௯.

**ப**ற்றுக பற்றற்றான் பற்றினை; அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

இ – ள் —பற்று அற்றான் பற்றினை பற்றுக - பற்றினை அறுத்தானது பற்றினைப் பற்றுக; அப்பற்றை பற்று விடற்கு பற்றுக - அதனை(ப்பற்றுங்கால் பயன்கருதிப் பற்றாது) பற்று விடுதற்காகப் பற்றுக.

பற்றற்றான் பற்றாவது, தியான சமாதி.

இது, பொருள்களின் பற்றினை விடுதற்கு மெய்ப்பொருளைப் பற்றுக என்றது. பின் மெய்யுணர்தல் கூறுதலான், இது பிற்படக் கூறப்பட்டது. ௩௫0.

## ௩௬-வது.—மெய்யுணர்தல்.

மெய்யுணர்த லென்பது,எக்காலத்திலும் அழியாது எவ்விடத்திலும் நிற்கும் பொருள்'இதுவென உணர்தல். இது பற்றறத் துறந்தாரது உள்ளநிகழ்ச்சியாதலான், துறவுடைமையின்பின் கூறப்பட்டது.

**ஐ**யுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு.

இ - ள் :—ஐ உணர்வு எய்தியக்கண்ணும் - மெய் முதலாகிய பொறிகள் ஐந்தினாலும் அறியப்படுவனவெல்லாம் அறிந்த இடத்தும், மெய்யுணர்வு இல்லாதவற்கு - உண்மையை அறியும் அறிவு இல்லாதாற்கு, பயம் இன்று - (அதனான்) ஒரு பயன் உண்டாகாது. [ஏகாரம் அசை.]

இஃது, எல்லா ஞானங்களையும் அடைந்திருப்பினும் மெய்ஞ்ஞானம் இல்லையேல் பயன் இல்லை யென்றது. ௩௫௪.

பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரும்
மருளானும் மாணாப் பிறப்பு.

இ - ள் :—பொருள் அல்லவற்றை பொருள் என்று உணரும் மருளான்-பொருளல்லாதவற்றைப் பொருளாகக் கொள்கின்ற மயக்கத்தினாலே, மாணா பிறப்பு ஆம் - மாட்சிமையில்லாத பிறப்பு உண்டாகும்.

[அகத்துள் கொள்ளுதலே உணர்தலாதலால், "பொருளென்று உணரும்" என்பதற்குப் "பொருளாகக் கொள்கின்ற" என்று உரைத்தனர்.]

இது, மெய்யுணருங்கால் மயக்கம் காண்பானாயின் பிறப்பு உண்டாமென்றது. ௩௫௧.

எப்பொருள் எத்தன்மைத் தாயினும், அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

இ - ள் :—எப்பொருள் எத்தன்மைத்தாயினும் - யாதொரு பொருள் யாதொரு தன்மைத்தாயினும், அப்பொருள் மெய் பொருள் காண்பது அறிவு - அப் பொருளினுடைய 'உண்மையைத் தான் உண்மையாகக் காண்பது (யாதொன்று அஃது) அறிவாம்.

மெய்யென்பதூஉம் அறிவென்பதூஉம் ஒன்று. என்னை ? எக்காலத்தும் ஒரு தன்மையாகி அழியாது நிற்றலின் மெய்யாயிற்று; எல்லாப் பொருளையும் காண்டலால் அறிவாயிற்று.

## மெய்யுணர்தல்

[அப்பொருளினுடைய உண்மையைத்தான் - அப்பொருளினுடைய (நாமரூபங்களைவிட்டு) உண்மைத்தன்மையையே. உண்மையாக - மெய்ப்பொருளாக.]

இது, பொருள்களுடைய உண்மையைக் காண்பது அறிவாமென்றது. ௩௫௫.

பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்ப தறிவு.

இ - ள் :—பிறப்பு என்னும் பேதைமை நீங்க-பிறப்பாகிய அறியாமையினின்று நீங்க, சிறப்பு என்னும் செம்பொருள் காண்பது அறிவு - பிறவாமையாகிய செவ்விய பொருளைக் காண்பது அறிவாம்

பிறவாமை சிறந்ததாதலின் சிறப்பு என்னப்பட்டது.

இது, தான் பிறந்தானாகவும் செத்தானாகவும் கருதுகின்ற அறியாமையைவிட்டுத் தான் சாவில்லாதவனாகவும் பிறப்பில்லாதவனாகவும் நிற்கிற நிலைமையைக் காணவேண்டு மென்றது. ௩௫௪.

ஓர்த்துள்ளம் உள்ள துணரின் ஒருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு.

இ - ள் :—உள்ளம் உள்ளது ஓர்த்து ஒருதலையாக உணரின் - உள்ளமானது உள்ளபொருளை ஆராய்ந்து ஒருதலையாக உணருமாயின், பேர்த்து பிறப்பு உள்ளவேண்டா - பின்னைப் பிறப்புண்டென்று நினையாதொழிக.

[ஒருதலையாக - உண்மையாக. ஒருதலையாக என்பது ஈறு கெட்டு நின்றது.]

இது, மெய்யுணர்ந்தவர்கள் பிறப்பு உண்டென்று நினையா

தொழிக என்றது. ௩௫௫.

ஐயத்தின் நீங்கித் துணிந்தார்க்கு வையத்தின்
வானம் நணிய துடைத்து.

இ-ள் —ஐயத்தின் நீங்கி துணிந்தார்க்கு - (மெய்ப்பொருளை) ஐயப்படுதலினின்று நீங்கித் துணிந்தவர்களுக்கு, வையத்தின் வானம் நணியது உடைத்து - இவ்வுலகத்தைப் போல மேலுலகம் அணித்தாம்தன்மை யுடைத்து.

துணிந்த அறிவின் கண்ணதெல்லா உலகுமாதலின், அவ்வறிவுடையார்க்கு எல்லா உலகமும் ஒருங்குதோற்றும். ஆதலால், வையத்தின் வானம் அணித்தா மென்றார்.

இது, மெய்ப்பொருளை யுணர்ந்தார் எவ்விடமும் அறிவ ரென்றது. ௩௫௬.

இருணீங்கி இன்பம் பயக்கும், மருணீங்கி
மாசறு காட்சி யவர்க்கு.

இ-ள் — மருள் நீங்கி மாசு அறு காட்சியவர்க்கு - மயக்கத்தினின்று நீங்கிக் குற்றமற்ற அறிவை யுடையார்க்கு, இருள் நீங்கி இன்பம் பயக்கும் - அறியாமையாகிய இருள் நீங்கி முத்தியாகிய இன்பம் உண்டாகும்.

இது, மெய்யுணர்ந்தார்க்கு வினைவிட்டு முத்தியின்பம் உண்டாகு மென்றது. ௩௫௭.

கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார், தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி.

இ - ள் :— ஈண்டு மெய்ப்பொருள் கற்று கண்டார் - இவ்விடத்தே மெய்ப்பொருளை அறிந்து தெளிந்தாரே, மற்று ஈண்டு வாரா நெறி தலைப்படுவா - மீண்டு இவ்விடத்து வாராத வழியினை அடைவர்.

[கண்டாரே என்பது ஏகாரம் கெட்டு நின்றது.]

இது, கல்வியால் அறிவை அறியப் பிறப்பு அறு மென்றது. [அறிவு - மெய்ப்பொருள்.] ௩௫௮.

சார்புணர்ந்து சார்பு கெடஒழுகின், மற்றழித்துச்
சார்தரா சார்தரும் நோய்.

இ - ள் :—சார்பு உணர்ந்து சார்பு கெட ஒழுகின் - (தன்னைச்) சார்வனவற்றை அறிந்து அவற்றின் சார்வு கெட ஒழுகுவனாயின், மற்று அழித்து சாரதரா சார்தரும் நோய் - அவ்வொழுக்கத்தினை அழித்துச் சாரதலைச் செய்யா சாரக்கடவ துன்பங்கள்.

சார்வு கெட ஒழுகல் - வினைச்சார்வு கெட ஒழுகல். அஃதாவது, காமம் வெகுளி மயக்கம் இன்றி மெய்யுணர்ச்சியான் ஒழுகுதல்.

இஃது, உண்மையைக் கண்ட அக்காட்சியைத் தப்பாமல் முடிய நிற்பனாயின், சாரக்கடவதாய் நிற்கின்ற வினை சாராதே விட்டுப் போ மென்றது. ௩௫௯.

காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றின்
நாமம் கெடக்கெடும் நோய்.

இ - ள் :—காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றின் நாமம் கெட - ஆசையும் வெகுளியும் மயக்கமும் என்னும் இவை மூன்றினது நாமம் போக, நோய் கெடும் - வினை போம்.

வினை கெடுதற்கு வழி இது வென்று கூறினர். ௩௬௦.

## ௩௭-வது.—அவா வறுத்தல்.

அவாவறுத்தலாவது, பொய்ப்பொருள்கள்மேல் செல்லும் ஆசையைத் தவிர்த்தல். முத்திக்குக் காரணம் மெய்யுணர்தலே அமையுமாயினும், பின்னும் உடம்போடு நிற்றலின் தான் விட்ட பொருள்கள் மாட்டு ஆசை செல்லின், மீண்டும் பிறப்பிற்குக் காரணமாம். ஆதலான், இதனைத் தவிரவேண்டு மென்று எல்லாவற்றினும் பின் கூறினார்.

அஞ்சுவ தோரும் அறனே; ஒருவனை
வஞ்சிப்ப தோரும் அவா.

இ - ள் :—ஒருவனை வஞ்சிப்பது அவா - ஒருவனை வஞ்சனை செய்வது ஆசை; (ஆதலான்), அஞ்சுவது அறன் - (அதனை) அஞ்சுவதே அறம்.

வஞ்சனை செய்தலாவது முன்னே நன்றி செய்வாரைப் போல நின்று பின்பு தீக்கதியுள் உய்த்தல். [ஓரும் என்பன இரண்டும் அசை.]

இஃது, ஆசையின்மை வேண்டு மென்றது. ௩௬௧.

அவாவில்லார்க் கில்லாகும் துன்பம்; அஃதுண்டேல்
தவாஅது மேன்மேல் வரும்.

இ - ள் :—அவாஇல்லார்க்கு துன்பம் இல்லாகும் - ஆசையில்லார்க்குத் துன்பம் இல்லையாகும்; அஃது உண்டேல் (துன்பம்) தவாது மேல் மேல் வரும் - அது உண்டாயின் துன்பமானது கெடாது மேன்மேல் வரும்.

இஃது, அவாவால் துன்பம் உண்டாகு மென்றது. ௩௬௨.

# அவாவறுத்தல்

அவாவென்ப எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும்
தவாஅப் பிறப்பீனும் வித்து.

இ-ள்:—எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும் - எல்லா உயிர்களுக்கும் எல்லா நாளும், தவா பிறப்பு ஈனும் வித்து - கெடாத பிறப்பைக் கொடுக்கும் விதையாவது, அவா என்ப - ஆசை யென்று சொல்லுவர் (நல்லோர்).

இது, அவாவானது துன்பம் தருதலே யன்றிப் பிறப்பைத் தருமென்றது. ஙசுங.

அற்றவர் என்பார் அவாஅற்றார்; மற்றையார்
அற்றாக அற்ற திலர்.

இ-ள்:—அற்றவா என்பாா அவா அற்றார் - (பற்று) அற்றவர் என்பார் ஆசையற்றவரே, மற்றையாா அற்றாக அற்றது இலர் (ஆசையறாது) பற்றினை அறுத்தாா ஆசையற்றார் பற்றற்றது போலப் பற்றற்றது இலர்.

[அற்றாக - அத்தன்மைத்தாக - ஆசையற்றார் பற்றற்றது போல.]

இஃது, ஆசையுள்ள நாளெல்லாம் பற்றற்றவ ராகா ரென்றது.

தூஉய்மை என்ப தவாவின்மை; மற்றது
வாஅய்மை வேண்ட வரும்.

இ-ள்:—தூய்மை என்பது அவாவின்மை - (ஒருவர்க்கு) அழுக்கறுத்தலாவது ஆசையின்மை; அது வாய்மை வேண்ட வரும்-அவ்வாசையின்மை மெய் சொல்லுதலை விரும்ப வரும். [மற்று என்பது அசை.]

இது, (பொருள்மேல் ஆசையில்லாதார் பொய்கூறா ராதலின்,) மெய் சொல்ல அவாவின்மை வருமென்று அவாவறுத்தற்குக் கருவி கூறிற்று. ஙசுரு.

அவாவினை ஆற்ற அறுப்பின், தவாவினை
தான்வேண்டும் ஆற்றான் வரும்.

இ - ள்:—அவாவினை ஆற்ற அறுப்பின் - ஆசையை மிகவும் போக்குவானாயின், தவா வினை தான் வேண்டும் ஆற்றான் வரும் - கெடாத வினை தான் விரும்பும் நெறியாலே வரும்.

[ஆற்ற - மிகவும் - முற்றிலும். கெடாத வினையாவது அறம்.]

இஃது அவாவின்மையால் அறம் கைகூடுமென்றது. ஙசுசு.

வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை;
யாண்டும் அதுவொப்ப தில்

இ - ள்:—வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டு இல்லை - அவாவின்மை போன்ற மிக்க செல்வம் இவ்விடத்தில் இல்லை; ஆண்டும் அது ஒப்பது இல் - அவ்விடத்திலும் அதனை ஒப்பது பிறிதில்லை.

[மிக்க செல்வம் - உயர்ந்த செல்வம். இவ்விடம் - இவ்வுலகம். அவ்விடம் - சுவர்க்க லோகம்.]

இஃது, அவாவின்மையின் மிக்கதோர் பொருள் இல்லை யென்றது. ஙசுஎ.

இன்பம் இடையறா தீண்டும்; அவாவென்னும்
துன்பத்துள் துன்பம் கெடின்.

இ - ள்:—அவா என்னும் துன்பத்துள் துன்பம் கெடின் - அவா

வாகிய துன்பங்களுள் மிக்க துன்பம் கெடுமாயின், இன்பம் இடைய ருது ஈண்டும் - இன்பமானது இடையறாமல் (வந்து)மிகும்.

இஃது, அவாவின்மையால் இன்பமும் வரு மென்றது. ௩௬௮.

வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை ; மற்றது
வேண்டாமை வேண்ட வரும்.

இ - ள் —வேண்டுங்கால் பிறவாமை வேண்டும் - (ஒருவன்) விரும்புங்கால் பிறவாமையை விரும்புதல் வேண்டும் ; அது வேண்டாமை வேண்ட வரும் - பிறவாமை (பொருளை) விரும்பாமையை விரும்பத் தானே வரும்.

இஃது, அவாவின்மையால் பிறவாமையும் வரு மென்றது.௩௬௯.

ஆரா இயற்கை அவாநீப்பின் ; அந்நிலையே
பேரா இயற்கை தரும்.

இ - ள் :—ஆரா இயற்கை அவா நீப்பின் - நிறையா இயல்பினை யுடைய ஆசையை விடுவனாயின், அந்நிலையே பேரா இயற்கை தரும்- (அது) விட்டபொழுதே அழியாத இயல்பினைத் தரும்.

இயல்பாவது, என்றும் ஒருபடிப்பட்டது.

இது, அவாவின்மையால் உயிர் தனது மெய்யுருவைப் பெறு மென்றது. ௩௭0.

## ஊழியல்.

ஊழியலாவது, ஊழினது இயல்பு. ஊழாவது, முன்புசெய்த வினை பின்புவிளையும் முறை. மேல் கூறிய அறப்பகுதியும், இனிக் கூறுகின்ற பொருட்பகுதியும் இன்பப்பகுதியும் முன்செய்த நல்வினையால் வருதலையும், அவற்றிற்கு மாறான பாவமும் வறுமையும் துன்பமும் தீவினையால் வருதலையும் அறியாதே பலமக்கள் தமது முயற்சியால் வந்ததென்ப. அஃது அன்று என்பதற்காக இது கூறப்பட்டது. ஒருவன் செய்த வினை தனது பயனை வழுவின்றிப் பயத்தல் அறத்தின் ஆகுமாதலான், இஃது அறத்தின் இறுதிக்கண் கூறப்பட்டது.

### ௩௮-வது.—ஊழ்.

அஃதாவது, ஊழினுடைய தன்மையைக் கூறுதல். [ஊழ் இன்னதென்பது மேலே உரைக்கப்பட்டது.]

ஆகூழால் தோன்றும் அசைவின்மை கைப்பொருள் ;
போகூழால் தோன்றும் மடி.

இ - ள் :—கைப்பொருள் ஆகும் ஊழால் அசைவின்மை தோன்றும் - (ஒருவனுக்கு) ஆக்கத்தைக் கொடுக்கின்ற ஊழ் தோற்றினால் முயற்சி தோன்றும் ; போகும் ஊழால் மடி தோன்றும் - (ஆக்கத்தின்) அழிவைக் கொடுக்கின்ற ஊழ் தோற்றினால் மடி தோன்றும்.

இஃது, ஆக்கத்திற்கும் கேட்டிற்கும் ஏதுவான முயற்சியும் முயலாமையும் ஊழால் வருமென்றது. ௩௭௧.

பேதைப் படுக்கும் இழவூழ் ; அறிவகற்றும்
ஆகலூழ் உற்றக் கடை.

இ-ள் :—இழவு ஊழ் பேதை படுக்கும் - கெடுக்கும் ஊழ் (தோன்றினல்) அறியாமையை உண்டாக்கும் ; ஆகல் ஊழ் உற்றக் கடை அறிவு அகற்றும் - ஆக்கும் ஊழ் தோன்றினல் அறிவை விரிக்கும்.

இஃது, அறிவும் அறியாமையும் ஊழால் வருமென்றது. ௩௭௨.

நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை யறிவே மிகும்.

இ-ள் :—நுண்ணிய நூல் பல கற்பினும் - (ஒருவன்) நுண்ணிதாக ஆராய்ந்த நூல்கள் பலவற்றையும் கற்ருனுயினும், மற்றும் தன் உண்மை யறிவே மிகும் - பின்னேயும் தனக்கு இயல்பாகிய அறிவே மிகுத்துத் தோன்றும்.

மேல் அறிவிற்குக் காரணம் ஊழ் என்ருர். "அஃது எற்றுக்கு, கல்வியன்றே காரணமாம்?" என்ருர்க்குக் கல்வியுண்டாகினும் ஊழாகிய அறிவு வலியுடைத்தென்று இது கூறிற்று. ௩௭௩.

ஊழிற் பெருவலி யாவுள ? மற்ருென்று
சூழினுந் தான்முந் துறும்.

இ-ள் :—ஊழின் பெருவலி யா உள - ஊழினும் மிக்க வலியுடையன யாவை உள? மற்று ஒன்று சூழினும் தான் முந்துறும் - பிறிது ஒன்றை ஆராயும் காலத்தும் தான் முற்பட (ஆராய்ச்சிக்கு உடன்பட்டு) நிற்கும்.

## ஊழியல்

இஃது, ஊழே எல்லாவற்றினும் பெரிய வலியை உடைத் தென்றது. ௩௭௪.

நல்லவை யெல்லாஅம் தீயவாம்; தீயவும்
நல்லவாம் செல்வம் செயற்கு

இ - ள் :—செல்வம் செயற்கு தீயவும் நல்லவாம்-செல்வத்தை உண்டாக்குதற்கு (முன்பு தனக்குத்) தீதாயிருந்தனவும் நன்றாம்; (செல்வம் அழித்தற்கு) நல்லவை யெல்லாம் தீயவாம் - செல்வத்தை இல்லையாக்குதற்கு (முன்பு தனக்கு) நன்றாயிருந்தன வெல்லாம் தீதாம்.

ஆகூழ் உற்ற காலையில் தீயகருவிகள் நல்லகருவிகளாய்ச் செல்வத்தை ஆக்குமென்றும், போகூழ் உற்றகாலையில் நல்லகருவிகள் தீயகருவிகளாய்ச் செல்வத்தை அழிக்குமென்றும் இது கூறிற்று.

பரியினும் ஆகாவாம் பாலல்ல; உய்த்துச்
சொரியினும் போகா தம.

இ - ள் :—பால் அல்ல பரியினும் ஆகாவாம் - (ஊழால்) தம்முடைய பகுதியல்லாதனவற்றை வருந்திக்காப்பினும் (தமக்கு) ஆகா; தம உய்த்து சொரியினும் போகா - (ஊழால்) தம்முடைய பகுதியாயினவற்றைக் கொண்டுசென்று சொரிந்துவிடினும் போகா.

[ஆம் என்பது அசை.]

இது, முன்புள்ள செல்வம் காவல்படுதலும் களவுபோதலும் ஊழினாலே ஆகுமென்றது. ௩௭௬.

வகுத்தான் வகுத்த வகையல்லால், கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது.

இ - ள் :—வகுத்தான் வகுத்த வகை அல்லால் - விதானம் பண்ணினவன் விதானம்பண்ணின வகையினாலல்லது, கோடி தொகுத்தாற்கும் துய்த்தல் அரிது - கோடிபொருளை ஈட்டினவனுக்கும் (அதனால் வரும்) பயனைக் கோடல் அருமையுடைத்து.

[விதானம் பண்ணினவன் - ஒவ்வோர் உயிரின் வினையின்பயனை அவ்வவ் அநுபவிக்கும்படி விதித்தவன். வினைப்பயன் சடமாதலால், தன்னைச்செய்த உயிரை அறிந்து பொருந்தாது. அதனை அறிந்து பொருத்துவோன் கடவுளென்பது ஆசிரியர் கொள்கை. "இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து, கெடுக உலகியற்றி யான்" என்று பிறண்டும் கூறியுள்ளார்.]

இது, பொருள் பெற்றாலும் நுகர்தற்கு ஊழ் வேண்டுமென்றது. ௩௭௭.

இருவே றுலகத் தியற்கை, திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு.

இ - ள் :—திரு(வினராதலும்)தெள்ளியர் ஆதலும் வேறு வேறு - செல்வமுடையராதலும் தெள்ளியராதலும் வேறு வேறு(ஊழினால் வருமாதலால்), இருவேறு உலகத்து இயற்கை - இரண்டு வகை (யாதல்) உலகத்தின் இயல்பு.

[தெள்ளியர் - அறிவுடையார். தெள்ளியராதலும் என்றதனால், திருவினராதலும் என்று கொள்ளப்பட்டது.]

இது, செல்வத்தை அளிப்பதும் அறிவை அளிப்பதும் வெவ்வேறு ஊழா மென்றது. ௩௭௮.

துறப்பார்மன் துப்புர வில்லார், உறற்பால
ஊட்டா கழியும் எனின்.

இ - ள் :—துப்புரவு இல்லார் துறப்பார் - நுகரும் பொருள் இல்லாதார் துறக்க அமைவார், உறல்பால ஊட்டாது கழியும் எனின் - தமக்கு வந்துறும் துன்பப் பகுதியானவை உறாது போமாயின்.

[மன் என்பது அசை. ஊட்டாது என்பது ஈறு கெட்டுநின்றது. துன்பப்பகுதியானவை - துன்பத்தைக் கொடுக்கும் ஊழைச் சேர்ந்தவை.]

இது, துறவறம் ஊழினால் வருமென்றது. ௩௭௬

நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால்
அல்லல் படுவ தெவன்?

இ - ள் .—நன்று ஆம் கால் நல்லவாக காண்பவர் - நன்மை வரும் காலத்து நன்றாகக் கண்டவர்கள், அன்று ஆம் கால் அல்லல் படுவது எவன் - தீமை வரும் காலத்து அல்லல் படுவது யாதினுக்கு?

அறிந்தவர்கள் வருவனவெல்லாம் இயல்பென்று கொள்ள வேண்டுமென்று இது கூறிற்று. ௩௭௦.

அறத்துப்பால் முடிந்தது.

## எனது நூல்களுக்குத்
## தென்னாபிரிக்காவிலிருந்து பொருளுதவிய
## இந்திய சகோதரர்களின் பெயர்கள் முதலியன.

| மகாரா-ரா-ஸ்ரீ | ப | ஷி | பே |
|---|---|---|---|
| வி. ரே. நமசிவாய முதலியார், மாயவரம் ... | 5 | 5 | 0 |
| ரா. இராமச்சந்திர நாயுடு, போர்ட் எலிசபெத் ... | 2 | 2 | 0 |
| சி. நாராயணசாமி நாயுடு, கொட்டுப்பாளையம் ... | 0 | 2 | 6 |
| வே. து. சுப்பிரமணிய பிள்ளை, பரங்கிப்பேட்டை ... | 0 | 10 | 0 |
| நா. கா. ரெங்கசாமி படையாட்சி அண்டு கம்பெனி, கீழப்பெரும்பள்ளம் ... | 0 | 10 | 0 |
| வெ. நாராயணசாமி முதலியார், தில்லையாடி .. | 0 | 10 | 0 |
| சீனிவாச வாண்டையார், மோரீஸ் ... | 0 | 2 | 0 |
| மு. சுப்பிரமணிய செட்டியார் ... | 0 | 10 | 6 |
| க. கரத்தா படையாட்சி, சிதம்பரம் கோயில் பத்து ... | 0 | 3 | 0 |
| ஆர். வேலுப்பிள்ளை, போர்ட் எலிசபெத் .. | 2 | 2 | 0 |
| க. முத்துப்பத்தர், கள்ளிவளாகம் ... | 0 | 5 | 0 |
| ப. ஆறுமுக முதலியார், மேலக்கட்டளை செம்பொனார்கோயில் ... | 1 | 1 | 0 |
| வே. முத்தைய படையாட்சி, பனங்குடி ... | 0 | 5 | 0 |
| எஸ். பொன்னுசாமி பிள்ளை, திருவாரூர் | 0 | 10 | 6 |
| பொ. மாரிமுத்துப் பிள்ளை, தில்லையாடி .. | 0 | 5 | 0 |
| த. முத்துசாமி படையாட்சி, மேலூர் ... | 0 | 5 | 0 |
| ரா. கோவிந்தசாமி படையாட்சி, உமையாள்புரம் ... | 0 | 5 | 0 |
| பெ. இருளப்ப படையாட்சி, நாச்சகட்டளை ... | 0 | 5 | 0 |
| மா. சிவலிங்க படையாட்சி, மேலூர் ... | 0 | 5 | 0 |
| ரா. முத்தைய படையாட்சி, தாண்டாம்பட்டணம் ... | 0 | 5 | 0 |
| சு. பக்கிரி படையாட்சி, குமாரகுடி ... | 0 | 5 | 0 |
| நா. சவரிநாயுடு, ஆக்கூர் .. | 0 | 5 | 0 |
| மு. குப்புசாமிபிள்ளை, போர்ட் எலிசபெத் ... | 0 | 5 | 0 |
| டி. கிருஷ்ணசாமி பிள்ளை ,, ... | 0 | 2 | 6 |
| நா. பெருமாள் நாயுடு, ,, ... | 0 | 3 | 0 |
| இருளப்ப செட்டியார், தில்லையாடி ... | 0 | 10 | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| த. வடிவேலு பிள்ளை, போர்ட் எலிசபெத் | ... | 0 | 2 | 6 |
| ஜெ. ரெட்டி, ,, | ... | 0 | 2 | 6 |
| எஸ். எம். டேவிட், ,, | ... | 0 | 2 | 6 |
| வி. எம். பொன்னுசாமி நாயக்கர், ,, | .. | 0 | 5 | 0 |
| வி. எம். நாராயணசாமி பிள்ளை, ,, | ... | 0 | 4 | 0 |
| அ. சிங்காரவேலு முதலியார, ,, | ... | 0 | 3 | 6 |
| கா. சா. பக்கிரி படையாட்சி, கிழையூர் | ... | 0 | 10 | 0 |
| குமாரசாமி முதலியார், திருச்செம்பொன்பள்ளி | ... | 0 | 2 | 6 |
| என். எஸ். நாகப்ப படையாட்சி, போர்ட் எலிசபெத் | ... | 0 | 5 | 0 |
| சா. சபாபதிபிள்ளை, தில்லையாடி | ... | 0 | 10 | 6 |
| பொ. கோவிந்தசாமி பிள்ளை, ,, | ... | 0 | 5 | 0 |
| கோ. இராஜாங்க நாயுடு, தில்லையாடி | ... | 2 | 2 | 0 |
| மு. மாணிக்க வாண்டையார, முப்பேத்தங்குடி | ... | 0 | 2 | 6 |
| வை. ஷண்முக வாண்டையார், நூப்போர்ட் | ... | 1 | 1 | 0 |
| சி. அப்பாவு பிள்ளை, டி ஆர | ... | 5 | 5 | 0 |
| ஆ. நாராயணசாமி படையாட்சி, நடராஜபிள்ளை சாவடி | ... | 1 | 0 | 0 |
| என். ரங்கசாமி செட்டியார ,, | .. | 1 | 0 | 0 |
| டாயலு நாயடு, ,, | ... | 0 | 10 | 0 |
| கோ. வீரராகவ நாயுடு, ,, | ... | 0 | 10 | 0 |
| த. கோவிந்தசாமி படையாட்சி, தூண்டாம்பட்டணம் | ... | 0 | 10 | 0 |
| ப. நாராயணசாமி படையாட்சி, ,, | ... | 0 | 2 | 6 |
| ப. கரும்பாயிர படையாட்சி, கடாத்தலையன் பாளையம் | | 0 | 10 | 0 |
| சுப்பராய ஆசாரி, தில்லையாடி | ... | 0 | 10 | 0 |
| வெ. இலக்ஷ்மண மூப்பன், ஆக்கூர் | ... | 1 | 0 | 0 |
| செ. இரத்தினசாமி படையாட்சி, செம்பொனார்கோயில் | ... | 5 | 0 | 0 |
| வே. காத்தபெருமாள் படையாட்சி, சேத்தூர் | ... | 1 | 0 | 0 |
| தி. நாராயணசாமி படையாட்சி, தில்லையாடி | ... | 1 | 1 | 0 |
| வீ. கோவிந்தசாமி படையாட்சி, ஒழுகமங்கலம் | ... | 1 | 10 | 0 |
| சி. நாகமுத்து படையாட்சி, மேலையூர் | ... | 1 | 10 | 0 |
| சி. கோதண்டபாணி நாயுடு, தில்லையாடி | ... | 1 | 1 | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| த. கந்தசாமி பிள்ளை, சந்திரபாடி | ... | 1 | 0 | 0 |
| சி. சீனிவாச படையாட்சி, வைத்தீசுவரன்கோயில் | ... | 1 | 0 | 0 |
| வி. சாமிபிள்ளை, கிம்பர்லி | .. | 1 | 0 | 0 |
| எம். சாமிபிள்ளை ,, | ... | 1 | 0 | 0 |
| வே. வெங்கட்டராம நாயுடு, ,, | ... | 1 | 1 | 0 |
| நா. அய்யாஜு நாயுடு, தில்லையாடி | ... | 1 | 1 | 3 |
| ம. கா. வேணுகோபால் நாயடு, சேத்தூர | ... | 0 | 10 | 0 |
| செ. உருத்திராபதி முதலியார், நாங்கூர் | ... | 0 | 5 | 0 |
| வை. இரத்தினசாமி படையாட்சி, தில்லையாடி | .. | 0 | 2 | 6 |
| ஹரி. கன்னபத், கிம்பர்லி | ... | 0 | 2 | 6 |
| சி. நடேச படையாட்சி | .. | 0 | 1 | 0 |
| ரா. சுப்பிரமணிய படையாட்சி, கிம்பாலி | ... | 0 | 10 | 0 |
| நா. மாரிமுத்துப் பிள்ளை, தில்லையாடி | ... | 0 | 2 | 6 |
| செ. கோவிந்தசாமி படையாட்சி | ... | 0 | 2 | 0 |
| வை. குமாரசாமி படையாட்சி, இராஜாநல்லூர் | ... | 0 | 2 | 0 |
| மா. சுப்பிரமணிய படையாட்சி | ... | 0 | 2 | 0 |
| செ. நடராஜ படையாட்சி, பாலூர் | ... | 0 | 10 | 0 |
| ரெ. கோவிந்தசாமி பிள்ளை | ... | 0 | 5 | 0 |
| ஆ. முனிசாமி பிள்ளை | ... | 0 | 2 | 6 |
| வே. கணபதி படையாட்சி | ... | 0 | 2 | 6 |
| பெ. நடேசபிள்ளை | ... | 0 | 2 | 6 |
| ந. பக்கிரிசாமி பிள்ளை | ... | 0 | 5 | 0 |
| வி. கனகசபை படையாட்சி, தொடர்பட்டு | ... | 0 | 2 | 6 |
| ஆ. கோவிந்தசாமி படையாட்சி, நயனிபுரம் | ... | 0 | 5 | 0 |
| ஆ. ரெங்கசாமி படையாட்சி, காழியப்ப நல்லூர் | ... | 0 | 10 | 0 |
| வ. நடேச ஆசாரி, உத்தரங்குடி | ... | 0 | 5 | 0 |
| நா. சொக்கலிங்கம் பிள்ளை, நீடூர் | ... | 0 | 2 | 6 |
| செ. வைத்தியலிங்க படையாட்சி, புளியந்துறை | ... | 0 | 2 | 6 |
| ப. ரெங்கசாமி படையாட்சி, திருவெண்காடு | ... | 0 | 5 | 0 |
| முத்துகுமாரசாமி படையாட்சி, சேத்தூர் | ... | 0 | 10 | 0 |
| இ. கிருஷ்ணசாமி படையாட்சி, வைத்தீசுவரன் கோயில் | ... | 0 | 5 | 0 |
| எஸ். கோவிந்தசாமி நாயடு, கிம்பர்லி | ... | 0 | 10 | 0 |
| நா. வீராசாமி படையாட்சி, நயனிபுரம் | ... | 0 | 7 | 6 |
| ரா. ஆறுமுக படையாட்சி, மேலக்கட்டளை | ... | 0 | 5 | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| க. பக்கிரி முதலியார், சீர்காழி | ... | 0 | 5 | 0 |
| ச. வீரப்பிள்ளை, பத்தம் | ... | 0 | 5 | 0 |
| வீ. சிவக்கொழுந்து படையாட்சி, அன்னப்பன்பேட்டை | ... | 0 | 2 | 6 |
| சு. கிருஷ்ணசாமி முதலியார், திருமருகல் | ... | 0 | 5 | 0 |
| வி. கலிய முதலியார், செம்பொனார் கோயில் | ... | 0 | 5 | 0 |
| சு. கோவிந்தசாமி முதலியார், மேலப்பாதி | ... | 0 | 5 | 0 |
| நா. சொக்கலிங்க முதலியார், திருச்செம்பொன்பள்ளி | ... | 0 | 3 | 0 |
| ச. சரவண முதலியார், ,, | ... | 0 | 2 | 6 |
| ச. கந்தசாமி படையாட்சி, தில்லையாடி | ... | 0 | 1 | 0 |
| பொன்னுசாமி படையாட்சி, கிம்பர்லி | ... | 0 | 2 | 6 |
| சு. மாரிமுத்து படையாட்சி, ,, | ... | 0 | 2 | 6 |
| க. வைத்தியலிங்க படையாட்சி, மேலைச்சாலை | ... | 0 | 11 | 0 |
| ம. முத்துசாமி படையாட்சி, கிம்பர்லி | ... | 0 | 1 | 0 |
| நா. இராமசாமி செட்டியார், தரங்கம்பாடி | ... | 0 | 2 | 0 |
| மலைப்பெருமாள் பத்தர், தில்லையாடி | ... | 0 | 2 | 0 |
| சா. ஆதிமூல படையாட்சி, கிம்பர்லி | ... | 0 | 2 | 0 |
| எச். கே. நாயுடு, ,, | | 0 | 2 | 0 |
| க. வெங்கடாசல ராஜு, சீர்காழி | ... | 2 | 13 | 4 |
| க. பக்கிரி படையாட்சி, | ... | 0 | 1 | 0 |
| ந. பெருமாள்பிள்ளை, வாழ்க்கை | ... | 0 | 1 | 0 |
| க. சின்னத்தம்பி பிள்ளை, நல்லாடை | ... | 0 | 1 | 0 |
| கொ. பக்கிரி முதலியார், மேலப்பாதை | ... | 0 | 1 | 0 |
| எஸ். கே. சொக்கலிங்க பண்டிதன், பிறையார் | ... | 1 | 0 | 0 |
| கே. சுப்பிரமணிய முதலியார், திருமலைராஜன்பட்டணம் | | 0 | 10 | 0 |
| பி. எல். செட்டி, சாத்தங்குடி | | 0 | 2 | 6 |
| குமரப்பிள்ளை, ,, | ... | 0 | 5 | 0 |
| சி. இரகுநாத படையாச்சி, மாயவரம் | ... | 1 | 10 | 0 |
| த. வேதியப் பிள்ளை, தில்லையாடி | ... | 6 | 14 | 0 |
| ஆக மொத்தம் ... ப. | | 73 | 14 | 1 |

பிரம்பூர், சென்னை. பிங்கள ௵.
சித்திரை ௴ 17 ௳.